**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org


தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை



# திரு.வி.க. வாழ்வும் தொண்டும்

சக்திதாசன் சுப்பிரமணியன்

# திரு. வி. க.
# வாழ்வும் தொண்டும்

சக்திதாசன் சுப்பிரமணியன்

பாரி நிலையம்
184, பிராட்வே · சென்னை - 600108

முதற்பதிப்பு : செப்டம்பர், 1992
இரண்டாம் பதிப்பு : ஜூன், 1990
மூன்றாம் பதிப்பு : ஜூலை, 1990
நான்காம் பதிப்பு : டிசம்பர், 1990
ஐந்தாம் பதிப்பு : 1991
ஆறாம் பதிப்பு : 1992
ஏழாம் பதிப்பு : 1993
எட்டாம் பதிப்பு: 1994
ஒன்பதாம் பதிப்பு 1994
பத்தாம் பதிப்பு : 1995
உரிமை ஆசிரியருக்கு

விலை: ரூ. 20.00

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ்,
7–B, கொடிமரத் தெரு, சென்னை–13.

# முன்னுரை

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்திரண்டாம் ஆண்டு. திருவையாற்று அரசர் கல்லூரியிலே தமிழ் வித்துவான் படித்துக்கொண்டிருந்தேன் நான்.

எங்கள் கல்லூரி மாணவர் பலரும் சேர்ந்து ஒரு கழகம் அமைத்திருந்தனர். அக் கழகத்தின் பெயர் திருவள்ளுவர் கழகம் என்பது. அதன் அமைச்சராக விளங்கியவர் சிவகுருநாதன் என்பவர்.

திருவள்ளுவர் கழகத்திலே தமிழ் நூல்கள் பல இருந்தன. அந்நூல்கள், மாணவர்க்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. ஓய்வு நேரங்களிலே அந்நூல்களைப் படிக்கலாம். படித்துப் பயன் பெறலாம்; இக்கருத்துக் கொண்டே அந்நூல்கள் அங்கு வைக்கப்பட்டு இருந்தன.

ஒரு நாள் திருவள்ளுவர் கழகத்திலே இருந்த நூல்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். என்னைக் கவர்ந்தது ஒரு நூல். அந்நூலின் பெயர் "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்பது. அந்நூலை எழுதியவர் யார் என்று நோக்கினேன். 'திருவாரூர் வி. கல்யாண சுந்தரன்' என்றிருக்கக் கண்டேன்.

நூலை எடுத்தேன்; பக்கங்களைப் புரட்டினேன். அதில் தோய்ந்தேன்; மூழ்கினேன்; முங்கினேன்; ஆழ்ந்தேன்; அமிழ்ந்தேன்.

அந்நூல் என்னைக் கவர்ந்ததன் காரணம் என்ன? காரணம் சூழ்நிலை என்பேன். சூழ்நிலை எவ்வாறு இருந்தது?

விடுதலை வேகம் எங்கும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. உப்புப் போராட்டம் ஓய்ந்து விட்டது. கள்ளுக் கடை மறியல் ஒருபுறம் நடந்துகொண்டிருந்தது.

கோயில் நுழைவு வேண்டி உண்ணாவிரதம். தீண்டாமை ஒழிப்புப் போராட்டம். இவ்வாறு எங்கும் போராட்ட மேகங்கள் இடித்தன; சூழ்றின; முழங்கின.

மகாத்மா காந்தி தென்னாடு நோக்கினார். காந்திய மின்சக்தி எங்கும் பாய்ந்தது. எழுச்சி! எழுச்சி! எழுச்சி! வேகம்! வேகம்! வேகம்! எழுச்சியும் வேகமும் என் செய்தன? இளைஞர் உலகை ஆட்கொண்டன. இளைஞர் உலகை ஆட்கொண்ட அவை என்னை மட்டும் சும்மா விடுமோ? வேகம் என்னையும் ஆட்கொண்டது. எழுச்சி என்னையும் பற்றியது.

விளைவு என்ன? மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலைக் கண்ட உடனே சிக்கெனப் பிடித்தேன்.

அந்நூல் என்னைப் பெரிதும் கவர்ந்தது. நூல் மட்டுமா கவர்ந்தது? நூலாசிரியரும் கவர்ந்தார். அவரைப் பற்றி அறிய விரும்பினேன்.

நண்பர் சிவகுருநாதன் பெண்ணாகடத்தைச் சேர்ந்தவர். பெண்ணாகடம் தென் ஆர்க்காடு ஜில்லாவில் உள்ளது. பெண்ணாகடத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்று நடத்தி வந்தார் சிவகுருநாதன். கடந்தைத் தமிழ்ச் சங்கம் என்பது அச்சங்கத்தின் பெயர்.

சங்கத்தின் வாயிலாக அவர் திரு. வி. க.வுடன் தொடர்பு கொண்டிருந்தார். எனவே திரு. வி. க.வைப்பற்றி ஓரளவு அறிந்திருந்தார். அவரிடம் திரு. வி. க.வைப் பற்றிக் கேட்டு அறிந்து கொண்டேன். திரு. வி. க.வைக் காணும் வேட்கை கொண்டேன்.

"திரு. வி. க.வைக் காணல் வேண்டும். அவர்தம் பத்திரிகையில் எழுதல் வேண்டும். நானும் பத்திரிகை ஆசிரியனாதல் வேண்டும். நூல்கள் எழுதல் வேண்டும் என்று எண்ணியது என் மனம்.

மாலை நேரத்திலே காவிரி ஆற்றின் படிக்கட்டுகளிலே அமர்ந்துகொள்வேன். நீரில் கால்களைத் தொங்கவிடுவேன். சுழித்துச் சுழித்து ஓடும் காவிரி நீர். அந்த ஓட்டத்துக்கு ஏற்ப எனது மனக்கோட்டையும் பறக்கும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து ஐந்தாம் ஆண்டு. 'சுதந்திரச் சங்கு' என்ற பத்திரிகையிலே உதவி ஆசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பும் பெற்றேன்.



'சுதந்திரச் சங்கு' என்ற பெயர் இப்போது பலருக்குப் புதிதாகத் தோன்றும். ஆனால், மகாத்மா காந்தி தலைமையில் நடந்த உப்புப் போரின்போது 'சுதந்திரச் சங்கு' பெருத்த தொண்டாற்றியது. விடுதலைப் போர் முரசாக முழங்கியது; போர்ச் சங்காக முழங்கியது. வாரம் மும்முறை; சிறிய அளவு; பக்கங்கள் சிலவே. விலை காலணா. அந்தக் காலத்தில் அறுபதாயிரம் பிரதிகள் செலவாயின.

அப்பத்திரிகை வெளியிட்டவர் சங்கு கணேசன் எனும் பெயர்கொண்ட பரம தியாகி. அடக்குமுறைச் சட்டத்துக்கு தமது ஆசிரியர் கூட்டத்தில் என்னையும் சேர்த்துக் கொண்டார்.

அப்பத்திரிகையின் செயலகம் திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலையில் இருந்தது. மாலை நேரத்தில் தேசத் தியாகிகள் அங்கு பலர் வருவர். தமது அநுபவங்களைக் கூறுவர். கேட்போருக்கு விருந்தாகும்.

ஒரு நாள் பெரியவர் வருவர் வந்தார். பத்திரிகைத் துறையில் பழகியவர். திரு. வி. க.வை நன்கு அறிந்தவர்.

"இளைஞர் ஒருவரை திரு. வி. க. தேடுகிறார். அவ் விளைஞர் ஆங்கிலம் அறிந்தவராயிருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யும் திறமை பெற்றிருத்தல் வேண்டும். பிழையின்றித் தமிழ் எழுத அறிந்திருக்க வேண்டும். தேசிய உள்ளம் படைத்திருக்க வேண்டும். இத்தகைய ஒருவரைத் தம் பத்திரிகைக்குத் தேடுகிறார்" என்றார் அவர்.

அப்பெரியவர் எனக்குப் புதியரல்லர். என்னை நன்கு அறிந்தவரே. பலமுறை நான் அவரைக் கண்டிருக்கிறேன். பேசியுமிருக்கிறேன்.

"என்னை திரு. வி. க.விடம் அழைத்துச் செல்லுங்கள்" என்று அவரிடம் விண்ணப்பம் செய்தேன்.

"உன்னைப் பற்றி அவரிடம் சொல்லிவிட்டேன். நாளையே நீ சென்று அவரைப் பார்" என்றார் பெரியவர்.

நான் மிக மகிழ்ந்தேன். பெரியவர் கூறியவாறே மறுநாள் சாது அச்சுக்கூடம் சென்றேன். திரு. வி. க.வைக் கண்டேன். மறுநாள் வருமாறு அவர் கூறினார். மறுநாள் குறிப்பிட்ட நேரம் சென்றேன்; கண்டேன். சிறிது நேரம் பேசிவிட்டு மீண்டும் வரச் சொன்னார்.

குறிப்பிட்ட நாள் குறிப்பிட்ட நேரம் மீண்டும் சென்றேன். திரு. வி. க., உலகநாத முதலியார் இருவரும் இருந்தனர். "வா தம்பி" என்று அழைத்தனர்.

"உனக்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பது என்பது பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். இப்போது அதிகச் சம்பளம் கொடுக்க முடியாது. உனக்கு எவ்வளவு வேண்டுமோ, கேள்" என்றார் திரு. வி. க.

'நும் கடன் அடியேனைத் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று பதில் அளித்தேன்,

எனது பதில் கேட்டு திரு வி. க. மகிழ்ந்தார்; உலகநாத முதலியாரைப் பார்த்தார். உலகநாதர் உள்ளே சென்றார். பஞ்சாங்கம் எடுத்து வந்தார். எனது பெயர், நட்சத்திரம், ராசி முதலியவற்றைக் கேட்டு அறிந்துகொண்டார். பஞ்சாங்கத்தைப் பார்த்து ஒரு நல்ல நாள் குறிப்பிட்டார். அன்று வரச் சொன்னார். அவ்வாறே வருவதாகக் கூறி, விடைபெற்று எனது வீடு திரும்பினேன்.

குறிப்பிட்ட நல்ல நாளன்று வேலைக்குச் சென்றேன். திரு. வி. க., உலகநாத முதலியார் ஆகிய இருவரும் இருந்தனர். இருவரையும் வணங்கினேன். "வா தம்பி. இரு" என்றனர். அங்கிருந்த பெஞ்சின்மீது அமர்ந்தேன்.

சிறுவன் ஒருவனை அழைத்தார் உலகநாத முதலியார். ஆபீஸ் அறையைத் திறக்கச் சொன்னார். அறை திறக்கப் பட்டது. அவ்வறை வெள்ளை பூசப்பட்டிருந்தது. அறை நடுவே மேசை ஒன்று போடப்பட்டிருந்தது. மேசையின் முன்னும் பின்னும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மற்றொரு மேசைமீது பைண்டு செய்யப்பட்ட 'நவசக்தி' இருந்தது.



குறிப்பிட்ட நல்ல நேரத்தில் என்னை அழைத்துக் கொண்டு அந்த அறைக்குள் சென்றார் திரு. வி. க. என்னை ஒரு நாற்காலியில் அமரச் சொன்னார். தாம் மற்றொரு நாற்காலியில் அமர்ந்தார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து ஆறாம் ஆண்டு சூன் மாதத்திலே திரு.வி.க வின் உதவியாசிரியனாக வேலை தொடங்கினேன். அன்று முதல் அவரது இறுதி வரை நான் வேறு எங்கும் வேலை தேடிச் சென்றேன் அல்லன். ஓராண்டா? இரண்டு ஆண்டுகளா? இல்லை. பதினாறு ஆண்டுகள் அவருடன் நெருங்கிப் பழகும் பேறு பெற்றேன்.

"தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்" என்பது கம்பரின் வாக்கு. திரு.வி.க. என்னைத் "தந்தையினும் களிகூரத் தழுவினார்." உண்மை; வெற்றுரையன்று.

என்னைக் காணுங்கால் அவர் முகம் மலரும்; முகத்தில் நகை அரும்பும்; மகிழ்ச்சி பொங்கும். இனிய சொல் பகர்வார். அன்புடன் உரையாடுவார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து எட்டாம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே உலகநாத முதலியார் அவர்களின் அருமை மகன் இவ்வுலகு நீத்தான். அது போது "நவசக்தி"யிலே தலையங்கம் ஒன்று வெளியிட்டார் திரு.வி.க. 'ஒரு குலத்துக்கு ஒரு மைந்தன்' என்ற தலைப்புடன் அத் தலையங்கக் கட்டுரை வெளிவந்தது. அதிலே அவர் குறிப்பிடுகிறார்:

* "எங்கள் குலத்துக்கு ஒரு மைந்தனாய், பின்னாளில் 'நவசக்தி'யை அன்புடனேற்றுத் தொண்டாற்ற வல்லனாய், அதற்குரிய கல்வி, அறிவு' திறமை முதலியன வாய்க்கப் பெற்றவனாய், எனக்கினியனாய்ச் செங்குருத்தென வளர்ந்து வந்த எனது கண்மணி பாலசுப்பிரமணியன் சென்ற செவ்வாய்க் கிழமை இரவு 11 மணிக்கு

---

* தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு.

இவ்வுலக வாழ்வு நீத்ததை நேயர்கட்கு ஆறாத்துயருடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குப் பத்தாண்டுக்கு முன்னர் என் மனைவி மக்களை அழைத்து என்னைத் தன்னந் தனியனாக்கிய, ஆண்டவன், தமையன் வழிப்போந்து எனக்குப் பல வழியினும் ஆறுதலளித்து வந்த ஒரு மைந்தனையும் இப்பொழுது அழைத்துக் கொண்டான். எச் செல்வமும் பெறாத எளியேனுக்குத் தமையன் வழிக் கிடைத்த சேய்ச் செல்வமும் போயிற்று.''

இறந்த அந்தப் பாலசுப்பிரமணியனே மீண்டும் பிறந்து வந்து, சுப்பரமணியன் எனும் அப்பெயரே தாங்கி 'நவசக்தி'யை நடாத்த வந்து விட்டான் என்று எண்ணியது அவரது திருவுள்ளம். எனவே என்னைக் கண்ணுறும் போதெல்லாம் மகிழ்ச்சி பொங்கினார்.

தொடக்கத்தில் அவரை நான் நன்கு அறிந்தேன் அல்லன். அவர்தம் உள்ளக் கருத்தை உணர்ந்தேன் அல்லன். அவரிடம் நான் சீறிய நாட்கள் பல. வெகுண்ட நாட்களும் பல. ஆனால் அவர் என்மீது சீறினார் அல்லர். வெகுண்டார் அல்லர். அவரோ அமைதியாகவே இருப்பார். அன்புரையே பகர்வார்.

ஒருமுறை நான் 'நவசக்தி' ஊழியத்தினின்றும் விலகி விட முடிவு செய்தேன். அதற்குக் காரணம் எனது சீற்றமே. எனது முடிவை திரு.வி.க.வுக்குத் தெரிவித்தேன். எப்படித் தெரிவித்தேன்? ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்தேன்.

கடிதங் கண்டார் அவர்; மாடியினின்றும் இறங்கி வந்தார். என் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். என்னை நோக்கினார்.

உனது கடிதங் கண்டேன். நீ எங்கு செல்ல விரும்புகிறாய்? 'நவசக்தி'யில் நீ ஊழியனாக இருப்பதாக எண்ணாதே. நான் 'நவசக்தி' உரிமையாளன் என்றும் எண்ணாதே. 'நவசக்தி' உன்னுடையது. நீயே அதை நடத்துபவன் என்று நினை'' என்றார்.

அவரது முகத்தில் அமைதி நிலவியது. அவரது குரலில் தந்தையன்பு தொனித்தது. அவரது கண்கள் எனது உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. அன்பால் என்னைப் பிணைத்தார் அவர்.

நான் மாறினேன். மனம் மாறினேன். விலகும் எண்ணம் பறந்தோடியது.



நாட்கள் சென்றன. பிரிக்க இயலாத பாசம் எங்கள் இருவரையும் பிணைத்தது. என்னை விட்டுப் பிரிய மனமில்லாதவர் ஆனார் அவர். நானும் அவரைப் பிரியும் மனமில்லாதவன் ஆனேன்.

* * *

அம்மையார் ஒருவர் சமூக சீர்திருத்தத் தொண்டர்! அடிக்கடி வருவார் திரு.வி.க.வைக் காணும் பொருட்டு. அவரைப் பற்றித் தவறான கருத்துக் கொண்டிருந்தேன் நான். எனது கருத்தை நான் ஒளித்தேனல்லன். திரு.வி.க. விடமே தெரிவித்தேன். திரு.வி.க. ஏதும் பதில் கூறினார் அல்லர். புன்முறுவல் பூத்தார்.

மார்கழி மாதத்திலே ஒரு நாள் விடியற்காலம். திரு.வி.க.வை அழைத்துச் செல்ல வந்து வாயிலில் நின்றது ஒரு கார். காரினின்றும் இறங்கி வந்தனர் மூவர். மூவருள் ஒருவர் அம்மையார். அவரே நான் குறிப்பிட்ட அம்மையார்.

மற்ற இருவரும் சைவப் பிரசங்கிகள். கழுத்திலே உருத்திராட்சம். இடுப்பிலே பட்டு. உடம்பு முழுவதும் பட்டை பட்டையாகத் திருநீறு.

நால்வர் பிரயாணம் செய்யக்கூடிய இடத்தை இவ் விருவரின் உடல் அடைத்துவிட்டது. திரு.வி.க.வுக்கும் அம்மையாருக்கும் நெருங்கி உட்காரத் தக்க இடமே இருந்தது. திரு.வி.க.வை அழைத்துச் சென்றார் அம்மையார். காரில் ஏறி அமர்ந்தார். கார் புறப்பட்டது.

சென்னையினின்றும் நூறு மைல் அப்பால் உள்ள ஓர் இடம். அங்கே ஒரு நிகழ்ச்சி. அந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் பொருட்டே இந்நால்வரும் சென்றனர்.

மார்கழி மாதம். விடியற் கால நேரத்திலே காரில் வேகமாகச் சென்றால் எப்படியிருக்கும்?

குளிர்! குளிர்! தாங்க முடியாத குளிர்!

சைவப் பிரசங்கிகள் என்ன செய்தார்கள்? கம்பளிச் சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டார்கள்.

பாவம் திரு.வி.க.! கதர் ஜிப்பாவும், மேல் குட்டையும் அன்றி வேறு எதுவும் இல்லாத திரு.வி.க. குளிர் தாங்க முடியாமல் நடுங்கினார். கழுத்திலே சுற்றிய குட்டையால் தலையையும் காதையும் மூடிக்கொண்டார். அப்படியும் குளிர் தாங்க முடியவில்லை. நடுங்கினார். பார்த்தார் அம்மையார். தாம் போட்டிருந்த காஷ்மீர் சால்வையை எடுத்தார். திரு.வி.க.வுக்குப் போர்த்தினார்.

எல்லாரையும் வாட்டிய குளிர் அம்மையாரை மட்டும் வாட்டாது விடுமோ? வாட்டியது; வாட்டியது. 'நெடுநல் வாடை'யென வாட்டியது. அம்மையார் குளிரால் நடுங்கினார். தாம் உடுத்தியிருந்த பட்டுச் சேலையால் காதையும் கழுத்தையும் மூடிக்கொண்டார்.

குறிப்பிட்ட இடம் சேர்ந்தார்கள். எந்த நிகழ்ச்சியின் பொருட்டுச் சென்றார்களோ அந்த நிகழ்ச்சியை முடித்துச் சென்னை திரும்பினார்கள். மறுநாள் எனது அறையில் அமர்ந்து வேலை செய்துகொண்டிருந்தேன் நான்;

உள்ளே வந்தார் திரு.வி.க. நாற்காலியில் உட்கார்ந்தார்.

"நீ என்ன சொன்னாய்?" என்று உறுமினார்.

நான் விழித்தேன். "அந்தப் பெண்மணியைப் பற்றிக் கூறினாயே! அது எவ்வளவு தவறான கருத்து?" என்று சொன்னார்.

இந்த நிகழ்ச்சியைக் கூறினார்.

"சைவம் எங்கிருக்கிறது? உருத்தராட்சத்திலா? திருநீற்றுப் பட்டையிலா?" என்று வினவினார்.

"அன்பு! அன்பு! அன்பே சைவம்!" என்றார்.

"அம்மையார் அன்பு மயமானவர். அன்பு ஊற்று. அவரே பெருஞ் சைவர்" என்றார்.

நான் மனம் மாறினேன். அம்மையாரால் பெரு மதிப்புக்கொண்டேன்.

அம்வம்மையார் யார்? டாக்டர் தருமாம்பாள்.

* * *



'நவசக்தி' அலுவலகம் இராயப்பேட்டையில் இருந்த போது காலை பத்து மணிக்குத்தான் நான் வேலைக்குச் செல்வேன்.

பிற்பகல் இரண்டு மணிக்குள் அன்றைய வேலையை முடித்து விடுவேன். அச்சுக் கோப்பதற்குக் கொடுக்க வேண்டுவனவற்றை யெல்லாம் அச்சுக்கூட மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடுவேன்.

வியாழக் கிழமை காலை எட்டு மணிக்கே காரியாலயத்தில் இருப்பேன். காரணம் என்ன? வெள்ளிக்கிழமை தோறும் தபாலில் பத்திரிகையை அனுப்பிடல் வேண்டும்.

வியாழக் கிழமை பகல் மூன்று மணிக்குள் அச்சு யந்திர வேலை முடிதல் வேண்டும். அப்போதுதான் வெள்ளிக் கிழமை தபாலில் பத்திரிகை சேரும்.

வியாழக் கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு எனது வேலை முடிந்துவிடும்.

'சாப்பிட்டு வா' என்று கூறி, இரண்டு ரூபாய் கொடுப்பார் பெரியவர்.

திரு. வி. உலகநாத முதலியாரைப் 'பெரியவர்' என்றே நாங்கள் அழைப்போம். திரு.வி.க.வைச் 'சின்னவர்' என்போம். அந்த இரண்டு ரூபாயை வாங்கிக்கொண்டு சாப்பாடு ஒட்டலுக்குச் செல்வேன்.

வெஸ்லி கல்லூரி எதிரில் 'உட்லண்ட்ஸ்' ஒட்டல் இருந்தது. அந்தக் காலத்தில் அந்தப் பகுதியில் அதுவே சிறந்த ஒட்டல்.

சாப்பாடு ஒரு ரூபாய். சாப்பிட்டு விட்டு மீதி ஒரு ரூபாயைக் கொண்டு வந்து பெரியவரிடம் கொடுத்து விடுவேன்.

திரு.வி.க. வருவார்.

"சாப்பிட்டாயா தம்பி?" என்று வினவுவார்.

"சாப்பிட்டேன்" என்பேன். "எங்கே?" என்று கேட்பார்.

அந்த ஒட்டலின் பெயரைச் சொல்வேன்.

"பெரியவர் எவ்வளவு கொடுத்தார்?" என்று கேட்பார்.

"இரண்டு ரூபாய் கொடுத்தார். சாப்பாட்டுச் செலவு ஒரு ரூபாய். மீதி ஒரு ரூபாயைப் பெரியவரிடம் கொடுத்து விட்டேன்" என்று சொல்வேன்.

"ஏன் திருப்பிக் கொடுத்தாய்? சுவீட் வாங்கி நன்கு சாப்பிடக் கூடாதோ?" என்று கேட்பார்.

"ஒரு ரூபாய்ச் சாப்பாடே எனக்கு அதிகம்" என்பேன்.

"நன்றாக நீ சாப்பிட வேண்டும் என்றுதானே இரண்டு ரூபாய் கொடுக்கச் சொன்னேன். நீ ஏன் சாப்பிடாமல் திருப்பிக் கொடுத்தாய்?" என்று என்னைக் கடிந்து கொள்வார்.

நான்தோறும் காலை ஒன்பது மணிக்குச் சுடுசோறு உண்பேன். பிறகு நவசக்தி அலுவலகம் சேர்வேன்.

இடைவேளை உணவுக்காகத் தோசை செய்து கொடுப்பார் எனது தாய். அதைக் கொண்டு வருவேன்.

இடைவேளையில் ஒருநாள் திரு.வி.க. கீழே இறங்கி வந்தார். அப்போது நான் தோசை தின்று கொண்டிருந்தேன்.

"என்ன சாப்பிடுகிறாய்?" என்று கேட்டார் அவர்.

"தோசை" என்றேன் நான்.

"நீ சிறுபிள்ளை. ஏன் தோசை கொண்டு வருகிறாய்? தயிர்ச்சாதம் கொண்டு வந்து சாப்பிடு. அதுதான் உன் உடம்புக்கு நல்லது" என்றார்.

அன்று முதல் தோசை கொண்டு வருவதை நிறுத்தி விட்டேன். தயிர்ச் சாதம் கொண்டுவரத் தொடங்கினேன்.

இது போன்ற நிகழ்ச்சிகள் பல.

நான்தோறும் பகல் மூன்று மணிக்கு மாடியினின்றும் இறங்கி வருவார் திரு.வி.க. வரும்போது அன்றைய தினம் தமக்கு வந்த கடிதங்களையும் கொண்டு வருவார். எனது மேசை எதிரில் உட்கார்ந்து கொள்வார். கடிதங்களுக்குப் பதில் எழுதுமாறு கூறுவார். நான் எழுதுவேன். அவர் சொல்வார். பதில் சுருக்கமாக இருக்கும். எவ்வளவு தேவையோ அவ்வளவு சொற்களே இருக்கும். தேவையற்ற சொற்கள் இரா.



"நலன்; வேண்டுவதும் அஃதே. தாங்கள் குறிப்பிட்ட பணியாற்ற இயலாமை குறித்து வருந்துகிறேன். இம்முறை மன்னிக்க."

இவ்வளவே, அக்கடிதத்தில் இருக்கும்.

வேறு ஒரு கடிதம்.

"உழுவலன்பீர்! தங்கள் முடங்கல். குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட பணியாற்ற ஒருப்படுகிறேன். ஆவன செய்க."

இவ்வளவுக்கு மேல் எக்கடிதத்திலும் காணல் இயலாது.

எழுதிய கடிதங்களை திரு.வி.க.வின் முன் வைப்பேன். அவற்றை மீண்டும் ஒரு முறை படிப்பார்.

"உன் கையெழுத்து நன்றாயிருக்கிறது. என்கையெழுத்து நன்றாயிராது" என்பார்.

'திரு.வி.க.' என்று சுருக்கமாகக் கையெழுத்திடுவார்.

பின் அவற்றைத் தாமே எடுத்துக் கொண்டு பெரியவரிடம் செல்வார்.

"பெரியசாமி, இவற்றைத் தபாலில் சேர்த்துவிடு" என்பார். பிறகு என்னிடம் வருவார்.

"வா! தம்பி! போகலாம்" என்பார்.

நான் அவரைப் பின் தொடர்வேன். எலியட்ஸ் ரோடு (தற்போது ராதாகிருஷ்ணன் சாலை) வழியாகக் கடற்கரை நோக்கி நடப்போம். மணலைத் தாண்டிக் கடலோரம் செல்வோம். கடல் நீர் காலை வருட நடப்போம். திருவான்மியூர்வரை நடப்போம்.

இந்த வாழ்க்கை வரலாற்றிலே கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை எல்லாம் எனக்குச் சொல்வார்.

சொல்லிக் கொண்டே நடப்பார் அவர். கேட்டுக் கொண்டே நடப்பேன் நான். இடையிடையே குறுக்குக் கேள்விகளும் கேட்பேன். அவர் பதில் சொல்வார். பேசிக் கொண்டே இருவரும் பாம்பன் சுவாமிகள் சமாதியை அடைவோம்.

அங்கு சிறிது நேரம் இருப்போம் பிறகு இருவருமாக அடையாற்றுக்கு நடந்து வருவோம். பஸ்ஸில் ஏறுவோம். நான் மயிலாப்பூரில் இறங்கி விடுவேன். அவர் இராயப் பேட்டை சேர்வார்.

இவ்விதம் நாள்தோறும் நடப்போம். ஓராண்டா? இரண்டு ஆண்டுகளா? பல ஆண்டுகள். பல ஆண்டுகளில் அவர் எனக்குக் கூறியன பல; பலப்பல திரு வி.க. வாழ்வில் நிகழ்ந்தவற்றை மட்டுமா அவர் கூறினார்? இல்லை; இல்லை. இன்னும் எவ்வளவோ?

எங்கள் உரையாடலில் அரசியல் இடம் பெறும். சீர்திருத்தம் வரும். இலக்கியம் வரும். சமயம் வரும் இன்னும் பல.

மகா மகோபாத்தியாய உ.வே. சுவாமிநாத அய்யரின் சுயசரிதம் வெளிவந்து கொண்டிருந்தது.

"ஐயரவர்கள் தமது வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுகிறார். தாங்களும் தங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதினால் என்ன?" என்று கேட்டேன் நான்.

"அது வேண்டாம் தம்பி" என்றார் அவர்.

"ஏன் வேண்டாம்?" என்று கேட்டேன்.

"தமது வரலாற்றைத் தாமே எழுதுவது நமது முன்னோர் மரபு அன்று" என்றார்.

"முன்னோர் செய்யாதன பல இன்று நாம் செய் கிறோமே. முன்னோர் பத்திரிகை நடத்தினரா?" என்று கேட்டேன்.

அவர் முகத்தில் புன்னகை அரும்பியது. வாய்ப்புக் கிட்டியபோது எல்லாம் அவரை நான் வற்புறுத்தினேன். அவர் தட்டிக் கழித்துக்கொண்டே வந்தார்.

"உங்களுக்குப் பிற்காலம் உங்களைப் பற்றிப் பல பொய்களைக் கூறுவர். தவறான செய்திகளைப் பரப்புவர். அவர்களைப் பொய்ப்பிக்கும் ஆதாரம் ஏதும் இல்லாது போகும்" என்று ஒரு நாள் சீறினேன்.



எனது சீற்றத்தில் தொனித்த உண்மையை அவர் உன்னினார். "வாழ்க்கைக் குறிப்பை" எழுதினார். சுமார் ஆயிரம் பக்கங்களில் எழுதினார்.

யுத்த கால நெருக்கடி. காகிதப் பஞ்சம். எனவே 'வாழ்க்கைக் குறிப்பு' விரிந்த அளவில் வெளிவரவில்லை! விரிந்த அளவில் எழுத அவர் எண்ணியிருந்தவை பல. கால நிலையும் காகிதப் பஞ்சமும் அவர்தம் முயற்சிக்கு இடந்தரவில்லை. இருப்பினும் அவர் காலத்து வரலாற்றினை அறியப் பெருந்துணையாக நிற்கிறது அவர்தம் வாழ்க்கைக் குறிப்பு.

திரு.வி.க. மணி விழாவின்போது அவர்தம் வாழ்க்கை வரலாற்றினை எழுதி வெளியிட எண்ணினேன். "இப்பொழுது வேண்டாம்" என்றார் திரு.வி.க. அவரது விருப்பத்துக்கு மாறாக நடக்க விரும்பினேன் அல்லன்.

அவர் மறைந்து கால் நூறு ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்போது அவரது வாழ்க்கை வரலாற்றினை எழுதல் வேண்டும் என்ற எண்ணம் என்னை உந்தியது; உந்தித் தள்ளியது. எழுதினேன். திரு.வி.க. பிறந்த நூறாவது ஆண்டில் இந்நூல் வெளிவருகிறது. இந்நூலை எழுதுமாறு என்னைத் தூண்டியவர் பாரி நிலைய உரிமையாளர் திரு செல்லப்பன் அவர்கள். அழகாக வெளியிடுபவரும் அவரே. இவருக்கு எனது நன்றி.

திரு.வி.க.வின் முழுப் படத்தையும் காண விரும்புவோர் எனது மற்ற நூலையும் காண்க. 'திரு.வி.க. உள்ளமும் உயர் நூல்களும்' என்பதுவே அந்நூல்.

"எனது புறப்படங்களில் என்னைப் பார்ப்பதைப் பார்க்கிலும் எனது நூற் படங்களில் என்னைப் பார்க்குமாறு அன்பர்களை வேண்டுகிறேன்." (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பக். 898)

சக்திதாசன் சுப்பிரமணியன்

## பொருளடக்கம்


முன்னுரை ... 3

1. ஊரும் பேரும் ... 17
2. துள்ளமும் துடுக்கும் ... 19
3. பள்ளிப் படிப்பும் பிள்ளை விளையாட்டும் ... 25
4. கற்றலும் கேட்டலும் ... 38
5. ஸ்பென்ஸர் கம்பெனியும் வந்தே மாதரமும் ... 43
6. மணவழகனாரும் மணவாழ்வும் ... 50
7. வெஸ்லி கல்லூரியும் தலைமைத் தமிழாசிரியர் பதவியும் ... 55
8. தேசபக்தனும் திரு.வி.க.வும் ... 62
9. நவசக்தியும் திரு.வி.க.வும் ... 71
10. காங்கிரசும் திரு.வி.க.வும் ... 74
11. தொழிலாளர் இயக்கமும் திரு.வி.க.வும் ... 93
12. ஜஸ்டிஸ் கட்சியும் திரு.வி.க.வும் ... 104
13. திராவிடப் பெரியாரும் திரு.வி.க.வும் ... 108
14. பெண் உரிமையும் திரு.வி.க.வும் ... 112
15. சைவமும் திரு.வி.க.வும் ... 118
16. கிறிஸ்துவமும் திரு.வி.க.வும் ... 122
17. சீர்திருத்தமும் திரு.வி.க.வும் ... 125
18. தொண்டும் திரு.வி.க.வும் ... 131
19. நாவன்மையும் திரு.வி.க.வும் ... 133
20. தன்னலங் கருதாமையும் பிறர் நலன் பேணலும் ... 136
21. நோயும் பத்திய உணவும் ... 143
22. பொதுமைப் புரட்சியும் திரு.வி.க.வும் ... 147
23. உடையும் உறக்கமும் ... 149
24. கலந்துரையாடலும் கருத்துரை கூறலும் ... 151
25. மணி விழாவும் மற்றொரு போராட்டமும் ... 155
26. எளிய வாழ்வும் திரு.வி.க.வும் ... 159
27. விவிலியமும் வாழ்வும் ... 161
28. மாலையும் மறைதலும் ... 165
29. முடிவுரை ... 167
30. திரு.வி.க. காலக் கண்ணாடி ... 170


# 1. ஊரும் பேரும்

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்றாம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இருபத்து ஆறாம் தேதி திரு.வி.க. அவர்கள் இந்நிலவுலகில் தோன்றினார்கள்.

திரு.வி.க. அவர்களின் தந்தையார் பெயர் விருத்தாசல முதலியார். தாயார் பெயர் சின்னம்மாள்.

விருத்தாசலனார்க்கு ஆங்கிலம் சுவைக்கவில்லை; தமிழே இனித்தது. இசையும், நாடகமும் அவரை ஈர்த்தன. அவர் இராம நாடகப் புலவர் ஆனார்; இராம நாடக ஆசிரியராகவும் சில காலம் விளங்கினார்; கீர்த்தனை பல இயற்றினார்; தமிழ்ப் பள்ளி ஒன்றும் நடத்தினார்; எனினும் பெரும்பொழுது வாணிபத்தில் ஈடுபடலானார்; சென்னை இராயப்பேட்டையிலே ஓர் அரிசி மண்டி வைத்து வாணிபம் செய்து வந்தார்.

விருத்தாசலனாரின் மனைவியர் இருவர். ஒருவர் பெயர் பச்சையம்மாள்; இன்னும் ஒருவர் பெயர் சின்னம்மாள்.

பச்சையம்மாள் ஈன்ற மக்கள் நால்வர். அவருள் மூவர் ஆண்; ஒருவர் பெண்.

பச்சையம்மாள் நீண்ட காலம் இந்நிலவுலகில் வாழ வில்லை; நோய்வாய்ப்பட்டு இறந்தார். பின்னர் விருத்தா சலனார் சின்னம்மாளை மணம் புரிந்தார்.

சின்னம்மாளின் மணி வயிறு எட்டுக் குழவிகளை ஈன்றது. அவற்றுள் ஐந்தாவது குழவிக்கே உலகநாதன் என்று பெயரிட்டனர் பெற்றோர். ஆறாவது குழந்தைக்குக் கலியாண சுந்தரம் என்று பெயரிட்டனர்.

'ஆறாவது மகன் ஆனை கட்டி வாழ்வான்' என்பது வழக்கு.

இந்த ஆறாவது குழவியே பிற்காலத்தில் தமிழ்க் கடலாக விளங்கியது; தமிழ்த் தென்றலாக வீசியது; தமிழ் ஓவியமாய் மிளிர்ந்தது; நடமாடும் பல்கலைக் கழகமாய்க் காட்சி தந்தது; சமரச சன்மார்க்க மணம் வீசியது; வாய்மையும், தூய்மையும், எளிமையும், தொண்டும் ஓர் உருக் கொண்டாலென்னத் தோன்றியது; திரு.வி.க. எனும் பெயர் பெற்றது.*

'திரு' என்பது திருவாரூரைக் குறிப்பது. 'வி' என்பது விருத்தாசலனாரைக் குறிப்பது. 'க' என்பது கலியாண சுந்தரனாரைக் குறிப்பது. திரு.வி.க. என்ற சுருக்கத்தின் விரிவு இதுவே.

திருவாரூர் என்பது தஞ்சை ஜில்லாவில் உள்ளது. சோழ நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று; சேக்கிழார் பெருமானால் பாடப்பட்டது. பெரியதொரு திருக் கோயிலும், பெரியதொரு திருக்குளமும் கொண்டது.

காவிரி ஆற்றின் நீர் ஒரு கிளையாகச் சென்று இப் பகுதியை வளமாக்குகிறது.

இத்தகைய திருவாரூரே திரு.வி.க.வின் முன்னோர் வாழ்ந்த இடம்.

எனவே தமது முன்னோரின் பிறந்த ஊரை விடாது தமது பெயருடன் சேர்த்துக் கொண்டார் திரு.வி.க.

ஆனால், திரு.வி.க. பிறந்த ஊர் திருவாரூர் அன்று; துள்ளம். துள்ளம் என்பது சென்னை சைதாப்பேட்டைத் தாலூகாவிலே உள்ளதொரு சிற்றூர்; மிக வளமுடையது; ஏழெட்டு வீடுகளைக் கொண்டது.

இந்த ஊருக்குச் சென்று வாணிபம் செய்யத் தொடங்கினார் விருத்தாசலனார்; திரு.வி.க.வின் தந்தை.

இராயப்பேட்டையில் அரிசிமண்டி வைத்து வாணிபம் செய்து வந்த விருத்தாசலனார் ஏன் துள்ளம் சென்றார்?

---

*யான் ஆறாவது பிள்ளை. எனது வலது காலடியின் இறுதியில் ஆறாவது விரல் படைப்பில் அமைந்துள்ளது.
—திரு வி.க. வாழ்க்கைக் குறிப்பு.

## 2. துள்ளமும் துடுக்கும்

குன்றத்தூர் என்பது சென்னைக்குப் பதினைந்து மைல் தொலைவில் உள்ளது. சேக்கிழார் பிறந்த ஊர். இவ்வூர் அணித்தே உள்ளது செம்பரம்பாக்கம் ஏரி. இந்த ஏரியைச் செப்பனிடவேண்டி வந்தது. அப்பணி செய்வான் வேண்டி ஒப்பந்தக்காரர் பலர் முன் வந்தனர். விருத்தாசலனாரும் அவருள் ஒருவர். விருத்தாசலனாரின் ஒப்பந்தமே ஏற்றுக் கொள்ளப்பட்டது. விருத்தாசலனாரும் அப்பணியைச் செய்து வந்தார்.

இராயப்பேட்டையில் நடந்து வந்த அரிசி மண்டி என்ன ஆயிற்று? விருத்தாசலனாரின் முதல் மனைவி பெற்ற மகன் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

செம்பரம்பாக்கம் ஏரி செப்பம் செய்யப்பட்ட பிறகு விருத்தாசலனார் துள்ளம் கிராமத்தில் குடியேறினார். வாணிபம் செய்யத் தொடங்கினார். வாணிபம் வளர்ந்தது; பொருள் சேரத் தொடங்கியது; நிலபுலன்ங்கள் வாங்கப் பட்டன.

இச்சமயத்தில்தான் விருத்தாசலனாருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அம்மகவுக்கு உலகநாதன் என்று பெயரிட்டனர் பெற்றோர். சில ஆண்டுகளுக்குப் பிறகு மற்றோர் ஆண் மகவு பிறந்தது; அம்மகவுக்குக் கலியாண சுந்தரன் என்று பெயரிட்டனர் பெற்றோர். எனினும், இவ்விருவர்தம் வீட்டுச் செல்லப் பெயர், பெரியசாமி, சின்னச்சாமி என்பன.

திரு.வி.க.வின் பாட்டியார் பெயர் கனகம்மாள்; திரு.வி.க.வின் தாயை ஈன்றவர். இவ்வம்மையார்க்கு ஆண்

பிள்ளை ஏதும் பிறக்கவில்லை. எனவே பெரியசாமி, சின்னச்சாமி ஆகிய இருவர் மீதும் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். இவர் துள்ளத்துக்கு அடிக்கடிச் செல்வார்; பேரன்மார்களைக் கண்டு மகிழ்வார். சென்னையிலிருந்து துள்ளம் செல்லும்போதெல்லாம் பல திறப் பொருள்களை வாங்கிச் செல்வார். பொருள் காணும் சின்னச்சாமி தமக்கு விருப்பமானவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு விடுவார்.

அது காரணமாகச் சின்னச்சாமிக்கும் பெரியசாமிக்கும் போர் நிகழும். அது கண்டு பாட்டியார் மகிழ்வார்.

ஒரு முறை பாட்டியார் இரு மணைகள் கொண்டு வந்தார்; பித்தளைப் பூண்களிட்ட அழகிய மணை. பேரன்மார்களுக்கென்றே கொண்டு வந்தார்.

அவற்றுள் ஒன்றைச் சின்னச்சாமி எடுத்துக் கொண்டார்; அது கண்ட பெரியசாமி அஃதே வேண்டும் என்று அதைப் பிடுங்கினார். பெருத்த சண்டை. முடிவில் வெற்றி யாருக்கு? சின்னச்சாமிக்கே.

சின்னச்சாமியின் மணையில் எவரும் அமர்தல் கூடாது. எவரேனும் அமர்தல் கண்டால் அதைச் சின்னச்சாமி பொறுக்கமாட்டார்; அழுவார்; சாப்பிடமாட்டார்.

இவ்வாறு நடந்த பிள்ளைச் சண்டைகள் பல. சண்டை நேரத்தில் தந்தையாரைக் கண்டு விட்டால் பெரியசாமி அஞ்சுவார்; ஓடி ஒளிந்து கொள்வார்; சின்னச்சாமியோ எவர்க்கும் அஞ்சார்; ஓடார்; ஒளியார்.

துள்ளத்தில் ஒரு குளம் இருந்தது. அக்குளத்தில்தான் எல்லாரும் குளிப்பர். விருத்தாசலனார் அக்குளம் சென்று நீராடுவார். சின்னச்சாமியும் உடன் செல்வார். சின்னச்சாமி கரை மீது இருப்பார். ஒருநாள் விருத்தாசலனார் நீரில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தார். வேறு ஒருவர் குளத்தில் இறங்கினார்; நீந்தத் தொடங்கினார். அவ்வாறு



நீந்துதல் கண்டார் சின்னசாமி. தாமும் குளத்தில் இறங்கினார்; கழுத்தளவு நீரில் சென்று விட்டார் நீந்தத் தெரியவில்லை. சிறு குழந்தைக்கு நீச்சல் தெரியுமா?

ஏற்றம் இறைப்போர் இது கண்டனர். 'பையன்! பையன்!' என்று கூவினர். விருத்தாசலனார் ஓடினார்; குழந்தையை எடுத்து அப்புறம் கொண்டு சென்றார்; வீடு சென்ற பின் குழந்தையை நன்கு கடிந்தார். அதன் பிறகு சின்னச்சாமி குளக்கரைப் பக்கம் காலடி வைப்பதே இல்லை. மற்றவர் சென்றாலும் இவர் பின் தங்கி விடுவார்.

அறுந்த காற்றாடி ஒன்று காற்றிலே அசைந்து அசைந்து பறந்து வந்தது. இளைஞர் கூட்டம் ஒன்று அதைத் துரத்தி வந்தது.

விருத்தாசலனார் வீட்டுக் கொல்லையில் உள்ள கொன்றை மரம் ஒன்றில் சிக்கியது அக்காற்றாடி. கொன்றை மரத்தின் மீறி ஏறினர் சிலர்; கிளைகள் முறிந்தன. அது கண்டனர்; மேலே ஏறாது திரும்பினர்.

சின்னச்சாமி அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்; எல்லாரும் சென்றபின் கொன்றை மரத்தின் மீது ஏறினார். சிறு குழந்தையன்றோ! இளம் கிளைகள் முறியவில்லை; தாங்கின. தாவித் தாவி மேலே மேலே ஏறினார். காற்றாடியைப் பற்றிவிட்டார். 'அடா! அடா!' என்றொரு குரல்.

குரல் கேட்டார் சின்னச்சாமி; காற்றாடியை விட்டார்; பிடித்திருந்த கிளையையும் விட்டார்; விழுந்தார் கீழே; ஒரே இரத்தப் பெருக்கு.

முறிந்த கிளைகளில் கூரிய ஒன்று அவர் விலாப்புறத்தில் கிழித்து விட்டது. பல இடங்களில் காயம். தந்தையார் ஓடி வந்தார்; தூக்கினார்; தோளில் சாய்த்துக் கொண்டார். வீட்டினுள் சென்றார்; ஒரு பாயில் கிடத்தினார். மருத்துவர் ஒருவர் வந்தார். பச்சிலை வைத்துக் கட்டினார்.

ஒரே எரிச்சல். தாங்க முடியவில்லை. சின்னச்சாமி கதறினார்; கண்ணீர் பொழிந்தார்; துடித்தார். மருத்துவரும் பிறரும் கைகால்களைக் கெட்டியாகப் பிடித்தனர்.

காய்ச்சிய பால் சிறிது கொடுத்தார் அவர் தம் அன்னையார். சிறிது சிறிதாக எரிச்சல் தணிந்தது. உறங்கினார். சிறிது உறக்கம். மீண்டும் கண் விழித்தல். 'அம்மா! அப்பா!' என்ற கதறல். மீண்டும் உறக்கம். நீண்ட இரவு எப்படியோ சென்றது.

பொழுது விடிந்தது. செய்தி சென்னைக்கு எட்டியது. பாட்டியாரும் பாட்டனாரும் ஓடி வந்தனர்; சின்னச்சாமியைக் கண்டனர்; கண்ணீர் விட்டனர்; துடித்தனர். பத்து நாட்களில் குணம் அடைந்தார் சின்னச்சாமி.

இந்தப் பத்து நாளும் பாட்டியார் தம் பேரனைக் கண்ணின் மணிபோல் காத்தார். நாள்தோறும் திருஷ்டி கழித்தார்.

பத்துநாள் கழித்து எழுந்தார் சின்னச்சாமி. காயங்களின் வடுக்கள் சிறிதுசிறிதாக ஆறின. ஆனால் இடப்பக்கத்துக் கீறல் வடு மட்டும் மறையவில்லை. நிலைத்து நின்றது.

நாம்பல் என்பது ஒரு ஜாகீர் கிராமம். அக்கிராமத்து அமீனா ஒருவர். பெயர் முனுசாமிப் பிள்ளை என்பது. அவருடைய அதிகாரம் சுமார் பத்துக் கிராமங்களில் பரவி இருந்தது. அவர் வரக் கண்டால் எல்லாரும் எழுந்து மரியாதைச்செய்வர். பெண்கள் வீட்டின் உள்ளே சென்று விடுவர். குழந்தைகள் விளையாடுதல் நிறுத்தி வீடு புகுவார்கள்.

அமீனா முனுசாமிப் பிள்ளையும் விருத்தாசல முதலியாரும் நண்பர்கள்.

ஒருநாள் அமீனா முனுசாமிப் பிள்ளையின் வண்டி துள்ளம் வழியே சென்றது.



வண்டி கண்ட பெரியோர் எழுந்து நின்றனர். பெண்கள் வீட்டினுள் சென்றனர்.

குழந்தைகள் விளையாடுதல் ஒழித்தார்கள்; 'அமீனா! அமீனா!' என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினார்கள்.

சின்னச்சாமி ஓடவில்லை. "ஏன் ஓடுகிறீர்கள்? அமீனாவுக்குக் கொம்பா முளைத்திருக்கிறது?" என்று கூவினார்.

சிறுவனின் கூவல் கேட்டார் அமீனா; வண்டி விட்டு இறங்கினார்; சிறுவன் அருகே வந்தார்; கை பற்றினார், 'யார் இந்தப் பையன்?' என்று கேட்டார். 'கடைக்காரர் மகன்' என்றனர் அங்கு நின்ற சிலர்.

செய்தி கேட்டார் விருத்தாசல முதலியார். அமீனா நின்ற பக்கம் ஓடி வந்தார்.

"ஐயா! முதலியாரே! இவன் கெட்டிக்காரன். நன்றாகப் படிக்க வையுங்கள்" என்று கூறிப்போனார் அமீனா.

சுற்றி நின்றவர் வியந்தனர். விருத்தாசலனார் மகிழ்ந்தார். மகனை அழைத்துக் கொண்டு வீடு சேர்ந்தார்; மனைவியை அழைத்தார்; நடந்தன கூறினார். சின்னம்மாள் தமது மகனைக் கட்டி அணைத்தார்.

அதன் பிறகு அமீனா முனுசாமிப்பிள்ளை துள்ளம் வரும் போது விருத்தாசலனார் வீடு சென்று சின்னச்சாமியைப் பார்த்தே செல்வார்.

அமீனாவுக்கு அஞ்சாத சின்னச்சாமி, அப்பு கிராமணிக்கு அஞ்சினார்.

அப்பு கிராமணி என்பவர் பனை மரங்களில் ஏறுவார்; குலைகளை வெட்டித் தள்ளுவார்; ஓலைகளைக் கழிப்பார். அவர் செயல் சின்னச்சாமிக்கு அச்சமூட்டும்.

சின்னச்சாமி ஏதாவது துடுக்குச் செய்தால் 'அப்பு' என்பர் பெற்றோர். அவ்வளவுதான். சின்னச்சாமி ஓடிப் போய் ஒளிந்துகொள்வார்.

துள்ளம் கிராமத்தில் பள்ளிக்கூடம் இல்லை. பள்ளிக் கூடம் பூவிருந்தவல்லியில் உண்டு. அது சிறிது தூரம். குழந்தைகளை அவ்வளவு தொலைவுக்கு அனுப்பப் பெற்றோர் விரும்பினர் அல்லர். எனவே விருத்தாசலனார் வீட்டுத் திண்ணையே பள்ளி ஆயிற்று விருத்தாசலனாரே மக்களுக்குப் போதித்தார். தமிழ் எழுத்துக்களை மணலில் எழுதி எழுதிக் கற்பித்தார். பின்னே அரிச்சுவடி, ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன், உலகநீதி முதலியன முறையே போதிக்கப்பட்டன.

விருத்தாசனாலருக்குச் சிறிது ஆங்கிலமும் தெரியும். மக்களுக்கு ஆங்கிலமும் கற்பித்தார்.

இந்நிலையில் மீண்டும் இராயப்பேட்டைக்கே குடிபுக எண்ணினார் விருத்தாசலனார். பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளியில் சேர்க்க அவர் விரும்பியதே அதற்குக் காரணம்.

இராயப்பேட்டை முத்து முதலித் தெருவிலே உள்ள தொரு வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு அமர்த் தினார்.

## 3. பள்ளிப் படிப்பும் பிள்ளை விளையாட்டும்

**1890** ஆம் ஆண்டிலே விருத்தாசலனார் துள்ளம் விடுத்தார்; இராயப்பேட்டையில் குடும்பத்துடன் குடி புகுந்தார்.

முத்து முதலித் தெருவிலே ஒரு பள்ளி இருந்தது. அதன் பெயர் 'ஆரியன் பிரைமரி பாடசாலை'. பெரியசாமி சின்னச் சாமி ஆகிய இருவரும் அப் பாடசாலையில் சேர்க்கப் பட்டனர். பெரியசாமி நான்காம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டார். சின்னச்சாமி இரண்டாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்று மூன்றாம் வகுப்பில் படிக்கத் தொடங்கினார். அதுபோது கட்டுரைப் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போட்டியில் மூன்றாம் வகுப்பு மாணவரும் நான்காம் வகுப்பு மாணவரும் கலந்து கொண்டனர். போட்டியில் முதன்மையாக நின்றது கலியாண சுந்தரனாரின் கட்டுரையே. எனவே, முதற் பரிசு அவருக்கே அளிக்கப்பட்டது. இராயப்பேட்டை முழுவதும் அச்செய்தி பரவியது. மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று நான்காம் வகுப்பு நண்ணினார்.

'ஆரியன் பிரைமரி' பள்ளியில் பிளவு தோன்றியது; குழப்பம் தலை காட்டியது. கலியாண சுந்தரனாரின் கல்வி தடைப்பட்டது. நான்கு மாதம் வீணில் சென்றது. 1894 ஆம் ஆண்டு வெஸ்லி கல்லூரியில் சேர்ந்தார்; நான்காம் வகுப்பிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்,

அவரது உடல் பருமனாக இருந்தது. கழுத்திலே தசைகள் மடிப்பு விட்டிருந்தன. எனவே, சிறுவர் பலரும் அவரைப் 'பொதுக்கன்' என்று எள்ளி நகையாடினர்.

அவரது சதையைக் குறைக்க எண்ணினார் தந்தையார், மருந்து எண்ணெய் சாப்பிடச் செய்தார்.

அஃது ஒரு சாமியாரின் முறை பற்றியது. பத்தியம்; கடுமையான பத்தியம்.

ஒரு நாள் நண்பர்கள் கொண்டு வந்த உளுந்து வடையைத் தின்றுவிட்டார் கலியாண சுந்தரனார். பத்தியத்தை மறந்து விட்டார். பிறகு பத்திய நினைவு தோன்றியது. என் செய்வது? பெற்றோரிடம் வாய் திறந்தாரல்லர். காரணம் அச்சம்.

உளுந்து வடை என் செய்தது? காலை முடக்கியது பள்ளிச் சென்று திரும்புகையில் கீழே வீழ்ந்தார். வண்டிக் காரர் ஒருவர் அவரைத் தம் வண்டியில் ஏற்றிப் போய் வீட்டில் சேர்த்தார்.

வீடு சேர்ந்த சில மணி நேரத்துக்குள் கையும் முடங்கியது. தமது மகனின் நிலையைக் கண்டார், தந்தையார். மருத்துவர் ஒருவரை அழைத்து வந்தார். அவர் பெயர் அயோத்தி தாஸ் பண்டிதர். இராயப்பேட்டையில் புகழ்ப் பெற்ற நோய் மருத்துவர் அவர். கலியாண சுந்தரனாரின் முடக்கு நோய் தீர்க்கப் பெரும் பாடுபட்டார் அவர். அவரது முயற்சி பயன் அளித்தது. முடக்கு நீங்கியது; கை நிமிர்ந்தது; காலும் நோயாயிற்று. படுக்கைவிட்டு எழுந்தார்கலியாண சுந்தரனார்.

கால் வலிமை பெறவில்லை. நிற்க முடியவில்லை. கீழே விழுந்தார். எழுவதும் விழுவதுமாகச் சின்னாட்கள் சென்றன. பின்னே சுவர் பற்றி மெல்ல அடி எடுத்து வைத்தார். சிறிது தைரியம் ஏற்பட்டது. மெல்ல மெல்லக் கோல் ஊன்றி நடக்கலானார்.



இவ்வளவில் இரண்டு ஆண்டுகள் சென்றன. அவரது பள்ளிப் படிப்பு தடைப்பட்டது.

மீண்டும் பள்ளிச் செல்ல வேண்டிய முயற்சிகள் நடைபெற்றன. அந்நிலையில் விருத்தாசலனார் நோய்வாய்ப் பட்டார்.

விருத்தாசலனார் நோயினின்றும் விடுபட்டபோது அவரது மனைவியார் நோயுற்றார். எழும்பூர் மருத்துவ சாலையில் அவர் சத்திர சிகிச்சை பெற்றார். அவர் நலம் பெற்றதும்; அவரது தந்தையார் இறந்தார்.

விருத்தாசலனாரின் குடும்பம் பலவிதத் தொல்லைகளால் நெருக்குற்றது. அரிசி மண்டி மூடப்பட்டது. தள்ளத்திலிருந்து ஒழுங்காக நெல் வரவில்லை.

இந்நிலையில் கலியாண சுந்தரனார் மீண்டும் பள்ளிச் செல்வது எப்படி? மற்றும் இரண்டு ஆண்டுகள் வீணில் சென்றன.

1898இல் மீண்டும் வெஸ்லி கல்லூரியில் சேர்ந்தார். அவர் விட்ட நான்காவது வகுப்பிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவ்வகுப்பின் ஆசிரியராக விளங்கியவர் தேவதாஸ் என்பவர்; சிறந்த ஆசிரியர்; பிள்ளைகள் மனத்தில் தெளிவாக ஊன்றிப் பதியுமாறு போதிக்கும் திறன் படைத்தவர்.

வகுப்பில் முதன் மாணவராக விளங்கினார் சுந்தரனார். எனவே அவர் சட்டாம்பிள்ளையாக நியமிக்கப் பெற்றார்.

ஆசிரியர் தேவதாசரின் வீட்டுக்கு அடிக்கடிச் செல்வார் கலியாண சுந்தரனார். காரணம் ஆசிரியரின் அன்பு. தமக்கு ஏற்பட்ட ஐயங்களைக் கேட்பார். தெளிவார். தேவதாசரின் மனைவி இலக்கணம் கற்பித்தார். முதன் முதல் தமிழ் இலக்கணத்தில் சுந்தரனார்க்குச் சுவை யூட்டியவர் இவ்வம்மையாரே.

பள்ளிக் கூடத்தில் ஞாயிறு தோறும் வகுப்பு ஒன்று நடைபெறும். பிரின்சிபால், வைஸ் பிரின்பால் முதலிய ஐரோப்பியப் பாதிரிமாரே அவ்வகுப்பு நடத்துவோர்.

கலியாண சுந்தரனார் அவ்வகுப்புக்குச் செல்வார். பல ஆண்டுகள் அவ்வகுப்புக்குச் சென்று பரிசில் பெற்றார். அதனால் ஐரோப்பியப் பாதிரிமாரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.

நான்காம் வகுப்புப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார் கலியாணசுந்தரனார். முதல் பாரம் சென்று அமர்ந்தார். சம்பளமில்லாது கல்வி பயிலும் மாணவர் ஆனார் இவருக்கு வேண்டிய புத்தகங்களை எல்லாம் இவரது பெரிய தந்தையாரின் குமாரர் வாங்கித் தந்தார். எனவே, சுந்தரனார் எவ்வித இடையூறுமின்றிப் படித்தார்.

கலியாண சுந்தரம் மூன்றாம் பாரத்தில் படித்த பொழுது அவ்வகுப்பின் ஆசிரியராக இருந்தவரின் பெயர் டேவிட் தேவதாஸ். அவர் பாதிரியார். இராயப்பேட்டையில் வசித்தார். அவர் வீட்டுக்கு நாள்தோறும் செல்வார் கலியாண சுந்தரம். தேவதாசரின் மனைவியார் கலியாண சுந்தரத்திடம் அன்பு காட்டிவந்தார். அவருக்குப் பூகோளம் போதித்தார். இந்நிலையில் தேவதாசர் திருவள்ளூர் பள்ளித் தலைமை ஆசிரியராக மாற்றப்பட்டார். வேறு ஒருவர், வந்தார்.

போதகாசிரியராக வருவதற்குச் சிறிதும் தகுதியில்லாதவர் அவர். அவரிடம் சந்தேகம் கேட்டால் சீறுவார்.

ஒருமுறை கலியாண சுந்தரத்தின் மீது சீறினார் அந்த ஆசிரியர்.

''நீங்கள் போலீஸ் வேலைக்குத் தகுதியானவர்!'' என்று பதில் கொடுத்தார் கலியாணசுந்தரம். பிள்ளைகள் எல்லாரும் சிரித்தனர்.

நான்காவது பாரத்தைப் பண்ணியபோது அந்தப் 'போலீஸ்' ஆசிரியரே வரக் கண்டார் கலியாண சுந்தரம்; மனம் கொதித்தார். வகுப்பினர் எல்லாரையும் சேர்த்துக் கொண்டு கிளர்ச்சி செய்தார். 'போலீஸ்' ஆசிரியர் போனார்.



வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார் ஒருவர். அவர் பெயர் யாழ்ப்பாணம் நா. கதிரை வேற்பிள்ளை என்பது.

கதிரைவேலர் சிறந்த பேச்சாளர்; தமிழ்க் கடல். அவரது சொற்பொழிவிலே மாணவர் உலகு மயங்கிற்று. அவர் அளித்த காட்சி கலியாண சுந்தரத்தின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

கதிரைவேலருடன் நெருங்கிய உறவு கொண்டார் சுந்தரனார். அவரது சொற்பொழிவு எங்கு நிகழ்ந்தாலும் அங்கு ஓடினார்.

1904ஆம் ஆண்டு. மெட்ரிகுலேஷன் வகுப்பை அடைந்தார் கலியாண சுந்தரம். படிப்பின் மீதிருந்த வேட்கை குறைந்தது. கதிரை வேலர் என்ற காந்தம் இழுத்தது.

கதிரைவேற் பிள்ளை மீது வழக்கு ஒன்று தொடரப்பட்டது. வழக்குத் தொடுக்கப்பட்ட நீதி மன்றம் ஜார்ஜ் டவுன் மாஜிஸ்திரேட் கோர்ட்.

வழக்குத் தொடுத்தவர் இராமலிங்க சுவாமிகள் சார்பினர்.

அதே சமயத்தில் மற்றொரு வழக்கும் எழும்பூர் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்றது. எழும்பூர் வழக்கில் கலியாண சுந்தரனாரும் சாட்சி கூற வேண்டியவர் ஆனார்.

பாதி நாள் பள்ளியிலும் மற்றப் பாதி நாள் கோர்ட்டிலும் கழித்தார் கலியாண சுந்தரம். வழக்கு வேடிக்கையே பெரிதாயிற்று.

செலக்ஷன் பரீட்சை நெருங்கியது. இரண்டு அரை நாள் பரீட்சையில் அமர்ந்து எழுத இயலாத நிலை நேர்ந்தது. சோதனையின் முடிவு என்ன? கலியாண சுந்தரனாரை மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு அனுப்ப மறுத்து விட்டார் பிரின்சிபால்.

''இன்னும் ஓராண்டு படிக்க வேண்டும். சென்னையை விட்டு வேறு எங்காவது போகலாம். மன்னார்குடியிலாவது,

திருவள்ளூரிலாவது இருந்து படிக்கலாம். வேண்டிய வசதி எல்லாம் மிஷன் செய்து கொடுக்கும்'' என்றார் பிரின்சிபால்.

கலியாண சுந்தரனார் இணங்கினார் அல்லர். "ஒரே வகுப்பில் மற்றும் ஓராண்டு படிப்பதைவிடத் தூக்கிட்டுக் கொள்வது மேன்மை'' என்று கூறினார்.

பள்ளிப் படிப்பு முற்றுப் பெற்றது. கலியாண சுந்தரம் பள்ளி விட்ட சில நாளில் அவரது தந்தையார் விருத்தாசல னார் இறந்தார்.

கலியாண சுந்தரனார் சிறுபிள்ளையாக இருந்தபோது ஆடிய விளையாடல் பல. இராயப்பேட்டை சுந்தரேசர் கோயில் எதிரிலே பெரிய திடல் இருந்தது. அத்திடலிலே விளையாடுவார். சில வேளை பெரியபாளையத்தம்மன் கோயிலின் பொட்டலிலேயும் விளையாடுவார். மற்றும் சில வேளை, அட்லன் தோட்டம் சென்று விளையாடுவார். கோலி, புள் முதலிய ஆட்டங்களில் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினார்.

ஒரு நாள், கிருஷ்ணன் என்ற மாணாக்கன் ஒருவனுடன் புள்ளாட்டத்தில் கலந்து கொண்டார் கலியாண சுந்தரனார்; புள்ளை வேகமாக அடித்தார். அப்புள் கிருஷ்ணனின் வலது பக்கத்தில் பட்டது. கிருஷ்ணன் துள்ளித் துள்ளி வீழ்ந்தான். வேறு ஆட்டங்களில் கலந்து கொண்டிருந்த மாணாக்கர் பலர் மொய்த்தனர். கலியாண சுந்தரனாரை அச்சம் கவ்வியது. என்ன விளையுமோ என்று அவர் அஞ்சினார்; நீர் கொண்டு வந்தார்; கிருஷ்ணன் முகத்தில் வார்த்தார். ஒரு மணி நேரம் சென்றது. கிருஷ்ணன் விழித்துப் பார்த்தான். அன்றே, கில்லி விளையாடுவதை விட்டொழித்தார் கலியாண சுந்தரனார்.

பள்ளி நிலையத்தில் உள்ள மரத்தில் பிள்ளைகள் சிலர் ஏறுவர்; இறங்குவர். சாய்ந்துள்ள கிளைகளைப்



பற்றித் தாவித் தாவி ஏறுவர் சிலர். இந்த விளையாட்டின் பெயர் குரங்காட்டம். விளையாட்டில் ஒவ்வொரு போது கலப்பார் கலியாண சுந்தரனார்.

ஒரு நாள், குரங்காட்டம் ஆடிக் கொண்டிருந்த போது, காற்றுப் பலமாக வீசியது. காற்றாடி பிடிக்கச் சென்று, கொன்றை மரத்திலிருந்து கீழ விழுந்ததை எண்ணினார் கலியாண சுந்தரனார். அச்சம் கவ்வியது. மெதுவாகக் கீழே இறங்கினார். குரங்காட்டத்தை அன்றே விட்டொழித்தார்.

கலியாண சுந்தரனார் வசித்த வீட்டுக்கு அருகில் உள்ளது சுந்தரேசுவரர் கோயில். அக்கோவில் திருவிழாக் காலத்தில் சுண்டல் வழங்குவதுண்டு.

சுண்டல் வாங்கும் பொருட்டுப் பெரியவரும் சிறியவரும் ஒருவரை மற்றொருவர் தள்ளிக் கொண்டு முந்துவர்; சுண்டல் வழங்குபவரைச் சுற்றி ஈயென மொய்ப்பர்.

கலியாண சுந்தரனாரோ, அவ்வாறு கூட்டத்தில் சென்று வாங்க மாட்டார்; தனியே ஓரிடத்தில் ஒதுங்கி நிற்பார். சுண்டல் வழங்குபவர் அவரைத் தேடிவந்து கொடுத்தால் வாங்குவார். இன்றேல், சுண்டல் வாங்காமலே வீடு திரும்புவார். அவர் இருக்குமிடம் தேடிவந்து சுண்டல் வழங்கியவர் சிலர். அவருள் குறிக்கத்தக்கவர் மண்டி மன்னாத முதலியார் என்பவர்.

''இவன் சீமானா? இவனுக்கு என்ன தனிச் சுண்டல்?'' என்று சீறுவார் ஒருவர். அவர் நொண்டி.

சில சமயங்களில் நொண்டியாரும் சுண்டல் வழங்குவார்; சிறுவர்களைப் பிடித்துத் தள்ளுவார். 'போ' என்று விரட்டுவார்; மருட்டுவார்.

நொண்டியாரின் இச்செயல் கலியாண சுந்தனார்க்குச் சிறிதும் பிடிக்கவில்லை. நொண்டியாரைத் தண்டிக்க எண்ணினார். நண்பர்களைக் கலந்து யோசித்தார். நொண்டியாருக்கு மணல் அபிஷேகம் செய்வது என்று

முடிவு செய்தார். எல்லாரும் கூடி நொண்டியாருக்கு மணல் அபிஷேகம் செய்தனர்.

சுந்தரேசுவரர் கோயில் முன்னே மணல் கொட்டப் பட்டிருந்தது. அதை வாரிக் கோயிலில் சேர்ப்பதற்கென்று குறிக்கப் பெற்ற ஆட்கள் வரவில்லை. சாயங்காலம் மன்னார் முதலியார் கோயிலுக்கு வந்தார். தாமே மணலை அள்ளிக் கோயிலினுள் கொட்டத் தொடங்கினார். கண்டார் கலியாண சுந்தரனார்; தமது பட்டாளத்தை அழைத்தார். மணல் கோயிலினுள் சேர்ந்தது.

சில நேரம் கோயில் பூசைக்குச் சாமான் துலக்க நேரும். பழம் திருத்த நேரும். அவற்றையெல்லாம் கலியாண சுந்தரனார் மகிழ்ந்து செய்வார்.

அந்நாளில், எல்லா வீடுகளிலும் தண்ணீர்க் குழாய் இருக்கவில்லை. இராயப்பேட்டை முழுவதும் இரண்டே வீடுகளில்தான் தண்ணீர்க் குழாய் இருந்தது. தெருவுக்கு ஒரு குழாய் இருக்கும். வீட்டுக்குத் தேவையான தண்ணீரை இக்குழாயில்தான் பிடித்துக்கொள்ள வேண்டும்.

வீடுகளுக்கு வேண்டிய குழாய் நீரைக் கலியாண சுந்தரனாரும், அவருடைய பட்டாளமும் பிடித்துக் கொண்டு போய்க் கொடுக்கும். கலியாண சுந்தரனார்க்கு இதுவும் ஒரு விளையாட்டே. நீர் சுமக்கும் பணியை அவர் நீண்ட நாள் செய்து வந்தார்.

கலியாண சுந்தரனார் காலையில் எழுவார். பழம் பாடங்களைப் படிப்பார்; புதிய பாடங்களையும் நெட்டிப் பார்ப்பார்; விளங்காதவற்றை இராயப்பேட்டையில் வசித்த ஆசிரியர்மாரிடம் கேட்டுத் தெளிவார்; பின்னே பள்ளியில் அவை போதிக்கப் பெறும்போது பழையன போலக் காண்பார்; எனினும், படிப்பில் கண்ணும் கருத்து மாயிருப்பார். காலையில் மாணவர் சிலர் அவர் வீட்டுக்கு வருவர். அவருடன் தோட்டங்களுக்குச் செல்வார்



கலியாணசுந்தரனார். அந்தக் காலத்தில் இராயப் பேட்டையைச் சூழ்ந்து பல தோட்டங்கள் இருந்தன. ஒவ்வொரு நாள் ஒவ்வொரு தோட்டம் செல்வர். எல்லாரும் பலவாறு பிரிந்து பிரிந்து ஆடுவர்.

கலியாண சுந்தரனார் வாழை அறுப்பதில் கருத்துச் செலுத்துவார்; வாழைப்பூக் கொய்வார்; தண்டு உரித்து எடுப்பார்; அகத்திக் கிளைகளை வெட்டிச் சாய்ப்பார்; கீரைக் காம்புகளைச் சுமையாகக் கட்டுவார்; வெற்றிலை கொய்து கொடுப்பார்; இன்னோரன்ன பல வேலைகளில் ஈடுபடுவார். இது, தோட்ட வேலை செய்வோருக்குப் பேருதவியாயிருக்கும். அவர்கள் மகிழ்வார்கள்.

மகிழ்ச்சியின் அறிகுறியாக அகத்திக் கீரை, வாழைப் பூ, வெற்றிலை முதலியன கொடுப்பார்கள். அவற்றை யெல்லாம் கலியாண சுந்தரனார் தமது நல்லாசிரியர் வீடுகளுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பார்.

பிற்பகலில், கலியாண சுந்தரனார் தமது நண்பர் களுடன் கடற்கரை செல்வார்; 'சடுகுடு' ஆடுவார்; அது முடிந்ததும் கடலாடுவார்; சிற்சில சமயம், ஈர மணலில் சிவலிங்கம் எடுப்பார்; சோல்ஜர் வரக் கண்டால் சிவலிங்கத்தைச் சிதைத்து விடுவார். சோல்ஜர்கள் பூட்ஸ் காலால் சிவலிங்கத்தை உதைப்பார்கள் என்பது அவர் எண்ணம். வீடு திரும்பும்போது பார்த்தசாரதி கோயிலுக் குச் சென்று வணங்கி வருவார்; தவற மாட்டார்.

ஒரு நாள் நண்பர்களுடன் கடலாடினார். அவர் ஓரிடத்தில் நின்று ஆடினார். மற்றவர் மற்றோரிடத்தில் ஆடினர். இரண்டிடத்துக்கும் இடையே ஒரு பள்ளம். அப்பள்ளத்தில் தோழர் ஒருவர் சிக்கினார்; தண்ணீரில் மூழ்கித் தத்தளித்தார். கண்டார் கலியாண சுந்தரனார்; மனம் பதைத்தார். மற்றோரலை வந்து அந்த நண்பரைப்

புரட்டித் தள்ளியது. அவ்வளவில் பாய்ந்தார் கலியாண சுந்தரனார்; தோழரின் முடி பற்றிக் கரையில் சேர்த்தார்.

தோழருக்குத் தெளிவு ஏற்பட அரைமணி நேரம் ஆயிற்று. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, கலியாண சுந்தரனார் கடலில் இறங்குவது ஒழித்தார்; கடலாடல் விடுத்தார்; கடற்கரையில் நின்று நீலப்பரப்பில் கருத்துச் செலுத்தி மகிழத் தொடங்கினார்.

இராயப்பேட்டையில் மற்களங்கள் பல இருந்தன. அவற்றுள் ஒன்று, வடிவேல் முதலியார் மற்களம். அங்கே ஓர் அரிய வித்தை போதிக்கப்படும். அதாவது, கத்தி சுழற்றல். ஒருவர் அண்ணாந்து படுப்பார். அவரது கைகள், நெற்றி, மார்பு முதலியவற்றின் மீது காய்கள் வைக்கப் படும். என்ன காய்? வாழைக்காய் புடலங்காய் முதலியன. ஒருவர் கூரிய பட்டாக் கத்தி சுழற்றி வருவார். அண்ணாந்து படுத்திருப்பவரின் கை ஒன்றின் மீதுள்ள காயை வெட்டுவார்; மீண்டும் ஒருமுறை சுழற்றி வருவார்; இன்னொரு கைக்காயை வெட்டுவார்; மற்றும் ஒருமுறை கத்தியைச் சுழற்றி வருவார்; நெற்றியில் உள்ள காயை வெட்டுவார். மற்றும் ஒரு முறை மார்பில் உள்ள காயை வெட்டுவார்.

இவ்வாறு கத்தி சுழற்றிக் காய் வெட்டும் வித்தை கலியாண சுந்தரனாரைக் கவர்ந்தது. தாமும் அது கற்க விரும்பினார். முதல் முதல் மரக் கத்தியில் பயின்றார். பின்னர், கூரிய பட்டாக் கத்திப் பயிற்சியில் இறங்கினார். காயை வெட்டும்போது அச்சம் தோன்றியது. அவ்வளவில் கத்தி சுழற்றலை விட்டார்.

மற்களத்தின் அருகே தென்னந்தோப்பு ஒன்று இருந்தது. அத்தோப்பிலே பெரியதொரு கிணறு இருந்தது. அக் கிணற்றில் மல்லர் பலர் குதித்து நீந்துவர். தவளை நீச்சு, காக்கை நீச்சு முதலிய பலவகை நீந்தல் நிகழும். வடிவேல் முதலியார் தண்ணீரில் மிதப்பார். சூழ்ந்து நின்று பலர் வேடிக்கை பார்ப்பர்.



நீச்சல் பித்து கலியாண சுந்தரனாரையும் பற்றியது. வடிவேல் முதலியாரிடம் தமது பித்தைத் தெரிவித்தார். கலியாண சுந்தரனாரைப் பிடித்துக் கிணற்றில் தள்ளி விட்டார் வடிவேல் முதலியார். அவர் மூழ்கி எழும்பிய வேளையில், ஒருவர் வந்து அவரைப் பற்றினார். தாம்புக் கயிறு கொண்டு இடுப்பிலே கட்டிப் பிடித்துக்கொண்டு கலியாண சுந்தரனாரை நீந்த விடுத்தார்.

நீந்தக் கற்பிக்கும் முறை இதுவாம். இவ்வாறு கலியாணசுந்தரனார் நீந்தப் பழகுதலை அறிந்தார் அவரது தந்தையார்; பலவாறு ஏசினார்; கடிந்தார். அவ்வளவில் கலியாண சுந்தரனாரின் நீச்சல் பயிற்சி நின்று போயிற்று.

பெரியபாளையத்தம்மன் கோயில் அருகே ஒவ்வொரு சமயம் பிச்சைக்காரர்கள் கூட்டம் திரளும். அவருள் முடவர் இருப்பர்; குருடர் இருப்பர்; பிணியாளரும் இருப்பர். இளம் பிள்ளைகள் ஒன்று சேருவார்கள். வீடு தோறும் செல்வார்கள்; தர்மச் சோறு பிச்சை எடுத்து வருவார்கள்; கோயில் அருகே குழுமியிருக்கும் பிச்சைக்காரர் களுக்குக் கொடுப்பார்கள்.

அவர்களுடன் சேர்ந்து தர்மச் சோறு எடுத்து வர விரும்பினார் கலியாண சுந்தரனார். ஆனால், மானம் மறித்தது. ஒரு நாள் முடவர் ஒருவரைக் கண்டதும் அவரது மானம் பறந்தது. மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டார். தெருத் தெருவாகச் சென்றார். 'தர்மச் சோறு அம்மா! தர்மச்சோறு!' என்று பாடிக் கொண்டு வீடு தோறும் நுழைந்தார். சோறு கிடைத்தது. கொண்டு வந்தார். பிச்சைக்கார முடவருக்குக் கொடுத்தார்.

கதிரைவேற் பிள்ளையிடம் சென்றபின் இப்பிள்ளை விளையாட்டுகள் படிப்படியே மறைந்தன என்று திரு.வி.க. கூறுகிறார்.*

*வாழ்க்கைக் குறிப்பு.

நக்கா வரதன் என்பவன் கலியாண சுந்தரத்துடன் தாயம் விளையாடினான். விளையாட்டையொட்டி இருவருக்கும் பேச்சு வளர்ந்தது. வரதன் தம்மை அடிப்பான் என்று கருதினார் கலியாண சுந்தரம். முதல் அடி தமதாயிருக்க வேண்டும் என்று கருதினார், வரதன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அதைக் கண்டார் வரதனின் தந்தையார். கலியாண சுந்தரத்தை நோக்கி விரைந்தார். கண்டார் கலியாண சுந்தரம். ஓடினார்; ஒளிந்தார். எனினும் கலியாண சுந்தரத்தின் மனம் அமைதி பெறவில்லை. 'நம்மைத் துரத்தி வந்தவரை விடலாமா' என்று கறுகிக் கொண்டே இருந்தார். இரவு தன்னந்தனியராகச் சென்றார் அவர். சமயம் பார்த்து அவர் முதுகின் மீது கல் எறிந்துவிட்டார் கலியாண சுந்தரம்.

கலியாண சுந்தரனார் வீட்டுக்குப் பக்கத்திலே கிழவர் ஒருவர் இருந்தார். தெருவார் அவரைக் 'காஞ்சான்' என்று சொல்லுவர். தம் வீட்டு வழியே ஓடிப் பக்கத்துத் தெரு சேர அவர் ஒருபோதும் பிள்ளைகளை விடமாட்டார்; தப்பித் தவறி எவராவது ஓடிவிட்டால் அவரைத் தடியால் அடிப்பார்.

ஒரு நாள், திருமணத்திலே, இரவு வேளையிலே பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. அக் கச்சேரி நடுவில் கலியாண சுந்தரம் இருந்தார். அவரது கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தன. பார்த்தபோது என்ன கண்டார்? 'காஞ்சானை' நிற்றல் கண்டார். அவரை நோக்கிய வண்ணம் இருந்தார் கலியாண சுந்தரம். சிறிது நேரம் சென்றது. 'காஞ்சான்' தமது வீட்டுக்குப் புறப்பட்டார். அவர் பின் தொடர்ந்தார் கலியாண சுந்தரம். ஒரு மூலையில் நின்று கொண்டே சிறுநீர் பெய்தார் காஞ்சான்.

அப்போது அங்கே எவரும் இல்லை. கீழே கிடந்த வாழைப்பட்டை ஒன்றை எடுத்தார் கலியாண சுந்தரம்.



'காஞ்சான்' முதுகிலே ஓங்கி அடித்தார். 'காஞ்சான்' கூச்சலிட்டார். ஓடி வீட்டினுள் ஒளிந்தார் கலியாணசுந்தரம்.

இராயப்பேட்டை அம்மையப்ப முதலித் தெருவிலே கதிரைவேற் பிள்ளையின் சொற்பொழிவு ஒன்று நடைபெற்றது. அதுபோது வேதாந்திகள் சிலர் குறுக்குக் கேள்விகள் கேட்டனர். கதிரைவேற் பிள்ளையும் தக்க பதில் அளித்தார். வேதாந்திகள் ஒரு திண்ணையில் சென்று அமர்ந்தனர். கூட்டம் முடித்துக் கொண்டு வண்டியேறி வீட்டுக்குப் புறப்பட்டார் கதிரை வேலர். வேந்தாந்திகள் இருந்த வழியே சென்றது வண்டி. வேதாந்திகளில் ஒருவர், 'குதிரை வால் போகிறது' என்றார். கேட்டார் கலியாண சுந்தரம். நண்பர் சிலரைச் சேர்த்துக்கொண்டார்.

தெருவில் நாறிக் கிடந்த சாக்கடைச் சேற்றை வாரி வாரித் திண்ணை மீது வீசினார். அடுத்த நாள் வேதாந்த சபைத் தலைவர் ஒருவர் கலியாண சுந்தரத்தைப் பார்த்து, "நேற்று நடந்தது தெரியுமா?" என்று கேட்டார். 'தெரியும்' என்றார் கலியாண சுந்தரம். 'குதிரைவால்' என்று குறும்பு தொடங்கினார் முதியவர். 'சிறுவர் சாக்கடைச் சேறால் பதில் கூறினர்' என்றார்.

"பிள்ளைமையில் என்பால் விலங்கியல்பு அதிகமாயிருந்ததா? தெய்வஇயல்பு அதிகமாயிருந்ததா? முன்னையதே அதிகம் இருந்தது என்று சொல்வேன். இரண்டுக்கும் போர் நடக்கும். நாளடைவில் விலங்கியல்பே தோல்வியுறலாயிற்று" என்கிறார் திரு. வி. க. *

---

*வாழ்க்கைக் குறிப்பு.

# 4. கற்றலும் கேட்டலும்

கலியாண சுந்தரனாரின் பள்ளிப் படிப்பு வெம்பி வீழ்ந்தது. ஆனால் கல்வி முகிழ்த்தது.

அந்நாளில் சென்னையின் பல பகுதிகளிலும் தமிழ்த் தொண்டு நடைபெற்று வந்தது. அத்தொண்டு நிகழ்த்தியவர் யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை யாவார். சிறப்பாக இரண்டு இடங்களில் அவர் புராணம் சொல்லி வந்தார். ஒன்று, கந்தசாமி கோவில் வசந்த மண்டபம். மற்றொன்று, சிந்தாதிரிப்பேட்டை அங்காள பரமேசுவரி கோவில்.

கந்தசாமி கோவிலிலே ஞாயிறு தோறும் தணிகைப் புராணம். அங்காள பரமேசுவரி அம்மன் கோவிலில் செவ்வாய் தோறும் கந்தபுராணம். வெள்ளிதோறும் திருவிளையாடற் புராணம்.

கலியாண சுந்தரனார் இவ்விரண்டு இடங்கட்கும் தவறாது சென்றார்; கதிரை வேலரின் சொன் மாரியைச் செவிமடுத்தார்.

கதிரை வேலரின் சொன்மாரி எவ்வாறு இருந்தது? வெறும் புராணப் பிரசங்கமாக இருந்ததா? இல்லை.

அவரது சொன்மாரியிலே இலக்கியம், இலக்கணம், தர்க்கம், சாத்திரம் முதலிய யாவும் ஆலங்கட்டி போல் உதிரும். அது கேட்டு மாணவர் பெரிதும் இன்புறுவர்.

கதிரை வேலரிடம் யாப்பிலக்கணமும் கற்றார் கலியாண சுந்தரனார். இந்நிலையில் கதிரை வேலர் நோய்வாய்ப்பட்டு நீலகிரியிலே இறந்தார்.



யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரிடத்திலே தமிழ் பயின்ற ஒருவர், மயிலாப்பூரிலே வசித்து வந்தார். அவர் பெயர், மகா வித்வான் தணிகாசல முதலியார் என்பது.

அவர்பால் சென்றார் கலியாண சுந்தரனார். சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய சைவ சாத்திரங் களைக் கற்றார்.

இராயப்பேட்டையில் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிதம்பர முதலியார். அவர் திருக்குறள் வல்லவர், அவரிடம் சென்றார் கலியாண சுந்தரனார்.

"தங்களிடம் திருக்குறள் கற்க விரும்புகிறேன். எனக்குக் கற்பியுங்கள்" என்று வேண்டினார். சிதம்பர முதலியார் இணங்கினாரா? இல்லை.

"யான் போதிக்க வல்லவன் அல்லன். நீர் என்னுடன் இரும். இருவரும் சேர்ந்து திருக்குறள் படிப்போம்" என்றார் அவர்.

"சரி" என்றார் கலியாண சுந்தரனார்.

திருக்குறள் நுட்பங்களை எல்லாம் கூறினார் சிதம்பர முதலியார். அவர் திரட்டி வைத்திருந்த குறிப்புகள் பல பேராசிரியர் போல துணைபுரிந்தன.

மயிலாப்பூர் 'செண்ட் எப்பாஸ்' உயர்நிலைப் பள்ளியிலே தமிழாசிரியர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் தேவப்பிரசாதம் பண்டிதர். அவர் கலியாண சுந்தரனாரின் கெழுதகை நண்பராயினார். இருவரும் சேர்ந்து கம்ப இராமாயணம், வில்லி பாரதம் முதலிய நூல்களை ஆராய்ந்தனர்.

அந்நாளில் சுவாமி வேதாசலம் எனும் மறைமலை அடிகள், அடிக்கடி இராயப்பேட்டைக்கு வருவார்; குகானந்த நிலையத்தில் தங்குவார். கலியாண சுந்தரனார் தமக்குத் தோன்றும் ஐயப்பாடுகளை எல்லாம் மறைமலை அடிகளிடம் கேட்டுத் தெளிவார். அடிகளாரும் படுக்கையிற் கிடந்தவாறே கலியாண சுந்தரனாரின் வினாக்களுக்கு விடையளிப்பார்.

மயிலை மகா வித்வான் தணிகாசல முதலியாரிடம் பாடங் கேட்டபோது கலியாண சுந்தரனார்க்கு சமஸ்கிருதம் கற்பிக்க விரும்பினார் மகா வித்வான். அது முற்றுப்பெற வில்லை.

எனினும் சமஸ்கிருதம் கற்க வேண்டும் எனும் வேட்கை மட்டும் கலியாண சுந்தரனாரை விட்டு அகலவில்லை பொருள் முடை அதற்கு இடையூறாக நின்றது. என் செய்வார்? 'கற்றிலனாயினும் கேட்க' எனும் பொய்யா மொழிப் புலவர் கூற்று அவருக்கு ஊக்கம் அளித்தது. கற்றல் விட்டார்; கேட்டலில் கருத்துச் செலுத்தினார்.

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சமஸ்கிருதமும் தமிழும் கரை கண்டபெரியார். அவர் திருவல்லிக்கேணி யிலே சில காலம் தங்கியிருந்தார். மாலையில் கடலோரம் செல்வார். அப்போது அவர் உடன் கலியாண சுந்தரனாரும் செல்வார். சுவாமிகள் உபநிடதக் கருத்துக்களை விளக்கிக் கூறுவார். அவ்விளக்கம் கேட்டுக் கலியாண சுந்தரனார் பயன் பெறுவார்.

மருவூர் கணேச சாஸ்திரியார் சென்னையின் பல்வேறு பகுதிகளின் வெவ்வேறு நூல்களைச் சொல்லி வந்தார். அங்கு கலியாண சுந்தரனாரைக் காணலாம். வான்மீகி இராமாயணப் பிரசங்கம் எங்கு நடைபெற்ற போதிலும் அங்குச் செல்வார் கலியாண சுந்தரனார். வியாச பாரதம் கூறும் இடங்களுக் கெல்லாம் செல்வார். பகவத் கீதை படிக்குமிடம் தோறும் சென்று செவிமடுப்பார்.

கடலங்குடி நடேச சாஸ்திரியார் சமஸ்கிருத நூல்களைத் தமிழில் தந்தவர். அவர் தம் மொழி பெயர்ப்பு நூல் களில் தோய்ந்தார் கலியாண சுந்தரனார். சாஸ்திரியார் சங்கரரின் விரிவுரைகளைத் தமிழில் தந்தவர். அச் சங்கரமா பாடியம் கலியாண சுந்தரனார்க்குப் பெருந்துணை புரிந்தது.



புதுப்பேட்டைத் தோட்டத் தெருவிலே ஜைனர் சிலர் வசித்தனர். அவருள் குறிக்கத் தக்கவர் இருவர். ஒருவர் பார்சுநாத நயினார். இன்னொருவர் பேராசிரியர் சக்கரவர்த்தி நயினார். இவர்கள்பால் சென்று ஜைனமத சித்தாந்தங்களை அறிந்தார் கலியாண சுந்தரனார்.

இராயப்பேட்டையிலே சாக்கிய பௌத்த சங்கம் ஒன்று இருந்தது. அச்சங்கத்தினை நடத்தியவர் அயோத்தி தாஸ் பண்டிதர் என்பவர்.

புத்த பிக்ஷு ஒருவர் அச்சங்கத்துக்கு வந்தார். அவர் இலங்கையைச் சேர்ந்தவர்; தமிழர்; திரிபிடகமும் வேறு நூல்களும் போதித்தார். அவர் தம் போதனை கேட்டார் கலியாண சுந்தரனார்.

இஸ்லாமானவர் ஒருவர். பெயர் அப்துல் கரீம் அவர் ஒரு மௌல்வியின் புதல்வர்; திருக்குரான் ஓதியவர். திருக்குரானை வாசித்துத் தமிழில் பொருள் கூறுவார். கலியாண சுந்தரனார் அவரிடம் கேட்டறிந்தார்.

அந்நாளில் 'மதராஸ் டைம்ஸ்' என்றோர் ஆங்கிலத் தினப்பதிப்பு மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. அப் பத்திரிகையின் ஆசிரியர், கிளின்பார்லோ என்பவர். அவர் ஆங்கில இலக்கியப் பேரறிஞர். தம் பத்திரிகையிலே 'ஷேக்ஸ்பியர் கிளப்' என்றதொரு பகுதி கண்டார் அவர். அந்தப் பகுதியிலே அறிஞர் பலர் ஷேக்ஸ்பியர், மில்டன். வேர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, கீட்ஸ் முதலிய வான்முகில்கள் பொழிந்த பாக் கடலைக் கடைவர். அமுதம் எழும். அவ்வமுதத்தைப் பருகி இன்புறுவார் கலியாண சுந்தரனார்.

சிங்காரவேல் செட்டியார் டார்வின் கண்ட உண்மை களை அறிவுறுத்தி வந்தார். அவர் தம் சொற்பொழிவு கேட்டுப் பயன் பெற்றார் கலியாண சுந்தரனார்.

இரவு நேரத்திலே சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் குதானந்த நிலையத்துக்கு வருவார். அவருடன் கலந்து

தத்துவ விசாரணை செய்வார்; மேற்கு நாட்டுத் தத்துவ நுட்பங்களைக் கேட்டு அறிவார். யார்? கலியாண சுந்தரனார்.

இந்நிலையில் கலியாண சுந்தரனார்க்கு ஓர் ஐயம் தோன்றியது. என்ன? இலக்கணம் பற்றியது அந்த ஐயம் இல்பொருள் உவமை, உள்ளுறை உவமை என இரண்டு. இல்பொருள் உவமைவாவது யாது? உள்ளுறை உவமை யாது?

ஐயம் போக்குவார் யார்? சென்னையில் வாழ்ந்த புலவர் பலரிடம் கேட்டுப் பார்த்தார். எவரும் விளக்கு வாரிலர்.

பின்னத்தூரிலே ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் நாராயணசாமி ஐயர் என்பது. தமிழ் இலக்கணப் புலவர் அவர்.

அவரிடம் சென்று கேட்டுத் தெளிய விரும்பினார், கலியாண சுந்தரனார். பின்னத்தூர் சென்றார். ஐயரின் வீட்டைத் தேடிச் சென்றார். வீட்டில் ஐயர் இலர். விசாரித்தார். ஐயர் குளத்தில் நீராடுவதாகக் கூறினர். அக்குளம் தேடிச் சென்றார் கலியாண சுந்தரனார்! குளத்தில் ஐயரைக் கண்டார். ஐயர் துணி தோய்த்துக் கொண்டிருந்தார்.

தம்மை நோக்கி ஓர் இளைஞர் வருதல் கண்டார் ஐயர்; துணி தோய்ப்பதை நிறுத்தினார்; வந்தவரை விசாரித்தார்; வந்த காரியமும் காரணமும் அறிந்தார்; மகிழ்ந்தார்.

இல்பொருள் உவமை என்பது என்ன? உள்ளுறை உவமை என்பது என்ன என்று விளக்கினார்; எடுத்துக் காட்டுகள் பல கூறினார். கேட்டார் கலியாண சுந்தரனார் ஐயம் நீங்கினார். ஊர் திரும்ப எண்ணினார். ஐயருக்கு நன்றி கூறினார். போய் வருகிறேன்' என்றார்.

''குளத்தில் நீராடு. என்னுடன் வீட்டுக்கு வா; உண்டு இளைப்பாறு. பின் போய் வா'' என்று பணித்தார் ஐயர்.

அவ்வாறே நீராடினார் கலியாண சுந்தரனார்; ஐயருடன் வீடு சென்றார். பகல் உணவு கொண்டார். சிறிது இளைப்பாறினார்; விடை பெற்றார்; ஊர் திரும்பினார்.*

*கூறியவர் திரு.வி.க.

# 5. ஸ்பென்ஸர் கம்பெனியும் வந்தே மாதரமும்

எத்தனை நாள்? எத்தனை நாள் இப்படி உண்பதும் ஊர் சுற்றுவதுமாகக் காலங்கழிக்க முடியும்?

கிராமத்திலிருந்து நெல் வருதல் நின்றது. கிராமம் போவாரிலர். அங்கே கேட்பாருமிலர். கலியாண சுந்தரனாரின் தமையனார் உலகநாத முதலியார் ஓர் அச்சுக் கூடத்தில் வேலைக்கு அமர்ந்தார். அந்த அச்சுக் கூடம் மவுண்ட்ரோட்டில் இருந்தது. அந்த அச்சுக்கூடத்தின் பெயர் 'வைஜயந்தி அச்சுக்கூடம்' என்பது. அவர் தம் ஊதியம் கொண்டு குடும்பத்தை நடத்துவது எங்ஙனம்? கலியாண சுந்தரனார் தாயார் பெரிதும் சிரமப்பட்டு எவ்வாறோ குடும்பத்தை நடத்தி வந்தார்.

வருவாய் போதவில்லை. குடும்பத்தை நெருக்கடி அதிகரித்தது. கலியாண சுந்தரம் எங்கேனும் வேலைக்குப் போக வேண்டும் என்பது தாயின் விருப்பம்.

என்ன செய்வார் கலியாணசுந்தரனார்? லோயர் செகண்டரி பரீட்சை ஒன்றை தேறியிருந்தார். புக் கீப்பிங் பரீட்சையும் தேறியிருந்தார். இந்த இரண்டு சர்ட்டிபி கேட்டுகளையும் வைத்துக்கொண்டு எங்கு போய் வேலை தேட முடியும்? எவர் வேலை கொடுப்பார்?

''கலியாண சுந்தரம் வேலைக்குப் போகக் கூடாதா'' என்று பேசவும், ஏசவும் தொடங்கினர் உறவினர். அப் பேச்சு கலியாண சுந்தரனாரின் காதைத் துளைத்தது. குடும்பத் தொல்லை அவரைக் குடைந்தது.

**என் செய்வார் கலியாண சுந்தரனார்?**

"கிராமத்தை விடுத்துத் தந்தையார் ஏன் சென்னைக்கு வந்தார்? பாழும் படிப்பை எனக்கு ஏன் தந்தார்? உழவு கற்றுக் கொடுத்திருக்கலாமே. நிலங்கள் பாழாய்ப் போகின்றனவே. உரிமை போகிறதே" என்று நினைந்து நினைந்து உருகுவார்.

இந்நிலையில் ஒரு நாள், உலகநாத முதலியாரின் மாமனார், ஆலப்பாக்கம் சிதம்பர முதலியார் வந்தார்; கலியாண சுந்தரனாரை அன்புடன் நோக்கினார்.

"பின்னி கம்பெனியில் வேலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். வாரும்" என்று அழைத்தார். 'சரி' என்று கூறிக் கலியாண சுந்தரனாரும் சென்றார்.

ஸீம்சன் என்பவர் அப்போது பின்னி கம்பெனியின் பெரிய துரை; அவர் கலியாண சுந்தரனாரின் புக் கீப்பிங் சர்டிபிகேட்டைப் பார்த்தார். கிழவர் ஒருவரிடம் கலியாண சுந்தரனாரை ஒப்புவித்தார். கலியாண சுந்தரனார் பெரிய துரை மூலம் வந்தது கிழவருக்குப் பிடிக்கவில்லை. அவர் கலியாண சுந்தரனாரிடம் நடந்து கொண்ட முறையே கிழவரின் வெறுப்பைத் தெளியக் காட்டியது. எனவே, கலியாண சுந்தரனார் பின்னி கம்பெனி வேலைக்குப் போகவில்லை. பின்னே ஸ்மித் கம்பெனியில் முயற்சி செய்யப்பட்டது. அங்கே கதிரைவேற் பிள்ளையின் பகைவர் ஒருவர் இருந்தார்.

அவர் போட்ட கத்தரியால் கலியாண சுந்தரனார்க்கு அவ்வேலை கிடைக்கவில்லை.

இராயப்பேட்டையில் வடிவேல் முதலியார் என்ற ஒருவர் இருந்தார். அவர், ஸ்பென்ஸர் கம்பெனியில் ஓர் இலாகாவுக்குத் தலைவர்,



"ஸ்பென்ஸர் கம்பெனியில் காட்லாக் எழுத ஒருவர் தேவை" என்று கூறினார் அவர். கலியாண சுந்தரனாரை அழைத்துக்கொண்டு போய்த் துரையிடம் விட்டார்.

காட்லாக்குகளின் உள்ளுறையை எழுதி, முறைப்படுத்தி, வரிசையாக அடுக்கி வைத்துக்கொள்ளும் வேலை கலியாண சுந்தரனார்க்கு அளிக்கப்பட்டது.

கலியாண சுந்தரனார் அவ்வேலையை எளிதில் முடித்தார். காட்லாக்கின் பெயர், உள்ளுறை முதலியன வேலைக்காரனுக்குப் பாடம். எனவே, காட்லாக்குகள் கேட்கப்படும்போது கார்டுகளைப் பார்த்துச் சொல்வதற்குள் வேலைக்காரன் அவைகளை எடுத்து வந்து விடுவான். கலியாண சுந்தரனார்க்கு வேலை அதிகமில்லை, ஓய்வு அதிகம். ஓய்வு நேரத்தில் புத்தகங்கள் படிப்பார். பாட்டு எழுதுவார்; கதிரைவேற் பிள்ளை சரித்திரத்தையும் எழுதினார்.

அந்த நாளில் இந்திய அரசியல் வானம் எப்படியிருந்தது? இடித்து முழங்கிக் கொண்டிருந்தது. 1902ஆம் ஆண்டு. சுரேந்திரநாத் பானர்ஜி என்பவர் இந்திய அரசியல் வானிலே ஒளிவீசிக் கொண்டிருந்தார். அவர் தம் ஆங்கிலப் பேச்சைக் கேட்டோர் ஆனாயரின் குழல் கேட்ட ஆவினம் போலாவர். அவர் சென்னை வந்து இடித்து முழங்கியபோது, கலியாண சுந்தரனார் அம் முழக்கம் கேட்டார்: உணர்ச்சி பெற்றார்.

காங்கிரஸ் பித்து அவரைப் பற்றியது. 1907ஆம் ஆண்டு காங்கிரசிலே, மிதவாதிகள்—தீவிரவாதிகள் போராட்டம். தீவிரவாதிகள் திலகர் தலைமையில் எழுந்தார்கள், வங்காளத்திலே அரவிந்தர் தமது "வந்தே மாதரம்" பத்திரிகை மூலம் முழங்கினார். தமிழ் நாட்டிலே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் "இந்தியா" பத்திரிகை மூலம் கர்ஜனை செய்தார்.

அந்த நாளிலே தீவிரவாதத் திலகங்களாக விளங்கிய வர் மூவர். லால், பால், பால் என அம்மூவரும் அன்புடன் அழைக்கப்பட்டனர்.

லால் என்பது லாலா லஜபதிராயின் சுருக்கம். பால் என்பது பால கங்காதர திலகரின் சுருக்கம். மற்றொரு பால் விபின் சந்திர பாலரைக் குறிக்கும். இம்மூவரே அந்நாளின் தேசீயத் திரிமூர்த்திகள்.

திரிமூர்த்திகளில் ஒருவரான பி.ஸி.பால் (விபின் சந்திர பாலர்) சென்னை வந்தார். இடி முழக்கம், அம்முழக்கம் கேட்ட சென்னை மக்கள் மகுடி கேட்ட நாகமாயினர். கலியாண சுந்தரனாரும் அம் முழக்கம் கேட்டார்; மகுடி கேட்ட நாகம் ஆனார்.

'வந்தே மாதரம்' பத்திரிகைதான் தீவிரவாதிகளின் முரசாக முழங்கியது. அரவிந்தரின் கட்டுரைகள் அனல் கக்கின. அப்பத்திரிகையை வரவழைத்தார் கலியாண சுந்தரனார்; படித்தார்; தாம் படித்த அளவில் நின்றாரா? இல்லை.

காலையில் ஏழரை மணிக்கே கம்பெனிக்குப் போய் விடுவார். அதாவது, ஆபீஸ் திறப்பதற்கு அரை மணி நேரம் முன்னதாகவே சென்று விடுவார். கம்பெனி ஊழியர்களைக் கூட்டுவார்.

'வந்தே மாதரம்' பத்திரிகையைப் படித்துக் காட்டு வார். பத்திரிகையில் வந்துள்ள கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லுவார். எல்லாரும் ஆர்வத்து டன் கேட்பர். ஒவ்வொரு நாளும் இப்படி நிகழ்ந்து வந்தது.

அந்தக் காலம் எப்படிப் பட்டது? "வந்தே மாதரம்" என்ற சொல் காதில் விழுந்தாலே வெள்ளையர் மருண்டு சீறிய காலம். ஸ்பென்சர் கம்பெனியோ வெள்ளையர்



கம்பெனி. அக்கம்பெனி ஊழியரான கலியாண சுந்தரனார் 'வந்தே மாதரம்' பத்திரிகையைப் படித்து எல்லாருக்கும் விளக்கிச் சொல்லி வந்தால் அதை வெள்ளையர் எவ்வாறு பொறுப்பர்? பொறுக்க மாட்டார் அன்றோ? வெள்ளையர் எல்லாரும் சேர்ந்து, கம்பெனி மானேஜிங் டைரக்டரின் காதில் போட்டனர். மானேஜிங் டைரக்டர் கலியாண சுந்தரனாரை அழைத்தார். கடுமையாக எச்சரிக்கை செய்தார். கலியாண சுந்தரனார் அது பொறுப்பாரோ? பொறுக்க மாட்டார் அன்றோ?

கலியாண சுந்தரனாரின் தமையனார் ஊழியம் செய்து வந்த வைஜயந்தி அச்சகம் அருகில்தான் இருந்தது. அதாவது, ஸ்பென்ஸர் கம்பெனி அருகில்தான் இருந்தது. இடைவேளையின்போது வைஜயந்தி அச்சகம் சென்றார் கலியாண சுந்தரனார். தமையனாரைக் கண்டார். ஸ்பென்சர் கம்பெனி மானேஜிங் டைரக்டர் தம்மை எச்சரித்ததைக் கூறினார். இனி, அக் கம்பெனியில் ஊழியம் செய்யத் தமக்கு விருப்பமில்லை என்றார். வேலையை ராஜிநாமா செய்யப் போவதாகச் சொன்னார்.

தமையனார் என்ன சொன்னார்? "உனது விருப்பம் எப்படியோ அப்படியே செய்" என்றார். ஸ்பென்ஸர் கம்பெனி வேலையை ராஜிநாமா செய்தார். கலியாண சுந்தரனார் ஸ்பென்ஸர் கம்பெனி வாழ்வு 1908ஆம் ஆண்டுடன் முற்றுப்பெற்றது.

அன்றிரவு பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் மூவர் கூடினர். மூவர் எவர்? ஒருவர் கலியாண சுந்தரனார். மற்றொருவர் கலியாண சுந்தரனாரின் தமையனார். மூன்றாமவர் யார்? இவ்விருவரின் நண்பரான சிவசங்கர முதலியார்.

இனி என் செய்வது? இதுவே சிந்தனை. ஆழ்ந்த சிந்தனை. சிந்தனையின் விளைவு என்ன? அச்சுக்கூடம் ஒன்று அமைத்து, நூல்களை வெளியிடுவது என்பதே விளைவு.

அவ்வாறே அச்சுக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டது. "உமாபதி குருப்பிரகாசம் பிரஸ்" என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. கலியாண சுந்தரனார் எழுதிய விசேடக் குறிப்புரையுடன் பெரிய புராணம் சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிடப்பட்டது. திருமந்திரம் பதிக்கப் பெற்றது. வெளி வேலைகளும் செய்யப்பட்டன.

இரண்டு ஆண்டுகள் ஓடின. கண்ட பலன் என்ன? நஷ்டம்! பெரு நஷ்டம்! அச்சுக்கூடம் விற்கப்பட்டது. கடன் அடைந்தபாடில்லை. பற்றாக்குறைக்கு அன்னையார் நகைகளையும் விற்றுக் கடன் தீர்த்தனர். குடும்பம் புயலிடைச் சிக்கிய கலம் ஆயிற்று. கலியாண சுந்தரனார் கலங்கினார். கடற்கரையே புகலிடமாகக் கொண்டார். பெரும் பொழுதை அங்கேயே கழித்தார். பார்த்தசாரதிப் பெருமானை நினைந்து நினைந்து உருகினார்.

1910ஆம் ஆண்டின் தொடக்கத்திலே ஒரு நாள் டானியல் சிங் என்பார் கலியாண சுந்தரனாரைக் கண்டார். அவர் கலியாண சுந்தரனாரின் பழைய நண்பர்.

"ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியர் தேவை. நாம் ஏன் முயற்சி செய்யக் கூடாது?" என்று கேட்டார் சிங்.

"மீண்டுமா வேலைத் தொல்லை?" என்றார் கலியாண சுந்தரனார்.

"ஆசிரியத் தொழில் புண்ணியம்" என்றார் சிங்.

இருவரும் சென்றனர். தலைமை ஆசிரியரைக் கண்டனர். தலைமை ஆசிரியரின் பெயர் ஜான் ரத்தினம்



பிள்ளை என்பது. இருவர் தம் சர்ட்டிபிகேட்டுகளையும் பார்த்தார் ஜான் ரத்தினம்பிள்ளை. இருவரையும் ஆசிரியராக எடுத்துக்கொண்டார்.

ஆயிரம் விளக்கு என்பது, சென்னை நகரின் ஒரு பகுதி. இப்பகுதியில் ஆதி திராவிட மக்களே பெரும்பான்மையினராக வசித்து வந்தார்கள். இவர்களுக்கென்று வெஸ்லியன் மிஷனால் தொடங்கப்பட்ட பள்ளியே ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளி. இது, ஆதி திராவிடர்க்கே ஏற்பட்டதாயினும், மற்ற வகுப்பினரும் கல்வி பயிலத் தடை இல்லை. இப் பள்ளியில் பாலர் வகுப்பு முதல், மூன்றாம் பாரம் வரை வகுப்புகள் இருந்தன. அந்நாளில் ஆதி திராவிடர்க்கென்று அமைந்த பள்ளிகளில் சிறந்து விளங்கியது இப்பள்ளியே. அரசாங்க உதவியும் இதற்கு அதிகம். ஆயிரம் விளக்குப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜான் ரத்தினம் அவர்கள்.

1910-ம் ஆண்டு தொடக்கத்திலே இப்பள்ளி ஆசிரியராக அமர்ந்தார் கலியாண சுந்தரனார். ஆறு ஆண்டுகள் அப் பள்ளியில் பணி புரிந்தார்.

தலைமை ஆசிரியர் ஜான் ரத்தினம் அன்பின் உருவம். அவர்தம் அன்பு கலியாண சுந்தரனாரைக் கவர்ந்தது. தொண்டின் திறத்தைக் கலியாண சுந்தரனார் அங்கே அறிந்தார்; உணர்ந்தார்.

மாணாக்கராயிருந்தபோது பைபில் படித்தார் கலியாண சுந்தரனார். பைபிலின் பொருளை ஆயிரம் விளக்குப் பள்ளியில் கண்டார்! கிறிஸ்தவச் செல்வம் பெற்றார்; அந்தணச் செல்வம் பெற்றார்.

# 6. மணவழகனாரும் மணவாழ்வும்

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ந் தேதி திரு.வி.கலியாண சுந்தரனார்க்குத் திருமணம் நடைபெற்றது.

மணமகள் பெயர் கமலாம்பிகை. இவர் திருச்சி கிருஷ்ணசாமி முதலியாரின் புதல்வி. கிருஷ்ணசாமி முதலியார், கார்டன் உட்ராப் கம்பெனியில் தலைமைக் கணிதராயிருந்தவர். இவர்க்குப் பிறந்த மக்கள் மூவர். மூவருள் இருவர் ஆண். ஒருவர் பெண். அப்பெண்ணே கமலாம்பிகை.

கமலாம்பிகை, தம் குழந்தைப் பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்தார்; பெரிய தந்தையார் வளர்ப்பில் வளர்ந்தார்.

திருமணம் இருள்ப்பன் தெருவிலே மணமகள் இல்லத்திலே நடந்தது. அப்போது அங்கே பலதிறப்பட்டவரும் கூடியிருந்தனர். தேவாரம் முழங்கியது. கிறிஸ்தவ ஜெபமும் நிகழ்ந்தது. பலர் பரிசுகள் வழங்கினர். அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தரமுதலியாரும் வாழ்த்துரை வழங்கினார். ஆயிரம் விளக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஜான்ரத்தினம் வாழ்த்தினார்.

மணவழகனாரின் இல்வாழ்க்கைத் தொடங்கியது. அவ்வாழ்க்கை, நீண்ட நாள் நடைபெறவில்லை. ஆறே ஆண்டுகள்.

கலியாண சுந்தரனாரிடம் கமலாம்பிகை செய்து கொண்ட முதல் விண்ணப்பம் கல்விபற்றியது.



"எனக்கு நகைகள் இருக்கின்றன. என் அன்னையாரின் விலை உயர்ந்த புடவைகள் பல இருக்கின்றன. யான் என்ன கேட்டாலும் வாங்கித் தரப் பெரிய தந்தையார் இருக்கிறார். ஆதலின் உங்களிடம் யான் விரும்புவது கல்வியே" என்று கூறினார் கமலாம்பிகை.

அவர் விரும்பியவாறே தமிழ் நூல் கற்பிக்க முயன்றார் திரு. வி. க. ஆனால் கலியாண சுந்தரனாரின் அன்னையார் அதனை விரும்பினார் அல்லர்.

அன்னையார் நல்லவர். ஆனால் 'கர்நாடகம்!' காலப் போக்கை அறியாதவர். என் செய்வது? கமலாம்பிகைக்கு இரவில் போதனை செய்யலானார் திரு. வி. க.

"யான் திருக்குறள் படித்தவன் என்பால் பிடிவாதம். முன்கோபம் முதலிய தீக்குணங்கள் புதைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களையவில்லை. கமலாம்பிகையின் சேர்க்கை அக் குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவள் அல்லள். எனக்கு அவளே திருக்குறளாக விளங்கினாள். மனைவாழ்க்கையில் ஈடுபடப்படத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது. திருவள்ளுவர் உள்ளத்தை உணர்தற்கு மனைவாழ்க்கை இன்றியமையாதது என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாயிற்று!" என்று குறிப்பிடுகிறார் திரு. வி.க. *

சின்ன வயதில் திரு. வி.க. வுக்குப் பொறுமை சிறிதும் கிடையாது. திருமணத்துக்குப் பின் 'பொறுமையாளர்' என்று பலராலும் போற்றப்பட்டார் அவர்.

"என்பால் பொறுமை பொலிவது உண்மையானால் அஃது எனது இயற்கையினின்றும் அரும்பியது ஆகாது. அது கமலாம்பிகையினின்றும் என்பால் இறங்கிக் கால் கொண்டது என்று யான் சொல்வேன்" என்கிறார் திரு. வி. க. *

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.

கமலாம்பிகைக்குப் பெரும் காப்பியங்கள் போதிக்க விரும்பினார் திரு. வி. க. அதற்கு வீடு இடந்தரவில்லை. தனிக் குடித்தனம் செய்தால் பெருங்காப்பியங்கள் போதிக்க இயலும் என்று கருதினார் அவர். அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டார்.

கமலாம்பிகை அதற்கு உடன்பட்டாரா? இல்லை.

''குடும்பத்தினின்றும் நாமே வலிந்து பிரிவது நமது வாழ்க்கைக்கு இழிவு தேடுவதாகும். கல்வியினும் குடும்ப ஒற்றுமையே பெரிது. இப்பொழுது இரவிலே கொஞ்சம் கொஞ்சமாக நான் படித்து வருவது போதும். என் பொருட்டு நீங்கள் பிரிவை நாடுவது தர்மமாகாது'' என்று பன்முறை அறிவுறுத்தினார். திரு. வி. க. வின் மனம் உவகைக் கடலாடியது. மனைவியின் விருப்பத்துக்கு மாறாக அவர் நடந்தாரல்லர்.

மனைவியுடன் மயிலாப்பூர் செல்வார் திரு. வி. க கபாலீச்சுரரைத் தரிசித்து வணங்குவார். பின்னே இருவரும் குளக்கரையில் அமர்ந்து இன்பமாகப் பேசுவர். ஒவ்வொரு நாள், திருவல்லிக்கேணிச் செல்வர். பார்த்தசாரதியைத் தரிசித்து வணங்குவர். குளக்கரையில் அமர்ந்து இன்பமாகப் பேசுவர்.

குளக்கரைப் பேச்சைப் பெரிதும் விரும்பினார் கமலாம்பிகை. வாரந்தோறும் சனி—ஞாயிறுகளில் திருவொற்றியூர் செல்ல எண்ணினார். திருவொற்றியூர் செல்வது எப்படி? அன்னையாரிடம் அனுமதி பெறுவது எப்படி? தமது கருத்தை திரு. வி. க. விடம் தெரிவித்தார்.

வண்ணாரப்பேட்டையிலே, கமலாம்பிகையின் பெரிய தந்தையார் இருந்தார். அவர் மிக வயது சென்றவர். அவரையும் பார்த்துவிட்டுத் திருவொற்றியூருக்கும் சென்று வரலாம் என்று கருதினார் திரு. வி. க.

''கமலத்தின் பெரியப்பா கமலத்தைப் பார்க்க விரும்புகிறார். பாவம்! வயதானவர். வண்ணாரப்பேட்டை



யிலிருந்து வந்துபோக வருந்துகிறார்'' என்று தம் தாயிடம் கூறினார் திரு. வி. க.

''பிள்ளையில்லாத ஒருவரைத் தள்ளாத காலத்தில் போய்ப் பார்த்து வந்தாலென்ன? போகலாம்'' என்று கூறி, விடை தந்தார் அன்னையார்.

''உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்!'' என்று நகைத்தார் கமலாம்பிகை.*

இருவரும் வெள்ளிக்கிழமை மாலையே புறப்படுவர். வண்ணாரப்பேட்டை சென்று தங்குவர்; சனிக்கிழமை பகல் திருவொற்றியூர் நோக்குவர்.

இருவரும் கடலோரம் உலவுவர்; நிற்பர்; மணல் மேடுகளில் அமர்வர். எழுத்தறியும் பெருமான் மாலை, வடிவுடை மாணிக்கப் பாடல் முதலியவற்றைப் பாடுவர் கமலாம்பிகை. கேட்டு மகிழ்வார் திரு. வி. க. கமலாம்பிகைக்குப் பாடத் தெரியும் என்பது வீட்டவருக்குத் தெரியாது. ஏன் எனில் வீட்டில் அவர் பாடியதில்லை.

சிலப்பதிகாரக் கதைகளைச் சொல்வார் திரு. வி. க. கேட்டு மகிழ்வார் கமலாம்பிகை. திருவொற்றியூரப்பனையும் பட்டினத்தார் சமாதியையும் தரிசித்து இருவரும் வீடு நோக்குவர். இவ்விருவர் தம் அன்பு வாழ்க்கையில் தோன்றிய குழவிகள் இரண்டு. ஒன்று ஆண்; மற்றொன்று பெண்.

ஆண் குழவி, பிறந்த வாரத்திலேயே இறந்தது. பெண் குழந்தைக்குத் திலகவதி என்று பெயர் சூட்டினார்.* ''அக் குழந்தை, கண்காட்டி முகம் காட்டி, கை காட்டிக் கால் காட்டி ஓராண்டு வளர்ந்தது, பின் மறைந்தது.''

---

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.

கமலாம்பிகை நோய்வாய்ப்பட்டார். எலும்புருக்கி நோய். அது பரம்பரை நோய். அந்நோய் கமலாம்பிகையின் தாயை விழுங்கியது. சகோதரர் ஒருவரையும் விழுங்கியது.

கமலாம்பிகையின் பொன்னுடல் மெல்ல மெல்லக் கரைந்தது. மூன்று திங்கள் சென்றன. இயன்ற சிகிச்சை செய்தனர்.

* "என் தந்தையார் காலமான திங்களில்—கோளில்—கமலம், ஐயும் தொடர்ந்து, விழியும் செருகும் நிலையடைந்தாள். துன்ப மேகஞ் சூழ்ந்தது. மின்னல் என் தலையில் விழுந்து, உடலிற் பாய்ந்து, கால் வழியே ஓடியது; மண்ணும் விண்ணும் ஒரே சுழல்; கண்களில் தாரை தாரை. கமலத்தின் ஆவி சோர்ந்தது. என் ஆருயிர்க் கமலாம்பிகையின் ஆவி சோர்ந்தது. ஒருயிர் ஈருடலென வாழ்ந்தோம். ஒருடல் போயிற்று. அமிழ்துஞ் சுவையென இருந்தோம். அமிழ்தம் போயிற்று (18-9-1918)."

—திரு. வி. க.

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்

# 7. வெஸ்லி கல்லூரியும் தலைமைத் தமிழாசிரியர் பதவியும்

இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார் ஒருவர். அவர் பெயர் சே. கிருஷ்ணமாச்சாரியார் என்பது. நீண்ட காலமாகவே, அவர் அக்கல்லூரியின் தலைமை தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். நீண்ட காலத் தொண்டுக்குப்பின் அவர் பதவியினின்றும் விலகி, ஓய்வுப் பெறப்போகிறார் என்ற வதந்தி நிலவியது. பின்னே அஃது உறுதியாயிற்று.

அப்பதவிக்குப் பலர் விண்ணப்பித்தனர். அப்பதவிக்கு முயற்சி செய்யுமாறு ஜான் ரத்தினம் திரு.வி.க.வைத் தூண்டினார்.

அவர்தம் தூண்டுதலுக்கு ஒருப்பட்டார் திரு.வி.க. விண்ணப்பம் விடுத்தார். வெஸ்லி கல்லூரியின் பழைய மாணாக்கராதலாலும், வெஸ்லியன் மிஷன் சார்புடைய பள்ளியொன்றில் வேலை பார்த்து வருவோராதலாலும், தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு திரு.வி.க.வையே நியமிப்பது என்று உறுதி செய்தார் பிரின்சிபால்.

இடையில் குறும்புகள் எழுந்தன. திரு.வி.க.வுக்குத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பதவி கிடைத்தது குறித்துப் பொறாமைகொண்ட சிலர், பிரின்சிபாலிடம் சென்று வத்தி வைத்தனர்; பொய்ப் பிரசாரம் செய்தனர். கயிறு திரித்தனர்.

சுப்பராய காமத் என்பவர் மங்களூரைச் சேர்ந்தவர்; இளைஞர்; அன்னி பெசன்ட் அம்மையார் நடத்திய "நியூ இந்தியா" என்ற ஆங்கிலப் பத்திரிகையின் உதவியாசிரியராகப் பணிபுரிந்தவர்.

ஒருநாள், திரு.வி.க. தமது வீட்டு வாயிலில் உலவிக் கொண்டிருந்தார். அப்போது, சுப்பராய காமத் திரு.வி.க. வைச் சந்தித்தார். தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

அவர்தம்* "கருங் குஞ்சியும், புருவமும், மீசையும், புன்முறுவலும், பவள வாயும், முத்துப் பல்லும், மலர் முகமும்" திரு.வி.க.வின் கண்களுக்கு விருந்தாயின. சுப்பராய காமத்தும் திரு.வி.க.வும் சகோதரராயினர்.

காமத்தின் முயற்சியால் 'இராயப்பேட்டை சகோதர சங்கம்' காணப்பட்டது. அச்சங்கத்தின் போஷகர் அன்னி பெசன்ட் அம்மையார். தலைவர், ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். அமைச்சர், சுப்பராய காமத். திரு.வி.க. ஒரு நிர்வாகி. சகோதர சங்கத்தின் சார்பில் தோன்றிய பள்ளிகள் பல—அமைப்புகள் பல.

அந்நாளில் தியாசோபிகல் சங்கத்துக்கும் கிறிஸ்துவச் சபைகட்கும் இணக்கமில்லை. வெஸ்லி கல்லூரி மாணாக்கர் சிலருக்குக் கசையடி வழங்கப்பட்டது குறித்துப் பெருங் கிளர்ச்சி செய்தது 'நியூ இந்தியா' பத்திரிகை. அப் பத்திரிகையோ அன்னி பெசன்ட் அம்மையாரின் தலைமையில் வெளிவருவது. அம்மையாரோ இராயப்பேட்டை சகோதரச் சங்கப் போஷகர். அச்சங்க நிர்வாகி திரு.வி.க. எனவே கசையடிக் கிளர்ச்சியில் திரு.வி.க.வுக்கும் பங்குண்டு என்று பொறாமையாளர் வத்தி வைத்தனர்.

இராயப்பேட்டை சகோதரச் சங்கத்தின் சார்பில் பெண் பாடசாலை ஒன்று திறக்கப்பட்டது. அதன் பெயர் பவானி பாலிகா பாடசாலை என்பது. அஃது இராயப் பேட்டை ஆண்டித் தெருவில் இருந்தது. அதே தெருவில் வெஸ்லியன் மிஷன் பெண் பாடசாலை ஒன்றும் இருந்தது. வெஸ்லியன் மிஷனுக்குப் போட்டியாகவே,

*திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்.



பவானி பாலிகா பாடசாலை ஏற்பட்டது என்றும், அப் போட்டியில் திரு.வி.க.வின் பங்குண்டு என்றும், பிரின்ஸி பாலிடம் கோள் மூட்டினர் பொறாமையாளர். நிலைமை நெருப்பில் நெய்விட்டது போல் ஆயிற்று.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்க் குழுவின் தலைவர் தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை முதலியோர் திரு.வி.க.வின் பொருட்டுப் பெருமுயற்சி செய்தனர். வெஸ்லி கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பதவி திரு.வி.க.வுக்கே கிடைத்தது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாறாம் ஆண்டு ஜூன்மாதம் இறுதி வாரத்தில் அப்பதவி ஏற்றார் திரு.வி.க. ஒன்றரை ஆண்டு தமிழ்த் தொண்டாற்றினார்.

வெஸ்லி கல்லூரிப் பண்டிதர்கள் குறைந்த சம்பளம் பெற்று வந்தார்கள். சம்பள உயர்வுக்குப் பாடுபட்டார் திரு.வி.க.

கல்லூரி பிரின்சிபாலிடம் அதுபற்றிப் பேசினார். அப் பேச்சின் விளைவு யாதாயிற்று? பண்டிதர் சம்பள உயர்வு பெற்றனர். பண்டிதர்க்குப் போதிய வசதிகள் இல்லா திருந்தன. போதிய வசதிகள் பெற்றுத் தந்தார் திரு.வி.க. இவ்வாறு ஒன்றரை ஆண்டு ஓடியது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினான்காம் ஆண்டு, ஐரோப்பாவில் பெரும் போர் மூண்டது. நமது நாட்டிலே அன்னி பெசன்ட் அம்மையார் 'ஹோம் ரூல்' கிளர்ச்சி தொடங்கினார். சிறையினின்றும் வெளிவந்த திலகர் பெருமானும் அக்கிளர்ச்சியில் பங்குகொண்டார்.

அரசியல் பித்து திரு.வி.க.வை ஆட்கொண்டது. சுய ராஜ்யக் கிளர்ச்சியில் பங்குகொள்ள விரும்பினார் அவர். அதற்கேற்ற வாய்ப்பு கிட்டியது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாறாம் ஆண்டு கிறிஸ்துமஸ் ஓய்வின் போது, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பிலே சைவர் மாநாடு ஒன்று நடைபெற்றது. நடைபெற்ற இடம் இராஜு கிராமணியார் தோட்டம். அத் தோட்டம், சென்னை ஆமில்டன் வாராவதி அருகே இருந்தது.

மாநாட்டுத் தலைவர் யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியார். மாநாடு மூன்று நாள் நடைபெற்றது. மூன்றாவது நாள் பிற்பகல் ஓர் அறிக்கை வழங்கப்பட்டது. அவ்வறிக்கை யாது கூறிற்று? மாலையில் பிட்டி தியாகராஜ செட்டியார் பேசுவார் என்று கூறிற்று. பொருள் 'பிராமணரல்லாதார் முன்னேற்றம்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மாலையில் தியாகராஜ செட்டியார் பேசினார்; பிராமணர் செல்வாக்குப் பற்றியும், பிராமணரல்லாதார் நசுக்குண்டு நாசமடைவது பற்றியும் விரித்துப் பேசினார்.

பிராமணரல்லாதார் நலன் நாடும் கட்சி ஒன்று தேவையென்று கூறினார். 'காங்கிரசை நம்பவேண்டாம். ஹோம் ரூல் லீகையும் நம்ப வேண்டாம்!" என்று வலியுறுத்தினார்.

அவர்தம் கூற்றை மறுக்க எண்ணினார் திரு.வி.க. மேடைவரை சென்று விட்டார். அங்கே பொறுமை பூத்தது. பேசாது இருந்து விட்டார். ஆனால் அவர்தம் உள்ளத்தில் எழுந்த அரசியல் வேட்கை தணியவில்லை. நாளுக்கு நாள் பெருகி வந்தது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு ஜூன் மாதத்திலே அன்னி பெசன்ட் அம்மையார் காவலில் வைக்கப்பட்டார். அவரது இரு கைகளாக விளங்கிய வாடியா, அருண்டேல் ஆகிய இருவரும் காவலில் வைக்கப்பட்டனர்.

இவ்வாறு செய்தால் 'ஹோம் ரூல்' கிளர்ச்சியை ஒடுக்கி விடலாம் என்று மனப்பால் குடித்தார் லார்டு



பெண்ட்லண்டு. பெண்ட்லண்டுதான் அப்போது சென்னை மாகாண கவர்னராக இருந்தார். ஹோம் ரூல் கிளர்ச்சி ஒடுங்கியதா? இல்லை; ஓங்கியது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாறாம் ஆண்டிலே பிறந்த ஜஸ்டிஸ் கட்சி, ஹோம்ரூல் இயக்கத்தை எதிர்த்தது. பிராமணரல்லாதார் முன்னேற்றம் பற்றிப் பேசி, வகுப்பு வாதத் தீ உமிழ்ந்தது. ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் மூன்று பத்திரிகைகள் வெளி வந்தன. மூன்றும் தினப் பதிப்புகள், ஒன்று ஆங்கிலம்; மற்றொன்று தமிழ்; இன்னொன்று தெலுங்கு.

ஆங்கிலத் தினப் பதிப்பின் பெயர் 'ஜஸ்டிஸ்' தெலுங்குப் பத்திரிகையின் பெயர் 'ஆந்திர பிரகாசிகா' தமிழ்த் தினப் பதிப்பின் பெயர் 'திராவிடன்'.

'திராவிடன்' வகுப்பு வாதத் தீ உமிழ்ந்தான்; சமயத்தைப் பழித்தான்; கோயிலைப் பழித்தான்; அதிகார வர்க்கத்தை ஆதரித்தான்; விடுதலை இயக்கத்தை எதிர்த்தான்.

இது பற்றிச் சென்னையின் பல்வேறு இடங்களிலும் சமயச் சார்புக் கூட்டங்கள் கூடின. இவைகளில் திரு.வி.க.வும் கலந்து கொண்டார்; ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கினார். ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தும் முயற்சி அவர்க்கு ஒரு பெருந்தொண்டாகத் தோன்றியது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு செப்டம்பர் மாதம் கோகலே மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது. அக்கூட்டம் திவான் பகதூர் கேசவப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு.வி.க. பேசினார். பொருள் 'திராவிடரும் காங்கிரசும்' என்பது.

முதன்முதல் திரு.வி.க. பேசிய அரசியல் கன்னிப் பேச்சு அதுவே, அப்பேச்சில் திராவிடர் வரலாற்றையும், ஆரியர் வரலாற்றையும், அவ்வரலாறுகளில் உள்ள முரண்பாடுகளையும் சுருங்கிய முறையில் கூறினார் திரு.வி.க.

இரண்டினமும் கலப்புற்று நீண்ட நாளாகியதையும், இரண்டு நாகரிகமும், கங்கையும் யமுனையும் போல் ஒன்றுபட்டு விட்டமையையும்; இந்நாளில் திராவிடர் யார், ஆரியர் யார் என்று பிரித்தல் இயலாது என்றும் விளக்கினார். எல்லா வகுப்பாரும் ஒன்றுபட்டு, அடிமைத் தளையை நொறுக்கி, உரிமை பெறப் பாடுபட வேண்டும் என்றார். அவ்வாறு ஒன்றுபடாது வகுப்புவாத எரியூட்டுவது நாட்டைப் பாழாகும் என்றார். ஜஸ்டிஸ் கட்சி தென்னாட்டுப் பிராமணரல்லாதார் எல்லார்க்கும் உரியது ஆகாது என்றார். தென்னாட்டுப் பிராமணரல்லாதாரில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் மனப்பான்மையுடையவர் என்று தெளிவாக்கினார்.

பிராமணரல்லாதார் எல்லாரும் ஒருங்குகூடி ஜஸ்டிஸ் கொள்கையை மறுக்க வேண்டும் என்று வேண்டுதல் செய்தார்.

திரு.வி.க.வின் பேச்சு, பிராமணரல்லாதாருக்கு ஊக்கம் அளித்தது; தமக்கென ஒரு தனிச் சங்கம் காணத் தூண்டியது.

தனிச் சங்கம் காணும் முயற்சி திரு. வி. கோபாலசாமி முதலியாரால் தொடங்கப்பட்டது. அதன் பயனாக ஒரு சங்கம் தோன்றியது.

அச்சங்கத்தின் பெயர் "சென்னை மாகாணச் சங்கம்" என்பது. சங்கத்தின் தலைவர் திவான் பகதூர் கேசவப் பிள்ளை. லாட் கோவிந்ததாஸ், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், நாகை பக்கிரிசாமி பிள்ளை, சீர்காழி சிதம்பரநாத முதலியார், தஞ்சை சீனிவாசப் பிள்ளை, ஜார்ஜ் ஜோசப் முதலியோர் உதவித் தலைவர்கள். தி. வி. கோபால்சாமி முதலியார், குருசாமி நாயுடு, டாக்டர் வரதராஜுலு நாயுடு, சர்க்கரைச் செட்டியார், திரு.வி.க. முதலியோர் அமைச்சர். சென்னை மாகாணச் சங்கக் கொள்கை



தென்னாடு முழுவதும் பரவப் பிரசாரம் செய்தவர் டாக்டர் பி. வரதராசுலு நாயுடு.

இச்சங்கத்தின் தோற்றம் ஜஸ்டிஸ் கட்சிக்குப் பேரிடி ஆயிற்று. அக்கட்சி கொதித்தது; எரிந்தது. ஜஸ்டிஸ் கட்சிப் பத்திரிகைகள் சென்னை மாகாணச் சங்கத்தைக் கண்டபடி தூற்றின. சென்னை மாகாணச் சங்கம் பிராமணர்தம் ஏவுதலால் அவர்தம் அடிமைகளால் தொடங்கப் பட்டதென்று ஏசின. அதை மறுக்கப் பத்திரிகை ஏதுமில்லை. பத்திரிகை ஒன்று தேவை என்ற எண்ணம் எல்லாருடைய உள்ளத்திலும் உருக்கொண்டது.

"நீங்கள் தமிழாசிரியர் பதவி விட்டுப் பத்திரிகாசிரியர் பதவி ஏற்பதானால் ஒரு பத்திரிகை தொடங்க வேண்டிய ஏற்பாடு செய்யலாம்" என்றார் சுப்பராய காமத். நேயர் பலரும் திரு.வி.க.வை வற்புறுத்தினர்.

வற்புறுத்தலுக்கு ஒருப்பட்டார். திரு.வி.க. வெஸ்லி கல்லூரியை விட்டுப் பத்திரிகாசிரியர் பதவி ஏற்பதாக உறுதி மொழியும் தந்தார்.

சுப்பராய காமத்தும் குமாரசாமி செட்டியாரும் சேர்ந்து ஓர் அச்சுக் கூடத்தை வாங்கினர். அதற்குப் "பிரிட்டிஷ் இந்தியா பிரஸ்" என்று பெயர் சூட்டினர். அதைப் பதிவு செய்யும் உரிமை, திரு.வி.க.வுக்கு நல்கப்பட்டது. ஆயிரம் ரூபா ஈடுகாணம் கட்டினார் திரு.வி.க. சென்னை பிரசிடென்சி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பதிவு செய்து கொண்டார்.

# 8. ''தேச பக்த''னும் திரு.வி.க.வும்

பத்திரிகை முயற்சி தொடங்கப்பட்டது. பத்திரிகைக்கு என்ன பெயர் வைப்பது? இதுபற்றிப் பலர் பலவாறு கூறினர். பெயர்கள் பல கூறப்பட்டன. இறுதியில் சில பெயர்களைச் சீட்டில் எழுதினர்; குலுக்கினர். தரையில் போட்டனர். சீட்டில் ஏதாவது ஒன்றை எடுக்குமாறு ஒரு சிறுவனைக் கேட்டனர். சிறுவன் ஒரு சீட்டை எடுத்தான். 'தேச பக்தன்' என்ற பெயர் காணப்பட்டது. அப்பெயரையே பத்திரிகைக்குச் சூட்டுவது என்று முடிவு செய்தனர். பிரிட்டிஷ் இந்தியா அச்சுக் கூடத்தில் அச்சிட்டுத் 'தேச பக்தனை' வெளியிடுபவராகப் பதிவு செய்து கொண்டார் திரு.வி.க.

திரு. வி. க. வின் தமையனார் திரு. வி. உலகநாத முதலியாரே பிரிட்டிஷ் இந்தியா அச்சுக் கூடத்தின் மேற்பார்வையாளர் ஆனார். திரு. வி. உலகநாத முதலியார் அச்சுக்கூட நிர்வாகத்தில் பயிற்சி பெற்றவர்; அநுபவத்தில் பண்பட்டவர்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு, டிசம்பர் மாதம் ஐந்தாந் தேதி, வெஸ்லி கல்லூரியினின்றும் விலகினார் திரு. வி. க.

திரு. வி. க. கல்லூரி விடுத்த செய்தி கேட்டனர் நண்பர் சிலர்; திரு.வி.க.வின் செயலை மறுத்தனர். நேரே போந்தனர் சிலர்; கடிதம் எழுதினர் வேறு சிலர்; மீண்டும் கல்லூரிக்கே செல்லுமாறு வற்புறுத்தினர்.

அவர்தம் செயல் என் செய்தது? திரு.வி.க.வைச் சோர்வில் ஆழ்த்தியது. ஊக்கம் குன்றியது; சோர்வு பெருகி நின்றது. கவலையுற்றார் திரு.வி.க. சகோதர சங்கத்தின்



திண்ணையில் அமர்ந்தார். நீண்ட நேரம் யோசித்தார். யோசித்த வண்ணம் இருந்தார்.

அப்போது வந்தது ''நியூ இந்தியா'' பத்திரிகை. பத்திரிகையைப் புரட்டினார் திரு.வி.க. ''தேச பக்தன்'' வருகை பற்றிய விளம்பரம் கண்டார்.

தொடர்ந்து திரு.வி.க.வைப் பற்றிய சிறப்புரை கொண்ட ஆசிரியர் குறிப்பு ஒன்றும் கண்டார். இரண்டும் அவர்தம் சோர்வைத் தூக்கி எறிந்தன. 'தேச பக்தன்' அலுவலகம் சேர்ந்தார்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏழாந்தேதி ''தேச பக்தன்'' ஆசிரியர் பதவி ஏற்றார்.

அவர்தம் உதவி ஆசிரியர் எல்லாரும் இளைஞர். ஊதியத்துக்கு என்று உழைக்க வந்தவர் அல்லர்; தேசபக்தி மேலீட்டான் சேவை செய்ய வந்தவரே.

வெ. சாமிநாத சர்மா, சேஷாத்திரி சர்மா, வேங்கடாச்சாரியார், பழனிவேல், சம்பத் ஆகியோரே தொடக்கத்தில் உதவி ஆசிரியர்களாக இருந்தனர். பின்னே குலாமே ஹமீத், பரலி நெல்லையப்பர், இராஜகோபால், நடேசன் ஆகியவர் வந்து சேர்ந்தனர்.

சில நாளில் ''தேச பக்தன்'' லிமிடெட் போர்வை பெற்றான். சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், டாக்டர் வரதராஜுலு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர், ஆதிநாராயண செட்டியார், ஜார்ஜ் ஜோசப், லாட் கோவிந்ததாஸ் ஆகியோர் டைரக்டர் ஆயினர். அமைச்சர் சுப்பராய காமத். லிமிடெட் கம்பெனி அமைப்புப் பெரிதும் இவர் வழியே உழன்றது. லிமிடெட் கம்பெனி அமைப்பை திரு.வி.க. விரும்பினார் அல்லர். எனினும் டைரக்டர் எல்லாரும் தேசபக்தர் ஆக இருந்தமை அவருக்கு ஆறுதல் அளித்தது.

அந்தக் காலத்தில் தமிழ் தினப் பத்திரிகைகள் எப்படி யிருந்தன? ஆங்கிலமே பெரிதும் விரவியிருந்தன.

திரு.வி.க. என்ன செய்தார்? தூய தமிழில் எழுதினார்; ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை வழங்கினார்; எளிய தூய தமிழ் நடை. சிறு சிறு வாக்கியங்கள். வேகம்! வேகம்! ஆவேச நடை; எழுச்சி யூட்டும் நடை. ஆங்கிலக் குறியீடுகள் தமிழ்ப் பத்திரிகை களில் அப்படியே வெளியிடப்பட்டன. அவற்றையெல்லாம் திரு.வி.க. தமிழாக்கினார். இப்பொழுது தமிழ்ப் பத்திரிகை களிலும், மேடைகளிலும், பிற இடங்களிலும் காணப்படும் தமிழ் வழக்கு யாவும் திரு.வி.க. புகுத்தியவையே.

வகுப்பு வாதக் கொள்கையை வளர்க்கத் தோன்றியவன் 'திராவிடன்'. அக்கொள்கையைத் தேய்க்கத் தோன்றியவன் 'தேச பக்தன்'.

இவ்விரண்டு பத்திரிகைகளுக்கும் போர் மூளா திருக்குமோ? மூண்டது; கொள்கைப் போர்! வகுப்பு வாதத்தால் விளையும் தீமைகளை எடுத்துக் காட்டுவான் 'தேச பக்தன்'; வகுப்பு வாதத்தைத் தாங்கிப் பேசுவான் 'திராவிடன்'; தாக்கி எழுதுவான் 'தேச பக்தன்'.

அக்காலத்தில் பெருந்தலைவர் எல்லாரும் மேடை யேறிப் பேசிய மொழி எம்மொழி? ஆங்கிலம்; ஆங்கிலம். ஆங்கிலத்தில் அழகாகப் பேசுவர்; தமிழ் தெரியாது என்பர்.

இவ்வழக்கத்தை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சி செய்தான் 'தேச பக்தன்.' அக்கிளர்ச்சியின் பயனாக விளைந்த நன்மையை இன்று நாம் காண்கிறோம். மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், பிற இடங்களிலும் தமிழ் இன்று நடம்புரிதல் காண்கிறோம்.



அந்நாளில் மேடைகளில் பேசுதற்கென்று "தேசபக்த"' னைப் படித்த அரசியலில் தலைவர் பலர். தமிழாய்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் 'தேசபக்தன்' சந்தாதார ராயினர். 'தேசபக்தன்' தமிழரை அந்நிய மோகத்தினின்றும் விடுவித்தான் என்று சொல்வது மிகையாகாது.

அக்காலத்தில் சட்டசபையில் ஆங்கிலமே பேசப்படும். தமிழர்க்குத் தமிழ் நினைப்பு வருதல் அரிது. அந்நாளில் ஒரு முறை சேலம் பி. வி. நரசிம்ம ஐயர் சட்டசபையில் தமிழில் பேசினார். அது பற்றி எவரும் பாராட்டினாரல்லர். எப்பத்திரிகையும் பாராட்டவில்லை. நரசிம்ம ஐயரைப் பாராட்டி ஒரு குறிப்பு எழுதினான் 'தேசபக்தன்.'

இந்த நரசிம்ம ஐயரே பிற்காலத்தல் துறவியானார். சென்னை மயிலாப்பூரில் சாய்பாபா கோவிலை நிறுவினார். இஃது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு சென்னை மாகாணச் சங்கத்தின் சார்பில் தஞ்சை—திருச்சி மாநாடு நடைபெற்றது. 'இந்தியன் பேட்ரியட்' ஆசிரியர் திவான் பகதூர் கருணாகர மேனன் தலைமை வகித்தார். அம் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று, தமிழைப் பற்றியது.

அத்தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார் திரு. வி. க. பொதுக் கூட்டங்களில் தமிழர்கள் தாய் மொழியிலேயே பேச வேண்டும் என்றார். எவரேனும் அயல் மொழியில் பேசப் புகுந்தால் பொது மக்கள் அவரைத் திருத்தல் வேண்டும் என்றார். அது பற்றித் 'தேசபக்தன்' வாயிலாகவும் கிளர்ச்சி செய்தார். திரு. வி. க.வின் பேச்சும் எழுத்தும் என் செய்தன? தக்க பயன் தந்தன.

'தமிழில் பேசத் தெரியாது' என்று கூறி, ஆங்கிலத் திலேயே பெருந்தலைகள் பேசிவந்தகாலம் அது. திரு. வி. க. வின் கிளர்ச்சியால் அந்நிலை மாறியது. 'தமிழில் பேசத் தெரியாது' என்று கூறி வந்தவர்கள்—ஆங்கிலத்தில்

நாவன்மை காட்டியவர்கள்—தமிழில் பேசத் தொடங்கினர்.

'தமிழில் பேசினால்தான் மக்கள் கேட்பர், எனும் நிலையை உண்டு பண்ணியவர் திரு. வி. க. இது பெரும் புரட்சியன்றோ? திரு. வி. க. நிகழ்த்திய முதல் புரட்சி இது.

அதிகார உலகின் மீதும் "தேசபக்தன்" கருத்துச் செலுத்தி வந்தான்; அதிகாரிகளின் நல்ல செயல்களைப் போற்றினான்; மற்றச் செயல்களைக் கண்டித்தான் அதனால் அதிகாரிகளின் தவறுதல்கள் தேச பக்தனில் வெளிவந்தன. அத் துறையில் 'தேச பக்தன்' செய்த கிளர்ச்சி அதிகாரிகளுக்குப் பேரிடி ஆயிற்று. "'தேச பக்த'னில் என்ன வந்திருக்கிறது? என்ன வந்திருக்கிறது?" என்று தெரிந்துகொள்ள அதிகாரிகள் அலைவார்கள்.

தேசபக்தியைப் பலவாறு வளர்த்து வந்தான் 'தேச பக்தன்.' அவற்றுள் ஒன்று, தலைவர்களிடத்துப் பக்தியை வளர்த்தமை. லோகமான்ய பாலகங்காதர திலகர், அன்னி பெசன்ட் அம்மையார் ஆகியோரின் புகழ்களை ஓதி வந்தான் தேசபக்தன்.

ஆசிரியர் திரு. வி. க.வின் மேசை மீது திலகர் பெருமானின் திருமுக உருவம் பொலியும். அஃது அவர் கருத்தில் நின்று உருத்திர கனலை எழுப்பும்; எழுதுகோலைப் பாசுபதமாக்கும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு சூன் மாதம் இருபத்து நான்காம் தேதி அன்னி பெசன்ட் அம்மையார் காப்பில் வைக்கப்பட்டார். அதையொட்டி ஸர் எஸ். மணி அய்யர் தமது ஸர் பட்டம் துறந்தார். அதிகார வர்க்கம் அவரை ஒறுக்கப் போகிறது என்ற செய்தி எங்கும் பரவியது. அச்சமயம் 'மயிலை முனீந்திரர்' என்ற தலைப்பிட்டு ஓர் ஆசிரியக் கட்டுரை எழுதினார் திரு. வி. க.

அக்கட்டுரையைப் படித்த ஐயர் 'தமிழ் மொழியின் சக்தியைக் கண்டேன், கண்டேன்' என்று கூறி திரு. வி. க.வுக்கு ஆசி கூறினர். *

---

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.



டாக்டர் வரதராஜுலு நாயுடு மதுரையில் சிறைப்பட்ட போது, வீர முழக்கம் செய்தான் "தேசபக்தன்." ஹார்னிமன் நாடு கடத்தப்பட்டபோது பக்திக் கனல் உமிழ்ந்தான் "தேசபக்தன்".

கிலாபத் கிளர்ச்சி, சத்தியாக்கிரக இயக்கம், பஞ்சாப் படுகொலை முதலியன நிகழ்ந்த வேளைகளில் "தேசபக்தன்" நிலையம் காளி கட்டமாயிற்று. அங்கே காளி நடம் புரிந்த வண்ணமிருப்பாள். அந்நடனம் உமிழும் சுவாலை எரிமலை போன்றிருக்கும்.

அந்தக் காலத்தில் இவ்வாறு ஒரு தினசரிப் பத்திரிகை நடக்குமாயின் அதிகார வர்க்கம் வாளா இருக்குமோ? இராது அன்றோ!

அதிகார வர்க்கத்தின் சில்விஷமம் போலீஸ் கமிஷனரின் வாய்மொழி எச்சரிக்கையளவில் நின்றது. ஒரு முறையா? பலமுறை திரு வி. க.வை அழைத்து அழைத்து வாய்மொழி எச்சரிக்கை விடுத்த வண்ணம் இருந்தார் கமிஷனர்.

ஒரு நாள் திரு. வி. க.வின் மாணாக்கருள் ஒருவர் வந்தார். "இன்று மாலை தங்களுக்குப் பறிமுதல் கட்டளை கிடைக்கும்" என்று சொல்லிப் போனார். அவர் அரசாங்க ஊழியர். அதைக் காமத்துக்கு அறிவித்தார் திரு. வி. க.

"அப்படியாயின் இரண்டாவது ஈடு காணம் கேட்கப்படும். இரண்டாவது முறை ஈடு காணம் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் பத்தாயிரம் ரூபாய் வரை இருக்கும். அதற்குரிய முயற்சியை இப்போதே தொடங்குதல் வேண்டும். நீங்கள் எங்கேனும் போய் இரண்டு நாள் தங்கி வாருங்கள். அதற்குள் நான் விண்ணையும் மண்ணையும் புரட்டி விடுவேன்!" என்றார் காமத். காமத்தின் வேண்டுதலுக்கு திரு. வி. க. இணங்கினாரா? இல்லை, இணங்க மறுத்தார்.

"பழைய நிலையை மறந்து விடுங்கள். இப்போது நீங்கள் அரசியல் உலகில் வாழ்கிறீர்கள். தந்திரம் வேண்டும்.

வழங்க வேண்டினார். பயன் விளையவில்லை. ஆணவம் கொண்ட தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைமைக்குப் புத்தி புகட்ட எண்ணினார் திரு. வி. க.

காவேரிப்பாக்கத்தில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு நண்பர்களைக் கேட்டுக்கொண்டார். அவ்வாறே செய்தார்கள். தண்டபாணிப் பிள்ளையுடன் காவேரிப்பாக்கம் சென்றார் திரு. வி.'க. பெருங்கூட்டம் கூடியிருத்தல் கண்டார். தேர்தல் நியமனத்தில் ஊழல் நிகழ்ந்ததை விளக்கினார்.

''வேலூர் காங்கிரஸ் ஜில்லா கோர்ட் போன்றது. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஹைகோர்ட் போன்றது. இரண்டு இடத்திலும் நியாயம் கிடைக்கவில்லை. பின் எங்கே போக வேண்டும்? உங்களிடம்! மக்களிடம், உங்கள் முன் நியாயத்துக்கு விண்ணப்பம் செய்கிறேன். நான் காங்கிரஸ் காரன். என் உடலில் காங்கிரஸ் ரத்தம் ஓடுகிறது. உங்கள் முன்னிலையில் காங்கிரஸ் சார்பில் முனுசாமி முதலியாரை உங்கள் வட்டத்துக்கு நடைபெறும் ஜில்லா போர்டு தேர்தலில் வேட்பாளராக நிறுத்த விரும்புகிறேன். உங்கள் சம்மதம் வேண்டும். கை தூக்குங்கள்'' என்றார் எல்லோரும் கை தூக்கினர்.

''முனுசாமி முதலியார் காங்கிரஸ் சார்பில் வேட்பாளராக நியமிக்கப்பட்டார்'' என்று அறிவித்தார் திரு. வி. க.

திரு. வி. க.வை ஆதரித்துத் தண்டபாணிப் பிள்ளையும், டாக்டர் மாசிலாமணி முதலியாரும் முழங்கினர். இதைக் கேள்வியுற்ற சென்னைக் காங்கிரஸ் தொண்டர் முப்பது பேர் காவேரிப்பாக்கத்துக்கு ஓடி வந்தனர். 'எங்கள் பழந் தலைவர் பக்கம் நிற்போம்' என்றனர்.

தேர்தல் சூடு பிடித்தது. தமிழ் நாட்டில் உள்ள புதுக் காங்கிரஸ் தலைவர் சிலரும் தொண்டர் பலரும்

---

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.



காவேரிப்பாக்கத்தில் குழுமினர். சிறை புகுந்த செல்வங்களும், அன்னங்களும் செறிந்தன. புதுக் காங்கிரசின் சக்தி அங்கே சண்ட தாண்டவம் புரிந்தது.

ஒவ்வொருவரும் சிறையில் தாம் அநுபவித்த துன்பங்களை எடுத்து ஓதினர். திரு.வி.க. சிறை செல்லாதவர் என்று இடையிடையே முழக்கினர்.

திரு.வி.க.வும், நண்பர்களும், தொண்டர்களும் காவேரிப்பாக்கம் வட்டாரம் முழுவதும் சுற்றினர். நிலைமையை விளக்கினர்.

இரு முகாம்களிலும் காங்கிரஸ் கொடி; கதர் உடை. போராட்டம் நன்றாயிருந்தது. முடிவைத் தென்னாடே ஆவலுடன் எதிர்பார்த்தது.

முடிவு என்ன? திரு.வி.க.வுக்கு வெற்றி. முனுசாமி முதலியார் ஆயிரக்கணக்கில் பெருவாரியான ஓட்டு பெற்று வெற்றியடைந்தார்.

''இஃது எனது வெற்றியன்று; நீதிக்கும் அறத்துக்கும் ஏற்பட்ட வெற்றி' என்றார் திரு.வி.க.

ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நெருங்கியது. வெற்றி பெற்ற அங்கத்தினர் எல்லோரும் சென்னை போந்தனர். காங்கிரஸ் மாளிகையில் கூடினர். இராஜகோபாலாச்சாரியாரே காரியங்களை நடத்தினார். ஜில்லா போர்டு தலைமைக்குக் கண்ணப்ப முதலியார் நியமிக்கப் பட்டார்.

தேர்தலில் வெற்றி பெற்றவர் எவர்? காங்கிரசால் நியமிக்கப்பட்ட கண்ணப்ப முதலியாரா? இல்லை; இல்லை. காங்கிரஸ் அல்லாத நவாப் அப்துல் ஹக்கீம்.

காங்கிரஸ் அங்கத்தினரே பெரும்பான்மையினராக உள்ள ஜில்லா போர்டில் காங்கிரஸ் அல்லாதவர் ஒருவர் வெற்றி பெற்றது எவ்வாறு?

காரணம் சொல்லவா வேண்டும்? காங்கிரஸ்காரர் எல்லோரும் கண்ணப்ப முதலியாருக்கு வாக்களிக்கவில்லை.

தயக்கம் வேண்டாம். உங்கள் தயக்கத்தால் தேசபக்தனுக்குக் கேடு விளையும்" என்றார் காமத்.

திரு. வி. க. இரக்கம் கொண்டார்; காமத்தின் வேண்டுதலுக்கு இணங்கினார் "தேசபக்தன்" காரியாலயத்திலிருந்து வெளியேறினார்.

இருவர் அவருக்குத் துணைபோயினர். ஒருவர் இராயப்பேட்டை பாலசுந்தர முதலியார். மற்றொருவர் சாமிநாதசர்மா. மூவரும் மயிலாப்பூர் சென்றனர்; குளக்கரையில் அமர்ந்தனர்; பலப்பலப் பேசினர்.

இரவு மணி எட்டு. சாமிநாத சர்மா தன் வீட்டுக்குச் சென்றார். அப்பமும் பாலும் கொணர்ந்தார். அப்பத்தை உண்டனர். பாலை அருந்தினர். சாமிநாத சர்மா வீடு சேர்ந்தார். மற்ற இருவரும் பலகை வாராவதி சேர்ந்தனர்; படகு ஏறினர். திருப்போரூர் சென்றனர். அங்கே ஒரு நாள் தங்கினர். பின் திருக்கழுக்குன்றம் சேர்ந்தனர். அங்கே இரண்டு நாள் தங்கினர். எப்பத்திரிகையிலும் "தேசபக்தன்" பறிமுதல் செய்தி காணப்படவில்லை. இருவரும் சென்னை திரும்பினர். 'தேசபக்தன்' காரியாலயம் சேர்ந்தனர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் 'தேசபக்தன்' ஆபீஸ் போந்தார் என்றும், ஆசிரியர் திரு. வி. க.வைத் தேடினார் என்றும் அறிவித்தார் மானேஜர்.

உடனே திரு. வி. க. என்ன செய்தார்? டெலிபோனை எடுத்தார்; போலீஸ் கமிஷனரைக் கூப்பிட்டார்.

"இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்து என்னைத் தேடினார் என்று கேள்வியுற்றேன். நான் வெளியூர் சென்றிருந்தேன். என்ன செய்தி?" என்று கேட்டார்.

"இன்ஸ்பெக்டரை இப்போது அனுப்புகிறேன்" என்று கூறினார் கமிஷனர்.

முக்கால் மணி நேரத்துக்குள் இன்ஸ்பெக்டர் கோதண்டராம முதலியார் வந்தார்; திரு. வி. க.வைக் கண்டார். பறிமுதல் கட்டளையை வழங்கினார்; சென்றார். (28.2.1919)



சிறிது நேரத்தில் காமத் வந்தார்; பறிமுதல் கட்டளையைக் காட்டினார் திரு.வி.க.

"போதிய முயற்சி செய்திருக்கிறேன்; பெசன்ட் அம்மையார் உதவி செய்வதாக உறுதியளித்திருக்கிறார்" என்றார் காமத்.

அடுத்த நாள். அதாவது, ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தேதி.

"பெண்ட்லண்ட் பிரபு 'தேசபக்தன்' மீது பாணம் செலுத்தியிருக்கிறார்! தேசபக்தன் இரத்தம் சொரிகிறான்! தேசபக்தர்களே! பணத்தைச் சொரியுங்கள்!"

இவ்வாறு 'தேசபக்தன்' முதற் பக்கத்தில் பெரிய பெரிய கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டார். திரு.வி.க. அன்று முதல் பெண்ட்லண்ட் ஆட்சியின் அழகுகளை எடுத்து எடுத்துத் "தேசபக்த"னில் எழுதி வந்தார் திரு.வி.க.

எட்டு நாட்கள் சென்றன. ஒன்பதாம் நாள் காலையில் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் சேலத்திலிருந்து பணம் திரட்டி வந்தார். நண்பர் சிலர் அளித்த தொகை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ரூபாய் ஐயாயிரம் இருந்தது.

பத்தாம் நாள் காலை. திரு.வி.க.வும் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியாரும் மாஜிஸ்திரேட்டிடம் சென்றனர். ஐயாயிரம் ரூபாய் ஈடு காணம் செலுத்தினர். "தேசபக்தன்" என்றும் போலவே வந்தான்.

பாரதியார், வ.வே.சு. ஐயர் ஆகிய இருவரும் அப்போது புதுவையில் இருந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவில்

காலடி வைத்தல் கூடாது என்ற தடை இருந்தது. அத் தடையை நீக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தான் 'தேசபக்தன்'. பாரதியார் கடலூரில் கைது செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பபட்டது அறிந்தான் 'தேச பக்தன்''. சீறினான். பாரதியார் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டார்.

இவ்வாறு இருக்கும்போது, திரு.வி.க. அவர்களைக் கலவாமல் பிரிட்டிஷ் இந்தியா அச்சுக் கூடத்தை ஒத்தி வைத்து விட்டார் காமத். அதாவது அந்த அச்சுக் கூடத்தை அடகு வைத்துப் பணம் வாங்கிவிட்டார். இஃதறிந்தார் திரு.வி.க. பிரிட்டிஷ் இந்தியா அச்சுக்கூடம் 'தேசபக்தன்' லிமிடெட்டில் சேராதது. அதன் பதிவுப் பொறுப்பு திரு.வி.கவினுடையது. எனவே, அது சம்பந்தமாக ஒரு காரியம் செய்தால் திரு.வி.க.வைக் கலந்தன்றோ செய்தல் வேண்டும்!

"நம் பெயர் மீது பதிவு பெற்றுள்ள அச்சகத்தை நமக்குத் தெரியாமலே ஒத்தி வைப்பது அடாத செயல்" என்று எண்ணினார் திரு வி.க. 'தேசபக்த'னை விட்டு விலகுவதே நல்லது என்று உறுதி கொண்டார். 22-7-1920இல் தமது நிலையை விளக்கித் "தேசபக்த"னில் தலையங்கம் எழுதினார் திரு.வி.க. 'தேசபக்தன்' பத்திரிகையினின்றும் விலகினார்.

# 9. "நவசக்தி"யும் திரு.வி.க.வும்

'தேசபக்தனை' விட்டு விலகினார் திரு.வி.க. என்ற செய்தி தமிழ்நாடு முழுவதும் பரவியது. புதிய தினப் பதிப்பு ஒன்று தொடங்குதல் வேண்டும் என்று தந்திகள் பறந்து வந்தன; கடிதங்கள் வந்து குவிந்தன. சிலர் நேரில் போந்தனர்; ஊக்கமூட்டினர்.

சென்னை பக்கிங்ஹாம் கர்நாடிக் மில் தொழிலாளர் ஐயாயிரம் ரூபாய் நிதி திரட்டி திரு.வி.க.வுக்கு அளித்தனர். பத்திரிகை தொடங்குமாறு வேண்டினர். வேறு சில நண்பர் இரண்டாயிரம் ரூபா திரட்டித் தந்தனர். மொத்தம் ஏழாயிரம் ரூபா கிடைத்தது.

ஓர் அச்சுக்கூடம் வாங்கப்பட்டது. ஒரு வாரப்பத்திரிகையும் தொடங்கப்பட்டது. அச்சுக்கூடத்துக்குச் "சாது அச்சுக்கூடம்" என்று பெயர் சூட்டினார். வாரப்பதிப்புக்கு "நவசக்தி" என்று பெயர் சூட்டினார்,

"நவசக்தி" முதல் சிலம்பு-முதல் பரல்—1920ஆம் ஆண்டு அக்டோபர் 22ஆம் தேதி வெளி வந்தது.

திரு.வி.க. "தேச பக்தன்" ஆசிரியராயிருந்த போதும் ஒருவித நோக்கம் கொண்டே தொண்டாற்றினார். நோக்கத்தில் எவ்வித வேறுபாடும் இல்லை. "நவசக்தி"யிலும் அவ்வாறே. பின் வேறுபாடு எங்கே? வளர்ப்பு முறையில் வேறுபாடு நிகழ்ந்தது. ஏன்? தேச பக்தன் தினப் பதிப்பு. நவசக்தியோ வாரப் பதிப்பு. ஆதலின் வளர்ப்பு முறையே வேறாக்க நேர்ந்தது

'தேச பக்தன்' மகன். "நவசக்தி" மகள். "தேச பக்தன்" லிமிடெட்டுள் புகுந்தவன். "நவசக்தி" அதில்

புகாதவள். "தேச பக்த"னில் பெரிதும் அழிவு வேலை நடந்தது.

ஆவேசமும் பரபரப்பும் 'தேசபக்த'னில் அலைந்தன. அன்பும் அமைதியும் "நவசக்தி"யில் தவழ்ந்தன. 'தேச பக்தன்" அதி தேவதை ருத்ரன்; எழுதுகோல் பாசுபதம். "நவசக்தி"யின் அதி தேவதை சிவம்; எழுதுகோல் குழல். "தேச பக்தன்" நடையில் காளி; நவசக்தி நடையில் உமை.

அந்நாள் 'நவசக்தி'யில் அரசியலே பெரும் இடம் பெற்று வரும். இளையிடையே சமூக சீர்திருத்தம், பெண் நலன், மொழிச்சிறப்பு, கலையாக்கம் முதலியன முகிழ்க்கும். இறுதியில் "நவசக்தி" சன்மார்க்கமும் சமதர்மமும் கமழ்ந்தாள்.*

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து இரண்டாம் ஆண்டு காங்கிரஸில் சுயராஜ்யக் கட்சி தோன்றியது. அக்கட்சியைத் தோற்றுவித்தவர் தேசபந்து சி.ஆர்.தாஸ்.

சுயராஜ்யக் கட்சியால் காங்கிரஸ் அழியுமோ என்ற ஐயம் தோன்றியது. எனவே, காங்கிரசுக்கென்று தினப் பதிப்பு ஒன்று வேண்டும் என்ற எண்ணம் பரவலாயிற்று.

இந்நிலையில், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கூட்டம் மதுரையில் நடைபெற்றது. காங்கிரசுக்கென்று காங்கிரஸ் சார்பில் தினப்பதிப்பு ஒன்று தமிழில் வெளியிடுவது என்றும், அதன் பொருட்டுப் பத்தாயிரம் ரூபாய் வழங்குவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தப் பத்தாயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு "நவசக்தி"யைத் தினப் பதிப்பாக வெளியிடுமாறு பலர் திரு.வி.க.வை வற்புறுத்தினர்.

திரு.வி.க. இணங்கினார் அல்லர். அவ்விடத்திலேயே மறுத்து விட்டார். அம்மறுப்பு கண்டு சீறியவர் பலர்.

---

*திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.



குறிப்பிடத் தக்கவர் இருவர். ஒருவர் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரி யார்; இன்னொருவர் பெரியார் ஈ.வெ.ரா.

ஆந்திர கேசரி பிரகாசம் பந்தலு அந்தப் பத்தாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டார். "ஸ்வராஜ்யா" என்றொரு தமிழ்த் தினசரி நடத்தினார். அப் பத்திரிகை நீண்ட நாள் நடைபெறவில்லை; நிறுத்தப் பெற்றது. 'ஸ்வராஜ்யா' கம்பெனிக்கும் தமிழ் நாட்டுக் காங்கிரசுக்குமிடையே சட்டப் போர் நடந்தது.

தமிழ் நாட்டுக் காங்கிரசிடம் பத்தாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு பத்திரிகை நடத்த மறுத்தாரே திரு.வி.க. அஃது எத்தகைய சிறப்பான ஒன்று!

பெரியார் ஈ.வே ரா. ஈரோட்டினின்றும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் திரட்டி வந்தார். "நவசக்தி"யைத் தினப் பதிப்பாக்குமாறு திரு.வி.க.வை வற்புறுத்தினார். தினப் பதிப்புக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் போதாது என்றார் திரு.வி.க.. மும்முறை ஒன்று வெளியிடல் இயலும் என்றார். இருவரும் இணங்கினர். "நவசக்தி" வாரப்பதிப்புடன் மும்முறை ஒன்றும் வெளிவந்தது அப்போது தான் ரா கிருஷ்ண மூர்த்தி (கல்கி) "நவசக்தி' ஆசிரியக் கூடத்தில் சேர்ந்தார். மும்முறையைத் தினமாக்க எண்ணி வந்த பெரியார் வைக்கம் அடைந்து தீண்டாமை ஒழிப்புப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தார். "நவசக்தி" மும்முறை நின்றது; வாரப் பதிப்பு நடந்தது.

1924,1925,1926-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஸ்தல ஸ்தாபனத் தேர்தல், சட்ட சபைத் தேர்தல் முதலிய வற்றில் காங்கிரஸ் வெற்றி பெறும் பொருட்டு "நவசக்தி" செய்த தொண்டு அளப்பரிது. காங்கிரஸ் மந்திரி சபை அமைந்தபோது, 'நவசக்தி' நல்ல தொண்டு செய்தாள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரசில் புரட்சி செய்த போது 'நவசக்தி' நேதாஜியை ஆதரித்து நின்றாள். 1941 ஜனவரி முதல் "நவசக்தி"யை நடத்தும் பொறுப்பி லிருந்து திரு.வி.க. விலகிக் கொண்டார். அப்பொறுப்பு அதுவரை நவசக்தியில் உதவியாசிரியராயிருந்த சக்திதாஸ் சுப்பிரமணியத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

# 10. காங்கிரசும் திரு.வி.க.வும்

இளமையிலேயே திரு.வி.க.வின் உள்ளத்தில் காங்கிரஸ் விதை விழுந்து விட்டது. அது முளை விட்டுச் செடியாகி மரமானது 1917 ஆம் ஆண்டில் எனலாம்.

அந்நாளில் ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம் என்று தென்னாட்டுக் காங்கிரஸ் பிரியவில்லை. அது, சென்னை மாகாணக் காங்கிரஸ் என்றே வழங்கப்பட்டு வந்தது. பின்னரே (25-8-1921) சென்னை மாகாணக் காங்கிரஸ் மொழி வழியாகப் பிரிக்கப்பட்டது; ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம் என்று பிரிக்கப்பட்டது.

தொடக்கத்தில் காங்கிரஸ் சார்பில் கூடும் கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை மறுப்பதே திரு.வி.க.வின் தொண்டாக விளங்கியது.

அன்னி பெசன்ட் அம்மையார் காவலில் வைக்கப் பட்டதைக் கண்டித்து நடைபெற்ற கூட்டங்கள் பலவற்றில் திரு. வி. க. கலந்துகொண்டு பேசினார்.

1917 ஆகஸ்டில் பெசன்ட் அம்மையார் காவலி லின்றும் வெளிவந்தார்; 1917 இறுதியில் கூடிய அகில இந்திய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் மாநாட்டுத் தலைமைச் சொற்பொழிவு எல்லா மொழிகளிலும் முன்னரே பெயர்த்து வைக்கப் பட்டது.

காங்கிரஸ் மேடையில் தலைவர் உரை படிக்கப் பெறும் அதே சமயத்தில், இந்தியா முழுவதும் கூட்டங்கள் கூட்டி, அந்த அந்த மொழிகளில் அந்தத் தலைமையுரை



யைப் படிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அந்த ஏற்பாட்டின்படி சென்னையில் பெசன்ட் அம்மையாராக நின்று தொண்டாற்றினார் திரு.வி.க.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு ரௌலட் சட்டத்தைக் கண்டது இந்தியா. அந்தச் சட்டத்தை எதிர்க்க உறுதிகொண்டார் மகாத்மா காந்தி. காங்கிரஸ் முழுவதும் காந்தி வசமாகாத காலம் அது. எனவே நாடு முழுவதும் சத்தியாக்கிரக சபைகள் நிறுவி, அச்சபை மூலம் போராடத் திட்டமிட்டார். அதன் பொருட்டு அவர் சென்னை நோக்கினார். காந்தியடிகளைச் சந்திக்க விரும்பினார் திரு.வி.க. அப்போது தேசத் தொண்டு புரியும் பொருட்டுச் சேலம் சென்றிருந்தார்; சேலம் விஜய ராகவாச்சாரியாரிடம் தமது கருத்தைத் தெரிவித்தார்.

விஜயராகவாச்சாரியார் என் செய்தார்? கடிதம் ஒன்று கொடுத்தார். அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு புறப் பட்டார் திரு.வி.க. அரக்கோணம் சேர்ந்தார்.

பம்பாய் மெயிலில் வந்தார் மகாத்மா. அவரைச் சந்தித்தார் திரு.வி.க. கடிதத்தைக் கொடுத்தார். படித்தார் மகாத்மா.

"தேச பக்தன் எம்மொழிப் பத்திரிகை?" என்று வினவினார்.

"தமிழ்ப் பத்திரிகை" என்றார் திரு.வி.க.

"நீர் பட்டதாரியா?" என்று கேட்டார் மகாத்மா.

"அல்லன்; மெட்ரிகுலேஷன் வரை ஆங்கிலம் பயின்றவன்; தமிழாசிரியனாக இருந்தவன். எனது ஆங்கில அறிவு மொழி பெயர்ப்பு அளவில் பயன்பட்டு வருகிறது" என்றார் திரு.வி.க.

"என் பேச்சை மொழி பெயர்ப்பீரோ?" இது மகாத்மா வின் கேள்வி.

''தொழிலாளர் சார்பில் கூட்டப் பெறும் கூட்டங்களில் நானே மொழி பெயர்ப்பாளனாக இருப்பேன். மற்றக் கூட்டங்களில் எப்படியோ?'' என்றார் திரு.வி.க.*

சென்னை கதீட்ரல் ரோட்டிலுள்ள திலகர்பவனத்தில் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் வந்திருந்தார். அவர்தம் விருந்தினராக இருந்தார் மகாத்மா காந்தி. அந்த இடத்தில் இப்போது கல் ஒன்று பதிக்கப்பட்டுள்ளது. சென்னையில் சத்தியாக்கிரக சபை ஒன்று அமைத்தார். மகாத்மா. சத்தியாக்கிரக உடன்படிக்கை ஒன்று அவரால் விளக்கப்பட்டது. சத்தியாக்கிரகியாக விரும்புவோர் கையெழுத்திடலாம் என்றார் மகாத்மா, பலர் கையெழுத்திட்டனர். திரு.வி.க.வும் சத்தியாக்கிரக உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்; சத்தியாக்கிரகியானார்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு, ஏப்ரல் ஆறாந்தேதி, ஞாயிற்றுக்கிழமை சத்தியாக்கிரக நாளாகக் கொண்டாடல் வேண்டும் என்று அறிக்கை

---

மகாத்மாவின் ஞாபக சக்தி அதி ஆச்சரியமானது. ''நவசக்தி'' ஆசிரியர் திரு.வி. கலியாண சுந்தர முதலியார், அடிகளைப் பார்க்கச் சென்றபோது, காந்திஜி ''முதன் முதல் சென்னையில் என்னுடைய பிரசங்கங்களை மொழி பெயர்த்தவர் நீங்கள்தானே. ஒரு முறை ஒரு சொற்றொடரை நீங்கள் விட்டுவிட்டீர்கள். நான் திருத்தினேன். நினைவிருக்கிறதா?'' என்றார்.

ஆறு வருஷத்துக்கு முன் நடந்த சில கூட்டங்களில் தமது பிரசங்கத்தை மொழி பெயர்த்தவரையும் அவர் ஒரு சொற்றொடரை விட்டதையும் நினைவு வைத்திருந்தாரெனில் அது எத்தகைய அதிசயமான ஞாபக சக்தி!

—மாறுதல் வேண்டாதான் (ராகி)
நவசக்தி 7-9-1927

* திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.



விடுத்தார் மகாத்மா. அத்திருநாளைக் கொண்டாட வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை நகரம் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இராயப்பேட்டை வட்டத்தின் பொறுப்பு திரு. வி. க.விடம் ஒப்படைக்கப்பட்டது. சத்தியாக்கிரக நாளைப் பெரும் அளவில் கொண்டாடுதற்குப் பாடுபட்டார் திரு. வி. க.

தொடர்ந்து நடைபெற்றது ஜாலியன் வாலா பாக் படுகொலை. அப்படுகொலையைக் கண்டித்துச் சென்னையில் கூட்டங்கள் பல நடந்தன. அக்கூட்டங்கள் பெரிதும் சுப்பிரமணிய சிவாவினால் கூட்டப்பட்டன. அக்கூட்டங்களில் பேசினார் திரு. வி. க. டையரின் அரக்கச் செயலையும் ஓட்வியரின் மற ஆட்சியையும் கண்டித்தார். இவற்றிற்கெல்லாம் இடம் தந்த இராஜப் பிரதிநிதி செம்ஸ்பர்டைத் திரும்ப அழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு, டிசம்பர் மாதம் பதினெழாம் தேதி, லோகமான்ய பாலகங்காதர திலகர் சென்னை நண்ணினார். திலகரைக் காணத் தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பராய காமத், திரு. வி. க. ஆகிய மூவரும் சென்றனர்.

திலகர் பெருமான் ஏழை பங்காளர். அவர் செல்வர் வீடுகளில் தங்கலாகாது. ஏழைகள் வீட்டிலேயே தங்க வேண்டும் என்று வேண்டுதல் விடுத்தார் திரு. வி. க. அவர்தம் வேண்டுதலுக்கு இணங்கினார் திலகர்.

''தேசபக்தன்'' காரியதரிசி சுப்பராய காமத் வீட்டில் மூன்று நாள் தங்கியிருந்தார். அந்த மூன்று நாளும் திலகருடன் நெருங்கிப் பழகி அளவளாவினார் திரு. வி. க.

''புனாவுக்கு வாருங்கள்'' என்று திரு. வி. க.வை அழைத்தார் திலகர். ஆனால், அந்த எண்ணம் ஈடேறாமலே போய் விட்டது.

1920ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதி திலகர் பெருமான் விண்ணுலகு ஏகினார். அப்போது திரு. வி. க. தேசபக்தன் ஆசிரிய பீடத்தில் இல்லை.

பின்னே ஒத்துழையாமைப் போர் தொடங்கியது. அதில் பெரும் அளவு ஈடுபட்டார் திரு. வி. க. பல்லாயிரம் மக்கட்குச் சிறை வாழ்வு கிட்டியது. ஆனால் திரு. வி. க. வுக்கு அவ்வாழ்வு கிட்டவில்லை. காரணம், சென்னை பக்கிங்ஹாம் மில் தொழிலாளர் போராட்டத்தில் அவர் சிக்கியதே.

1922ஆம் ஆண்டு காங்கிரஸ் கயாவில் கூடியது. தேசபந்து சித்தரஞ்சன் தாசர் தலைமை வகித்தார். மகாத்மா சிறையிலிருந்தார். காங்கிரஸ் மேற்கொண்டிருந்த ஒத்துழையாமைத் திட்டத்தில் மாறுதல் வேண்டும் என்பது சித்தரஞ்சன் தாசரின் விருப்பம். மகாத்மா சிறையிலிருக்கும் போது காங்கிரஸ் திட்டத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படுத்தல் கூடாது என்பது இராஜ கோபாலாச்சாரியார் உள்ளிட்ட பலரின் விருப்பம்.

மாறுதல் வேண்டுவோர், மாறுதல் வேண்டாதார் என்று காங்கிரசார் இரு கூறாயினர். மாறுதல் வேண்டுவோரின் கட்சியாக சுயராஜ்யக் கட்சியைத் தோற்றுவித்தார் தேசபந்து சித்தரஞ்சன் தாசர். சட்டசபையை விலக்குதல் கூடாது என்பதும், சட்டசபையைக் கைப்பற்றி முட்டுக்கட்டை போட்டு இரட்டையாட்சியை ஒடுக்குதல் வேண்டும் என்பதும் சுயராஜ்யக் கட்சியின் கொள்கை.

திரு. வி. க. மாறுதல் வேண்டாதாரை ஆதரித்தார். காங்கிரசில் பிளவு கூடாது என்பது திரு. வி. க வின் கருத்து.

சுயராஜ்யக் கட்சி காங்கிரசுக்குள்ளே இருக்க இடம் தரலாகாது என்றும், அவ்வாறு இடம் தந்தால் இன்னும் பல கட்சிகள் தோன்றும் வாய்ப்புண்டாகும் என்றும் திரு. வி. க. பிரசாரம் செய்தார். சுயராஜ்யக் கட்சி



காங்கிரசின் ஆதரவு பெற்றுத் தனியே இயங்குதல் நல்லது என்றார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு, பிப்ரவரி மாதம் ஐந்தாந்தேதி, மகாத்மா காந்தி சிறையினின்றும் விடுதலை பெற்றார்; நாட்டு நிலையை நோக்கினார் மகாத்மா; ஆக்கத் தொண்டில் கருத்துச் செலுத்தினார்.

காந்தி—தாஸ்—நேரு ஆகியோர் மூவரும் கூடி ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். அவ்வுடன்படிக்கை பாட்னா உடன்படிக்கை என்றழைக்கப்பட்டது. மாறுதல் வேண்டுவோர் சட்டசபைக்குச் செல்லலாம் என்பதும், மாறுதல் வேண்டாதார் ஆக்க வேலையில் கருத்துச் செலுத்தலாம் என்பதுமே பாட்னா உடன்படிக்கையின் சுருக்கம்.

காங்கிரஸ் ஆக்க வேலையில் கருத்துச் செலுத்தியது. சுயராஜ்யக் கட்சி சட்டசபையில் கருத்துச் செலுத்தியது.

சுயராஜ்யக் கட்சிக்குப் பல இடங்களில் வெற்றி கிடைத்தது. மத்திய மாகாணத்திலும், வங்கத்திலும் சட்டசபையில் முட்டுக்கட்டையிட்டது சுயராஜ்யக் கட்சி; இரட்டையாட்சி குலைந்தது. மத்தியச் சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியின் செல்வாக்குப் பெருகியது. இவ் வெற்றி கண்டு, பெரிதும் ஊக்கம் கொண்டார் திரு. எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார்.

காங்கிரஸ் என்றும் சுயராஜ்யக் கட்சி என்றும் தனித் தனியே பிரிந்து நிற்றல் கூடாது என்றும், சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளைக் காங்கிரசே ஏற்று நடத்தல் வேண்டும் என்றும் பேசி வந்தார் திரு. வி. க. எழுதினார். அதனால் பழைய ஒத்துழையாமையை மீண்டும் உயிர்ப்பித்தல் கூடும் என்பது திரு. வி. க.வின் உட்கிடக்கை.

இந்நிலையில் 1924 நவம்பர் 15, 16 தேதிகளில் திருவண்ணாமலையில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூடியது.

அம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் ஈ. வே. ரா. அம்மாநாட்டுத் தீர்மானங்களில் முடியாயிலங்கிய தீர்மானம் சட்டசபை நுழைவு பற்றியது. அத்தீர்மானத்தை எதிர்த்து வீழ்த்தும் பொருட்டுச் சிறை சென்ற செல்வங்கள் கூடின.

தீர்மானத்தைக் கொண்டு வரும் பொறுப்பு திரு. வி. க. மீது வீழ்ந்தது. அச்சுமையை ஏற்றுக்கொண்டார் திரு. வி. க. தீர்மானத்தை மாநாட்டின் முன் கொண்டு வந்தார்.

* "கால நிலை, நாட்டு நிலை, அரசியலில் பிடிவாதம் கூடாது என்பது, சட்டசபையைப் பற்றிக் காட்டினால் நாட்டின் வாக்காளரில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் சார்பினராயிருத்தல் அரசாங்கத்துக்குப் புலனாகும் என்பது முதலியவற்றை விளக்கி, இப்போதைய நிலையில் ஆக்க வேலையுடன் சட்டசபையைப் பற்றி முட்டுக்கட்டையிட்ட பின்னரே பழைய ஒத்துழையாமை எழுதற்கு இடமுண்டாகும். ஆதலின் ஒத்துழையாமை உள்ளமுடையோர், அதில் உறுதியுடையோர், அதை விரைவில் உயிர்ப்பிக்க வேண்டுமென்ற வேட்கையுடையோர் இத் தீர்மானத்தை ஆதரிக்க முன் வருதல் வேண்டும் இல்லையேல் காங்கிரசின் ஆக்கம் நாளுக்கு நாள் குறைந்து போகும்.

காங்கிரஸ் பெரியது; நாடு பெரியது; சுயராஜ்யம் பெரிது; பிடிவாதம் பெரியதன்று; என்று கூறித் தீர்மானத்துக்கு ஆதரவு நல்குமாறு பிரதிநிதிகளை வணங்கிக் கேட்டுக் கொண்டார் திரு. வி. க.

இதற்குத் திருத்தப் பிரரேபணை ஒன்று கொண்டு வந்தார் ஹாலாஸ்யம் அய்யர். சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இதனை ஆதரித்தார். ஆனால் இந்தத் திருத்தம் தோல்வியுற்றது. திரு. வி. க. கொண்டு வந்த அசல் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

* திருவண்ணாமலை மாநாடு பற்றி அகஸ்தியர் (ரா. கிருஷ்ணமூர்த்தி—கல்கி) "நவசக்தி"யில் பின்வருமாறு குறிப்பிட்டார் :-

---

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.



1920ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் நடந்த மாநாட்டிலிருந்து சென்ற மாதம் வரையில் தமிழ்நாட்டில் நடந்துள்ள காங்கிரஸ் கூட்டங்களில் இராஜகோபாலாச்சாரியாரால் ஆதரிக்கப்பட்ட எந்த முக்கிய தீர்மானமும் தோற்றுப்போனதில்லை.

திருவண்ணாமலையில்தான் முதல்முதலாக அவருக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டது. ஒத்துழையாமைத் தொடக்கத்திலிருந்து திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரும் ஆச்சாரியாரும் எதிர்க்கட்சிகளிலிருந்து போராடியதும் இம்மாநாட்டில்தான்."

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டு நவம்பரில் கூடியது தமிழ்நாட்டுக் காங்கிரஸ். இடம் காஞ்சி. இம் மாநாட்டிற்கு திரு. வி. க. தலைமை வகித்தார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டி ஒரு தீர்மானம் கொண்டுவந்தார் எஸ். இராமநாதன். அதை ஆதரித்தார் ஈ. வே. ரா. அத் தீர்மானத்தை நிராகரித்தார் திரு. வி. க.

இதனால் வெகுண்ட ஈ. வே. ரா. காங்கிரசினின்றும் விலகினார். பின்னே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக திரு. வி. க.வும், ஈ. வே. ரா. பெரியாரும் பிணங்கினர். இப் பிணக்கு காரணமாக எழுந்தது பெரியதொரு சூறாவளி.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டு டிசம்பர் மாதம் கான்பூரில் அகில இந்திய காங்கிரஸ் கூடியது. கவியரசி சரோஜினி தலைமை வகித்தார். தேர்தலில் ஈடுபட்டுச் சட்டசபைகளைக் கைப்பற்ற முடிவு செய்தது காங்கிரஸ்.

இம்முடிவு கண்டு பெரிதும் உற்சாகம் கொண்டார் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார்; தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். காங்கிரசின் தேர்தல் முரசாக விளங்கினார் திரு. வி. க. தமிழ்நாடு முழுவதும் சுற்றினார்; பட்டி தொட்டிகள் தோறும்

சென்றார். காங்கிரஸின் செய்தியை எடுத்துக் கூறினார். எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் திரு. வி. க. இவர்களுடன் கலந்து கொண்டார். எஸ். சத்தியமூர்த்தி, ஆர். கே. சண்முகம் செட்டியார், எஸ். முத்தையா முதலியார், ஏ. அரங்கசாமி ஐயங்கார் முதலியோர் ஆங்காங்கே கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டின் ஜில்லாக்கள் பலவற்றிலும் சென்று பிரசாரம் செய்தார் திரு. வி. க. எனினும் செங்கற்பட்டு ஜில்லாவின் பொறுப்பு முழுவதும் அவரிடமே ஒப்படைக்கப் பட்டது. காரணம் செங்கற்பட்டு ஜில்லாவில் பெரிய மலை ஒன்று நின்றது; ஜஸ்டிஸ் மலை.

அம்மலை வீழ்ந்து விட்டால் ஜஸ்டிஸ் கட்சியே வீழ்ந்துவிடும் என்று கருதினர் காங்கிரசார். அம்மலை எது? சர் ஏ. ராமசாமி முதலியார்.

ஏறக்குறைய ஆறு மாத காலம் நாடு முழுவதும் பிரசாரம் செய்தார் திரு. வி. க.

இந்நிலையில் ஒரு வதந்தி பிறந்தது. அவ் வதந்தி காங்கிரஸ் கூட்டத்திலும் உலவியது. என்ன வதந்தி?

"சென்னை மாகாணத்தில் காங்கிரசுக்குப் போதிய அளவு வெற்றி கிடைத்தால் அது சட்டசபையில் முட்டுக் கட்டை போடாது. மந்திரிசபை அமைக்க முயலும்" என்பதே.

ஒருநாள், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பனகல் ராஜா பீட்டர்ஸ் ரோடில் திரு. வி. க.வைச் சந்தித்தார்.

"நீங்கள் முட்டுக்கட்டைப் போடப் போவதாகப் பிரசாரம் செய்கிறீர்கள். மக்கள் ஏமாந்து வாக்களிக்கப் போகிறார்கள். முட்டுக்கட்டை நடக்கப் போவதில்லை. காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தே தீரும்" என்று கூறினார்.

கேட்டார் திரு. வி. க. நேராக எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் வீடு சென்றார். ஐயங்காரைப் பார்த்தார். பனகல் ராஜா சொன்னதை அப்படியே ஐயங்காரிடம் வெளியிட்டார்.



"இதில் ஏதேனும் உண்மை உண்டா?" என்று கேட்டார்.

"காங்கிரசுக்குப் பெருவாரி வெற்றி கிடைத்தால் முட்டுக்கட்டை இடுதல் கூடும். பெரும்பான்மை வெற்றி கிட்டாவிடின் என் செய்வது? சுயேச்சைகளுக்கு ஆதரவு கொடுத்து, சுயேச்சை மந்திரிசபை அமையச் செய்யும். இவ்வாறு நாம் செய்யாவிட்டால் என் ஆகும்? சுயேச்சைகள் ஜஸ்டிஸ் மடியில் விழக்கூடும். அவ்வாறு வீழ்ந்து ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவுடன் மந்திரிசபை அமைக்கவிடாமல் தடுக்கவே சுயேச்சைகளுக்கு ஆதரவு நல்கும். காங்கிரஸ் சுயேச்சை மந்திரிசபை அமையச் செய்யும். அம்மந்திரி சபை கவிழாதவாறு காக்கும். காங்கிரஸ் வட்டாரத்தில் இப்படிப் பேசப்பட்டது உண்மை" என்றார் ஐயங்கார்.

கேட்டார் திரு. வி. க. மனம் உடைந்து போனார்; வீடு சேர்ந்தார்; சிந்தனையில் ஆழ்ந்தார்.

"ஒத்துழையா நோக்குடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டோம். முட்டுக்கட்டையிட்டு மீண்டும் ஒத்துழை யாமையை உயிர்ப்பிப்பது நமது கடமை. மற்றக்கட்சிகள் மீது நாம் ஏன் கருத்துச் செலுத்தவேண்டும்? சுயேச்சைக் கட்சியை முட்டுக்கட்டைக்குப் பயன் படுத்தலாகாதா? ஜஸ்டிஸும் சுயேச்சையும் ஒன்றுபட்டு மந்திரிசபை அமைத்தால் நமக்கென்ன? அச்சபையை உடைக்கக் காங்கிரஸ் முயலலாமன்றோ? இல்லையேல் வெளியே வந்து ஆக்க வேலை செய்யலாமன்றோ? உளத்தில் ஒன்றுகொண்டு வாயால் வேறு பேசி மக்களை ஏமாற்றுவது அறமாகுமா! நாட்டின் கேட்டுக்குக் காரணர் தலைவர்களே!" என்ற எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி நெஞ்சை உறுத்தின. 'காரியக் கூட்டத்தினின்றும் விலகுக' என்று மனச்சான்று ஒலித்தது. காரியக் கூட்டத்தினின்றும் விலக உறுதிகொண்டார்.

---

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.

அவ்வாறே 9-7-1926இல் விலகல் கடிதமும் அனுப்பி விட்டார். அதைத் திரும்பப் பெறுமாறு ஸ்ரீநிவாச ஐயங்காரும், அரங்கசாமி ஐயங்காரும் திரு. வி. க.வை வற்புறுத்தினர்.

அவர்தம் வற்புறுத்தலுக்கு திரு. வி. க. இணங்கினார் அல்லர். தம் மனச்சான்று வழியே உறுதியாக நின்றார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஒன்பதாம் ஆண்டு இறுதியில் லாகூரில் கூடிய காங்கிரஸ் ஒத்துழையாமையை உளங் கொண்டது. ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதாம் ஆண்டில் 'உப்புச் சத்தியாக்கிரகம்' பிறிட்டு எழுந்தது.

திடீரென்று ஒருநாள் சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் திரு. வி. க.வின் இல்லம் போந்தார். அவருடன் கே. பாஷ்யமும் இருந்தார். ஆச்சாரியார் சத்தியாக்கிரக அறிக்கையை நீட்டினார்.

*"யான் உடல் மெலிந்தவன்; ஒதுங்கி நிற்பவன்; போருக்குத் தகுதி இல்லாதவன்; என் கையெழுத்து எற்றுக்கு?" என்று கூறினார் திரு. வி. க.

"உங்களைப் போருக்கு அழைக்க நாங்கள் வரவில்லை. கையெழுத்திடுங்கள்!" என்றார் ஆச்சாரியார்.

"பெயருக்குக் கூடவா பஞ்சம்?" என்று கையெழுத்துப் போட்டார் திரு. வி. க.

உப்புப் போருக்குரிய களமாக வேதாரண்யம் தேர்ந் தெடுக்கப்பட்டது. திருச்சியினின்றும் தண்டுகளுடன் வேதாரண்யம் நோக்கிப் புறப்பட்டார் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார்.

சிதம்பரத்திலிருந்தும் ஒரு படையை நடத்திச் செல்ல முயன்றனர் சிலர். அவருள் தலையாயவர் தண்டபாணிப் பிள்ளை. அப்படைக்குத் தலைமை வகித்து நடத்திச்

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.



செல்லுமாறு திரு. வி. க. வை அழைத்தார் தண்டபாணிப் பிள்ளை. திரு. வி. க.வும் சம்மதம் தெரிவித்தார்; சித்தமானார்.

வேதாரண்யத்தில் இராஜகோபாலாச்சாரியார் பிடிபட்டார். தொடர்ந்து தலைமை வகித்து நடத்துபவர் திரு. வி. க. என்ற வதந்தி கிளம்பியது. அச் செய்தி கேட்ட திரு. வி. க.வும் போர்க்களம் செல்லச் சித்தமானார்.

ஆனால் தொடர்ந்து தலைமை வகித்துப் போரை நடத்துமாறு ஆச்சாரியார் நேரடியாக திரு. வி. க.வுக்குக் கடிதம் எழுதவில்லை. வேறு வகையில் தெரிவிக்கவும் இல்லை. தமக்குப் பின் தலைவராக கே. சந்தானத்தை நியமித்தார் ஆச்சாரியார்.

அவ்வளவில் நின்றாரல்லர். உப்புச் சத்தியாக்கிரகம் வேறு எவ்விடத்திலும் நிகழலாகாதென்றும் வேறு எவ்விடத் தினின்றும் உப்புப் போர்ப் படை புறப்படலாகாதென்றும் அறிக்கை வெளியிட்டார்.

தண்டபாணிப் பிள்ளையின் முயற்சி சிதறியது. திரு. வி. க. வின் எண்ணமும் குலைந்தது.

*கலியாண சுந்தர முதலியார் மூட்டைமுடிச்சுகளைக் கட்டிக்கொண்டு சித்தமாயிருந்தார்; ஏமாற்றப்பட்டார். ஒரு பிராமணரல்லாதார் தலைமை பூண்டு படையைத் திரட்டிச் செல்லப் பிராமணர் கண் பார்க்குமோ?" என்று வகுப்புவாதப் பத்திரிகைகள் எழுதின.

'திரு. வி. க. ஏமாற்றப்பட்டார்' என்று சொல்வதை விட, 'திரு. வி. க. வஞ்சிக்கப்பட்டார்' என்று சொல்வதே பொருந்தும்.

இதனைப் பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்சினையாகக் காண்பது சரியன்று. 'தமிழ் நாட்டு அரசியலில் தலைமை குறித்த சூழ்ச்சி' என்று காண்பதே பொருந்தும்.

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.

ஆச்சாரியார் சூழ்ச்சி வென்றது. சூழச்சி அறியாதவர் திரு. வி. க. ஆச்சாரியாரின் சூழ்ச்சிக்கு இரையானார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுக்கு முன் தமிழ் நாட்டு அரசியல் வானில் மும்மணி என ஒளி வீசியவர் மூவர். ஒருவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு; இன்னொருவர் பெரியார் ஈ. வெ. ரா. மற்றொருவர் திரு. வி. க. இம் மூவரும் காங்கிரசில் இருந்தவரை ஆச்சாரியார் முதலிடம் பெறமுடியவில்லை.

வரதராஜுலுவும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் காங்கிரசை எதிர்த்து, எதிர் முகாம் அமைத்துக்கொண்டு விட்டவர். ஆகவே, அவர்களைப் பற்றிய பிரச்சினை ஆச்சாரியாருக்கு இல்லை. நின்றவர் ஒருவரே. அவரே திரு. வி. க.

தலைமைப் பீடத்துக்கு திரு. வி. க. போட்டியிடவில்லை. பீடம் இல்லாமலே அவர் தலைவராக விளங்கினார். நாட்டு மக்கள் உள்ளத்திலே திரு. வி. க. இடம் பெற்றிருந்தார்.

காங்கிரஸ் அரசியலில் திரு. வி. க. வைச் 'செல்லாக் காசா'க்கக் கருதினார் ஆச்சாரியார் என்பேன். இல்லையேல் ஒதுங்கி நின்ற திரு. வி. க. விடம் சென்று சத்தியாக்கிரக அறிக்கையில் கையெழுத்து வாங்கியதன் பொருள் என்ன?

'போருக்கு வர இயலாதவன்' என்று அவர் கூறிய போதும் வற்புறுத்திக் கையெழுத்து வாங்கியதன் பொருள் என்ன?

அவ்வாறு வாங்கியபின்—வேதாரண்யம் முகாமுக்குச் சென்றபின்—அடுத்தக் தலைவராக திரு. வி. க. வை நியமியாது சந்தானத்தை நியமித்ததன் பொருள் என்ன?

சிதம்பரத்திலிருந்து திரு. வி. க. தலைமையில் போர்ப் படை திரட்டிச் செல்ல முயன்ற தண்டபாணியின்



முயற்சியைக் குலைத்ததன் பொருள் என்ன? பொருள் ஒன்றே. காங்கிரஸ் அரசியலில் திரு வி. க.வுக்குத் தலைமை ஏற்படாதவாறு தடுப்பதே.

இவ்வாறு ஆச்சாரியார் சூழ்ச்சி செய்தபோதிலும் முழு வெற்றி பெற்றாரல்லர். காங்கிரசிலே ஒரு பகுதியினரும் நாட்டு மக்களும் திரு. வி. க. விடம் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். அம் மதிப்பை மெய்ப்பிக்க ஒரு வாய்ப்பும் நேர்ந்தது.

உப்புச் சத்தியாக்கிரகம் ஓய்ந்தபின் ஓரிரண்டு ஆண்டுகளில் சிறை சென்றவர் பலரும் மீண்டனர். அடுத்து என்ன? ஸ்தல ஸ்தாபனங்களையும், சட்டசபைகளையும் காங்கிரசே கைப்பற்றும் திட்டம்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைமைப் பீடத்திலே இருந்தவர் சத்தியமூர்த்தி. 1934இல் வடார்க்காடு ஜில்லா போர்டு தேர்தல். அத் தேர்தலில் காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் நின்று போட்டியிடும் வேட்பாளராக ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் பெயர் முனுசாமி முதலியார். காலையில் அவர் பெயரை அறிவித்தது தமிழ்நாட்டுக் காங்கிரஸ்; மாலையில் அதனை மாற்றியது. மற்றொருவர் பெயரை அறிவித்தது. பெயர் மாற்றத்துக்குக் காரணம் என்ன? காரணம் சொல்லவா வேண்டும்? ஊழல்; ஊழல்.

காவேரிப்பாக்கம் முனுசாமி முதலியாரும், டாக்டர் மாசிலாமணி முதலியாரும் திரு. வி. க. வைக் கண்டனர். ஊழல் நிகழ்ந்ததைக் கூறினர்.

திரு. வி. க. என்ன செய்தார்? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் செயலாளரைக் கண்டார். இழைத்த அநீதிக்கு மாற்றுத் தேடுமாறு வேண்டினார். பயன் விளையவில்லை.

சத்தியமூர்த்தி அப்போது டில்லியில் இருந்தார்; அவருக்குத் தந்தி கொடுத்தார். பயனில்லை. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரைக் கண்டார். நியாயம்

பெரும்பான்மையோர் நவாப் அப்துல் ஹக்கீமுக்கே வாக்களித்தனர். காரணம்? ஊழல்; ஊழல்.

ஊழல் நாற்றம் வடார்க்காடு ஜில்லா முற்றிலும் வீசியது; தமிழ்நாடு முழுவதும் வீசியது. ஊழலுக்குக் காரணம் எது? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கூட்டம் நல்ல முறையில் நடந்திருந்தால் ஊழல் ஏற்படுமா? ஏற்படாது அன்றோ!

தமிழ் நாட்டுக் காங்கிரசின் ஊழல் போக்க எண்ணினார் திரு.வி.க. எண்ணம் வேலூரில் செயலாகியது. அங்கே ஒரு பெருங்கூட்டம் கூடியது. அக் கூட்டத்தில் தமது கருத்தை வெளியிட்டார்.

"வங்காளத்தை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அங்கே இரண்டு மாகாண காங்கிரஸ் அமைப்புகள் இருத்தல் உங்களுக்குத் தெரியும். நாமும் ஒரு மாநாடு கூட்டிப் புது மாகாண காங்கிரஸ் அமைக்க முயலல் வேண்டும். அவ்வமைப்பு அகில இந்திய காங்கிரசின் நோக்கத்தைத் தமிழ் நாட்டின் மீது திருப்பும். அப்பொழுதே நியாயம் பிறக்கும். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தூய்மை எய்தும். இப் புனிதத் தொண்டுக்கு உங்கள் துணையை நாடி இங்கே போந்துள்ளேன்" என்றார்.*

கூட்டம் ஒருமுகமாக அவர்தம் கருத்துக்கு இணங்கியது. இக் கருத்துத் தமிழ் நாட்டில் பரவியது. நாலு பக்கங்களிலிருந்தும் ஆதரவு பெருகியது; தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர் பலர் விரைந்தனர்; திரு.வி.க.வைக் கண்டனர். மாநாடு கூட்டும் முயற்சியும் அரும்பியது.

புது அமைப்பு வெறுந் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் என்று இருத்தல் கூடாது என்றும், அது 'பிராமணரல்லாதார் காங்கிரஸ்' என்று இருத்தல் வேண்டும் என்றும், சிலர் கருத்துத் தெரிவித்தனர். பலர் அதை வற்புறுத்தினர்.

---

*திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.



புதிய அமைப்பு ஏற்பட்டால் அதில் கலந்து கொள்ளப் பிராமணர் பலர் சித்தமாயிருந்தனர். எனவே 'பிராமணரல்லாதார்' எனும் தனிச் சிறப்புக்கு திரு. வி. க. இணங்கினரல்லர்.

அந்நிலையில் கடற்கரைக் கூட்டம் ஒன்றில் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பேசினார்.

"தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ, பெரிய அமைப்புகளில் தவறு நடப்பதுண்டு. இம் மாதிரித் தவறு நடந்தது உண்மை. ஊழல் ஏற்பட்டதும் உண்மை. இனி அவ்வாறு ஊழல் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்வேன்.

"திரு. வி. கலியாண சுந்தர முதலியாரை நாங்கள் காங்கிரசை விட்டுப் போகுமாறு சொல்லவில்லை. அவரே ஒதுங்கி நிற்கிறார். அவர் காங்கிரஸ்காரர் அல்லர் என்று எவரும் சொல்லவில்லை. தூய காங்கிரஸ்காரர் அவர் என்றே நாங்கள் கருதியிருக்கிறோம். அவர் எங்களுடன் சேர்ந்து ஊழலைக் களையத் துணை புரியலாம். அவர் வருகையை எதிர்நோக்கி நிற்கிறோம்" என்றார்.

அவர்தம் பேச்சைக் கேட்டார் திரு. வி. க. "ஊழல் உண்மையை ஆச்சாரியார் உணராமல் இல்லை. ஊழல் போக்க அவர் ஆவன செய்வார்" என்ற நம்பிக்கை பெற்றார்.

கடற்கரைக் கூட்டம் கடவுள் உதவியாகவே கருதினார். பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலினின்றும் ஆண்டவனே தம்மை விடுவித்ததாக எண்ணினார். மாநாடு கூட்டும் முயற்சியைக் கைவிட்டார்.

இம்முறையும் திரு. வி.க.வை ஆச்சாரியார் ஏமாற்றி விட்டார் என்பேன்.

### திரு. வி. க. தலைமை வகித்த காங்கிரஸ் அரசியல் மாநாடுகள்

| ஆண்டு | மாநாடு | இடம் |
|---|---|---|
| 1920 | வடார்க்காடு மாவட்ட 14வது அரசியல் மாநாடு | வேலூர் |
| 1921 | தென் ஆர்க்காடு மாவட்ட 3வது அரசியல் மாநாடு | திருப்பாதிரிப் புலியூர் |
| 1922 | திருநெல்வேலி மாவட்ட அரசியல் மாநாடு | தென்காசி |
| 1923 | அருப்புக்கோட்டை தாலுகா அரசியல் மாநாடு | அருப்புக் கோட்டை |
| 1923 | சாத்தூர் தாலுகா அரசியல் மாநாடு | சாத்தூர் |
| 1923 | சீவில்லிபுத்தூர் தாலுகா அரசியல் மாநாடு | சீவில்லிபுத்தூர் |
| 1924 | திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசியல் மாநாடு | குழித்தலை |
| 1925 | உடுமலைப் பேட்டைத் தாலுகா அரசியல் மாநாடு | அம்மா பட்டி புதூர் |
| 1925 | தாராபுரம் தாலுகா அரசியல் மாநாடு | தாராபுரம் |
| 1925 | தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாடு | காஞ்சீபுரம் |
| 1929 | அறந்தாங்கி தாலுகா அரசியல் மாநாடு | அறந்தாங்கி |

# 11. தொழிலாளர் இயக்கமும் திரு.வி.க.வும்

ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு நமது நாட்டில் சுதேச இயக்கக் கிளர்ச்சி எழுந்த காலத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர் சிலர் இந்தியா நோக்கினர். அவருள் ஒருவர் கீர் ஹார்டி என்பவர். பிரிட்டிஷ் தொழிறகட்சித் தலைவர்.

அவர் சென்னையில் சில நாள் தங்கியிருந்தார். அப்போது தமக்குத் தேவையான பொருள்களை வாங்கும் பொருட்டு ஸ்பென்ஸர் கம்பெனிக்கு வருவார்.

திரு.வி.க. அவர்கள் ஸ்பென்ஸர் கம்பெனியில் ஒரு சிறு கணிதராயிருந்தமையின் கீர் ஹார்டியை நெருங்கி நேரே பார்க்கும் வாய்ப்புப் பெற்றார்.

கீர் ஹார்டியின் வரலாறு சுருக்கமாகப் பத்திரிகையில் வெளியாயிற்று. அவ் வரலாறு திரு. வி. க. நெஞ்சில் தொழிலாளர் உலகைப் பதிவித்தது. அன்று முதல், சமயம் நேர்ந்தபோதெல்லாம் தொழிலாளர் பற்றிய நூல்களை ஆராய்ந்து வந்தார் திரு.வி.க.

சென்னை ஸ்பென்ஸர் கம்பெனியை விடுத்து, வெஸ்லி கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியராயிருந்தபோது ஒரு நாள்,

*'பட்டுக் கரை வேட்டியுடையும் அல்பாகா சட்டையும், சரிகை முத்துப் பூக்கள் பொறித்த கரை திகழ்ந்த வெள்ளிய துணி மாலையும், மாநிறப் பெல்ட் காப்பும் மஞ்சள் சூரணந் தீட்டிய திருமண தாரணமும் கொண்ட கோலத்துடன்

*திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்,

கருமை தவழ்ந்து இளமை கொழித்துப் பணிவுச் செல்வம் பதிந்திருந்த ஓர் உருவம் கைகூப்பிக் கொண்டு அவர் எதிரிலே வந்தது.

அவ்வுருவம் என் சொல்லிற்று?

"என் பெயர் செல்வபதி. நான் சூளைப் பட்டாளத்தில் உள்ள வேங்கடேச குணாமிர்த வர்ஷணி சபையின் செயலர். எங்கள் சபையினர் தங்கள் பேச்சைக் கேட்கும் ஆவல் கொண்டுள்ளனர். அழைக்க வந்தேன்" என்றது.

செல்வபதி செட்டியாரின் அழைப்பை ஏற்றார் திரு.வி.க. குறித்தவாறே ஞாயிற்றுக் கிழமையன்று 'வேங்கடேச குணாமிர்த சபை'க்குச் சென்று சொற்பொழிவாற்றினர்.

பின்னும் சிலமுறை அச் சபை போந்து, சொற்பொழி வாற்றினார் திரு.வி.க. ஒவ்வொரு கூட்டத்திலும் தொழிலாளர் தொகையே பெருகி நின்றது.

1917 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதி வெஸ்லி கல்லூரியைவிட்டு, ஏழாந் தேதி 'தேசபக்தன்' ஆசிரியப் பீடத்தில் அமர்ந்தார். அவ் வேளையில் ஐரோப்பாவில் யுத்தம் நடைபெற்றது. ருஷ்யச் செய்திகள் திரு. வி. க.வின் உள்ளங்கவர்ந்தன.

அப்போது சென்னை மாகாணச் சங்கத் தலைவராயிருந்தவர் திவான் பகதூர் கேசவப் பிள்ளை. அச்சங்கத்தில் திரு. வி. க. வுக்கும் தொடர்பு இருந்தது. கேசவப் பிள்ளையுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றார் திரு.வி.க.

மில் தொழிலாளர்தம் குறைகள் பற்றிக் கட்டுரைகள் பல எழுதி வந்தார் கேசவப் பிள்ளை. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அக் கட்டுரைகள் 'இந்தியன் பேட்ரியட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தன.

அவைகளில் சிலவற்றைத் தமிழிலும் மொழி பெயர்த்துத் "தேசபக்த"னில் வெளியிட்டு வந்தார் திரு.வி.க.



**1918ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் தேதி சனிக் கிழமை ஜங்கா ராமியம்மாள் பங்களாவில் 'வேங்கடேச குணாமிர்த வர்ஷணி சபை' சார்பில் ஒரு கூட்டம் கூட்டப் பட்டது. அக் கூட்டத்துக்குப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் கூடிச் சிறப்பித்தனர்.**

அக் கூட்டத்தில் திரு. வி. க. பேசினார். மேற்கு நாட்டில் தொழிலாளரியக்கம் தோன்றிய வரலாற்றையும், பொருளாதார விடுதலையின் மாண்பையும், தொழிலாளர் சங்கத்தின் அவசியத்தையும் விளக்கிப் பேசினார்.

தொழிலாளரிடையே உற்சாகம் கரை புரண்டு ஓடியது. 'தொழிலாளர் சங்கம் எப்பொழுது அமைக்கப்படும்? எப்பொழுது அமைக்கப்படும்?' என்ற பேச்சே தொழிலாளரிடையே உலவலாயிற்று.

திவான் பகதூர் கேசவப் பிள்ளையைக் கண்டார் திரு. வி. க. தொழிலாளர் சங்கம் காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவ்வாறு சங்கம் காணப் பெற்றால் கேசவப் பிள்ளையே தலைமை ஏற்க வேண்டுமென்று கூறினார்.

"நான் வெளியூரில் இருப்பவன். அடிக்கடி சென்னைக்கு வருவேன்; போவேன். சென்னையிலே வசிக்கும் ஒருவரையே தலைவராகக் கொள்ளல் நன்று. அந்தகையவர் வாடியா. அவரையே தலைவராகக் கொள்ளுங்கள்" என்றார் கேசவப் பிள்ளை.

அவ்வாறே வாடியாவைக் கண்டு பேசினர். வாடியாவும் கேசவப் பிள்ளையின் கருத்துக்கு இணங்கினார். வாடியா தியாசோபிகல் சங்கத்தைச் சேர்ந்தவர். அன்னி பெசன்ட் அம்மையாரின் வலக்கை என விளங்கியவர்.

1918 ஆம் ஆண்டு எப்ரல் 27 ஆம் தேதி சனிக்கிழமை சென்னைத் தொழிலாளர் சங்கம் காணப்பட்டது. வாடியா

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திவான் பகதூர் கேசவப் பிள்ளையும் திரு. வி. க.வும் உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று முதல் தொழிலாளர் உள்ள பகுதிகள் தோறும் சென்று சென்று தொழிலாளர் இயக்கம் பற்றிப் பேசிப் பேசி ஆங்காங்கே தொழிலாளர் சங்கங்கள் அமைப்பதை ஒரு விரதமாகக் கொண்டார் திரு. வி. க.

திரு. வி. க. அவர்களின் சொன்மாரி கேட்ட தொழிலாளர் உலகம் உணர்ச்சி பெற்றது; விழித்து எழுந்தது.

விழிப்பும் உணர்ச்சியும் எதில் கொண்டு விட்டன? தொழிலாளர் சங்கம் காண்பதில் கொண்டு விட்டன. அவ்வாறு காணப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் பல. சிறப்பாகக் குறிக்கத் தக்கன சில. அவை வருமாறு: எம். அண்ட் எஸ். எம். தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், மண் எண்ணெய்த் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், நாவிதர் சங்கம், தோட்டிகள் சங்கம், அலுமினியம் தொழிலாளர் சங்கம், ஐரோப்பிய வீட்டுத் தொழிலாளர் சங்கம், தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம் (நாகை), கோவை நெசவுத் தொழிலாளர் சங்கம், மதுரை நெசவுத் தொழிலாளர் சங்கம் முதலியவை.

இவ்வாறு தென்னாட்டில் எழுந்த தொழிலாளர் விழிப்புணர்ச்சி, நாடு முழுவதும் பரவலாயிற்று. பம்பாய் கான்பூர், கல்கத்தா, நாகபுரி முதலிய பல இடங்களிலும் தொழிலாளர் சங்கங்கள் தோன்றின.

தொழிற் சங்கங்களில் ஈடுபட்டோருள் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர்; ஜஸ்டிஸ் கட்சியினரும் சிலர் இருந்தனர்.

தொழிலாளர்தம் சம்பள உயர்வு, நேரக் குறைவு, இராப் பாடசாலை அமைத்தல், சுகாதாரம் முதலியன பற்றியே



அந்நாளில் தொழிலாளர் கூட்டங்களில் பேசப்பட்டன. பொருளாதார சமதர்ம உணர்ச்சியூட்டியவர் ஓரிருவரே. அவருள் ஒருவர் திரு. வி. க.

சென்னைத் தொழிலாளர் சங்கம் பிறந்த சில வாரத்துள் எதிர்ப்புக்கள் பாணங்களெனப் பாய்ந்தன. அந்நாளில் சென்னைக் கவர்னராயிருந்தவர் லார்ட் பெண்ட்லண்டு. அவர் வாடியாவை அழைத்தார்; எச்சரிக்கை செய்தார். 'இந்தியாவுக்குத் தொழிலாளர் இயக்கம் அவசியமில்லை' எனும் கருத்துக் கொண்ட கட்டுரைகள் பல பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின. அவற்றுக்கெல்லாம் 'தேச பக்த'னில் மறுப்பு எழுதி வந்தார் திரு. வி. க. 'நியூ இந்தியா' பத்திரிகையும் திரு. வி. க.வுக்கு ஆதரவு நல்கியது.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு மார்ச்சு மாதம் 21ஆம் தேதி சென்னையில் முதன் முறையாக மாகாணத் தொழிலாளர் மாநாடு கூடியது. மாநாட்டுத் தலைவர் திவான் பகதூர் கேசவப்பிள்ளை. வரவேற்புத் தலைவர் திரு. வி. க. உள்ளூரிலின்றும், வெளியூர்களினின்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் கூடினர்.

"தொழிலாளர் சங்கங்கள் ஆங்காங்கே நாள்தோறும் தோன்றி வருகின்றன. அவை வழி துறையில்லாமல் வளர்ந்து வருவதால் இடையில் பல இடர்கள் நேர்ந்துவிடும். ஆதலால் எல்லாத் தொழிற் சங்கங்கட்கும் நடுநாயகமாக ஒரு மத்தியச் சங்கம் இருத்தல் வேண்டும். அச்சங்கத்தில் எல்லாத் தொழிற்சங்கங்களும் சேர்தல் வேண்டும்" என்று கூறினார் திரு. வி. க.

இதன் விளைவு என்ன? ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு சூலை மாதம் நாலாந்தேதி மத்தியச் சங்கம் சென்னையில் தோன்றியது. அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் திரு. வி. க.

தி.—7

நமது நாட்டின் தொழிற்சங்க இயக்கத்துக்கு வித்தூன்றியவர் திரு. வி. க. என்றால் அது மிகையன்று.

சென்னை மவுண்ட் ரோடு ஜெனரல் பாட்டர்ஸ் ரோடில் காங்கிரஸ் மாளிகை இருக்கிறதே, அந்த வெளி, அம் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் திவான் பகதூர் கேசவப்பிள்ளை.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஒராம் ஆண்டு சூன் மாதத்திலே சென்னை பக்கிங்காம் கர்நாடிக் மில் தொழிலாளர் பதின்மூவாயிரம் பேர் வேலை நிறுத்தம் செய்தனர். அவ்வேலை நிறுத்தம் சில நாட்களில் முடிய வில்லை. ஆறு மாதம் தொடர்ந்தது.

அந்தக் காலத்தில் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் இல்லை. எனவே, கலகம் குழப்பம் யாவும் மலிந்தன. போலீசார் துப்பாக்கி கொண்டு சுட்டனர்.

இந்த நெருக்கடியான நேரத்தில் திரு. வி. க எங்கிருந்தார்? தொழிலாளர் பக்கம் நின்றார். வேலை நிறுத்தமாகத் தோன்றியது, வகுப்புக் கலவரமாக மூண்டது.

அந்நாளில் சென்னை கவர்னராக இருந்தவர் எவர்? வில்லிங்டன். ஜஸ்டிஸ் கட்சியினரே மந்திரிகளாக இருந்தார்கள்.

வில்லிங்டன் நீலகிரியில் இருந்தார்: சென்னைக்கு விரைந்தார். எதன் பொருட்டு? திரு. வி. க.வை நாடு கடத்தும் பொருட்டு.

திரு. வி. க.வை அந்தமானுக்கு அனுப்பப் போகிறார் கவர்னர் என்ற வதந்தி எழுந்தது. அவ்வதந்தி ஊர் முழுதும் அலராயிற்று.

வில்லிங்டன் என்ன செய்தார்? திரு. வி. க.வுக்கு அழைப்பு விடுத்தார். அதற்கிணங்கி மாலை ஆறு மணிக்குக் கவர்னர் மாளிகை சென்றார் திரு. வி. க.

அவருக்கு முன்னரே சர்க்கரைச் செட்டியாரும் வேறு சிலரும் அங்கே இருந்தனர். ஆறு மணிக்கு வந்தார் கவர்னர்.



மந்திரிமார் வலது பக்கமும், நிர்வாக அங்கத்தினர் இடது பக்கமும் இருக்க, நடுவே கொலு வீற்றிருந்தார் லார்ட் வில்லிங்டன்.

"தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாகச் சென்னையில் கொள்ளையும், கொலையும், தீ வைப்பும் நடந்து வருகின்றன. அவைகட்கெல்லாம் மூல காரணர் நீங்கள் என்று அறிகிறேன். அமைதி காக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு" என்றார்.

திரு. வி. க. வுடன் இருந்தவருள் ஒருவர், 'நாங்கள் காரணர் அல்லர்' என்றார். 'நீதி மன்றம் இருக்கிறதே!' என்றார் இன்னொருவர்.

"தொழிலாளர் சங்கத்துக்குச் சம்பந்தமே இல்லை" என்றார் மற்றொருவர்.

திரு. வி. க. என்ன சொன்னார்? "எல்லார்க்கும் நியாயத் தீர்ப்பு நாள் இருக்கிறது" என்றார்.

அச்சொல் கேட்டார் லார்ட் வில்லிங்டன் திரு. வி. க.வை ஏற இறங்க நோக்கினார்.

"பொழுதாகிறது. உங்களுக்கு எச்சரிக்கை வழங்கவே அழைத்தேன். இனித் தீ வைப்பு முதலியன நடக்குமாயின் நீங்கள் நாடு கடத்தப்படுவீர்கள்" என்றார்.

திரு. வி. க.வும் மற்றையோரும் விடை பெற்று வீடு சேர்ந்தனர்.

திரு. வி. க.வை நாடு கடத்த எண்ணிச் சென்னை நோக்கிய லார்ட் வில்லிங்டன் அவ்வாறு செய்யாதது ஏன்? 'ஜஸ்டிஸ் கட்சியும் திரு. வி. க.வும்' என்ற தலைப்பில் காண்க.

பக்கிங்காம் கர்நாடிக் தொழிலாளரிடையே இருபத்தைந்து ஆண்டுகள் தொண்டு புரிந்தார் திரு. வி. க. இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நடந்த வேலை நிறுத்தம் ஒன்றா? இரண்டா? பல; பலப்பல. வேலை நிறுத்தம் என்ற செய்தி கேட்டால் உடனே விரைந்து ஓடுவார் திரு. வி. க.

தொழிலாளர் முன்னே நிற்பார். அமைதி காப்பார். தொழிலாளர் பொருட்டு வாதாடுவார்.

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் முதலியவற்றால் நன்மையும் விளையும்; தீமையும் விளையும். தீமை நேருங்கால் தொழிலாளர் பாய்வர்; உறுமுவர்.

அவற்றில் மூழ்குவார் திரு. வி. க.; எழுவார். மூழ்கி எழ எழப் பொறுமையும் அமைதியும் அவரைச் சாரும்.

தொழிலாளர் சங்கங்களை ஏணியாக உபயோகித்துப் படியேறிப் பெரிய பெரிய பதவிகளில் அமர்ந்து அரசியல் பயன் பெற்றோர் பலர்.

ஆனால் திரு. வி. க. அவ்வாறு ஏதும் செய்தாரிலர். இதுவே அவர்தம் பயன் கருதாத் தொண்டுக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து இரண்டாம் ஆண்டு. பக்கிங்காம் கர்நாட்டிக் மில்லில் சிறு குழப்பம். ஸ்பின்னிங் டிபார்ட்மெண்டு இளைஞர்கள் உள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆயுத பாணியாய்க் காத்திருந்த போலீஸ் படை மில்லுக்குள் நுழைந்தது; துப்பாக்கி கொண்டு சுட்டது. (11-3-1942) மாண்டனர் எழுவர்; மில்லுக்கு வெளியேயும் துப்பாக்கி முழங்கியது. இருவர் மாண்டனர். தொழிலாளர் நடுவே சென்று கொண்டிருந்தார் திரு. வி. க. துப்பாக்கியினின்றும் வீறிட்டுப் புறப்பட்ட ரவை ஒன்று திரு. வி. க.வின் தலைக்கு மேலே உராய்ந்து பறந்து சென்றது. அப்போது நடைபெற்றது அட்வைசர் ஆட்சி. திரு. வி. கவும் சர்க்கரைச் செட்டியாரும் அட்வைசரைக் கண்டனர். விசாரணை வேண்டினர்; இறந்தவர் குடும்பங்கட்கு உதவி கேட்டனர். இரண்டும் மறுத்து விட்டார் அட்வைசர்.

பிரிட்டிஷ் அரசாங்கமும், கவர்னர் லார்ட் வில்லிங்டனும் ஜஸ்டிஸ் மந்திரிகளும் செய்யத் துணியாத செயல் ஒன்றைக்



காங்கிரஸ் அரசாங்கம் செய்தது. யாருக்கு? திரு. வி. க.வுக்கு என்ன அது?

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து ஏழாம் ஆண்டு பக்கிங்காம் கர்நாடிக் மில் தொழிலாளர் பெரியதொரு போராட்டம் நடத்தினர்.

அப்போராட்டத்துக்குத் தலைமை வகித்தவர் அந்தோணிப் பிள்ளை. அவரை நாடு கடத்தியது காங்கிரஸ் அரசாங்கம். யூனியனில் பதவி வகித்த முக்கியஸ்தர் பலரும் கைது செய்யப்பட்டனர்.

தொழிலாளர்கள் திரு.வி.க.வை அழைத்தார்கள். தலைமை ஏற்றுப் போராட்டத்தை நடத்தும்படி வேண்டினார்கள். சகல அதிகாரங்களையும் திரு.வி.க.வுக்கு அளித்தார்கள்.

திரு.வி.க.வும் தலைமை ஏற்றார். போராட்டத்தை நடத்தினார். தொழிலாளர் வர்க்கம் அவர் பின்னே அணிவகுத்து நின்றது. கட்டுப்பாடாக நின்றது. அமைதி காத்தது.

அறுபதாண்டு கடந்த திரு.வி.க. அப்போது ஓர் இளைஞரானார்; எழுச்சி கொண்டார். தொழிலாளர்களின் சோர்வு போக்கினார்; எழுச்சியூட்டினார்.

தொழிலாளர் எவ்வித வன்முறையிலும் இறங்கினாரல்லர். சென்னையில் எவ்விதப் பூகம்பமும் ஏற்பட்டுவிடவில்லை.

அமைதியான முறையில் திரு. வி. க. தலைமையில் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தினார்கள்.

அது கண்டு சீறியது காங்கிரஸ் அரசாங்கம். திரு வி.க வை வீட்டுக் காவலில் வைத்தது. அவர் இருந்த வீட்டையே சிறைச்சாலையாக்கியது. வீடுவிட்டு வெளியேறாமல் தடுத்தது. போலீசைக் காவல் வைத்தது.

வெட்கம்! வெட்கம்! வாழ்நாள் முழுவதும் 'காங்கிரஸ் காங்கிரஸ்' என்று ஓடி ஓடிப் பாடுபட்ட ஒருவரை—பட்டி தொட்டி எங்கும் காங்கிரஸ் முழக்கம் செய்த ஒருவரை—அதே காங்கிரஸ் அரசாங்கம் சிறை வைத்தது. என்னே கொடுமை! கொடுமை! கொடுமை!

இக் கொடுமை புரிந்தவர் எவர்? திரு. வி. க. அவர்களின் பேச்சுக் கேட்டுக் கேட்டுக் காங்கிரஸ் தொண்டராகி, தலைவராகிப் பின் முதன் மந்திரியுமான ஓமந்தூரி இராமசாமி ரெட்டியார்.

மில் தொழிலாளர் இச் செய்தி அறிந்தனர். அதாவது, திரு.வி.க. காவலில் வைக்கப்பட்ட செய்தி. பெரம்பூரி லிருந்து புறப்பட்டு இராயப்பேட்டை நண்ணினர்.

கணபதி முதலித் தெருவில் வாழ்ந்து வந்தார் திரு.வி.க. தொழிலாளர் வருதல் அறிந்தார். வீட்டு மாடியின் முன்புறம் வந்து அமர்ந்தார். வீடு காத்த போலீஸ் என் செய்தது? தொழிலாளரைத் தடுத்து நிறுத்தியது.

வீட்டு மாடியில் அமர்ந்திருந்த திரு.வி.க. பெருங் குரல் எடுத்துப் பேசினார். தொழிலாளருக்கு ஊக்கமூட்டினார். தமது அரும்பெரும் தலைவரின் முகம் கண்டு, குரல் கேட்டு, சொற்கேட்டு, ஆறுதல் பெற்றுத் திரும்பினர் தொழிலாளர். இவ்வாறு பல நாட்கள் சென்றன. சமரசம் ஏற்பட்டது.

தொழிலாளர் சார்பில் திரு. வி. க. நடத்திய இறுதிப் போராட்டம் இதுவே. பின்னர் திரு.வி.க. உடல் நலிந்து, கண் பார்வை இழந்து படுக்கை கொண்டார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு திரு. வி. க.வின் மணிவிழா நாடு முழுவதும் நடை-



பெற்றது. எம். எஸ். எம். தொழிலாளர் சங்கமும் சென்னைத் தொழிலாளர் சங்கமும் முறையே திரு.வி.க. வின் மணி விழாவைக் கொண்டாடின. இரண்டு சங்கங் களிலும் திரு வி.க.வின். உருவப் படங்கள் திறக்கப் பட்டன.

இவ்விரு உருவப் படங்களும் வேறு வேறு காலங்களில் திரு. வி. க. எத்தகைய தோற்றம் அளித்தார் என்பதைக் காட்டுவன.

முப்பத்தைந்து ஆண்டில் திரு வி.க. எத்தகைய தோற்றமளித்தார் என்பதைக் காட்டுவது சென்னைத் தொழிலாளர் சங்கப் படம்.

அறுபது ஆண்டில் திரு. வி. க. எத்தகைய தோற்றம் அளித்தார் என்பதைக் காட்டுவது எம். எஸ். எம். தொழிலாளர் சங்கப் படம்.

இருபத்தைந்து ஆண்டுகள் தொழிலாளருக்கும், நாட்டுக்கும் தொண்டு செய்து எவ்வாறு இளைத்தார் என்பதைக் குறிக்கும் இருதிருவுருவப் படங்கள்.

# 12. ஜஸ்டிஸ் கட்சியும் திரு.வி.க. வும்

ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை மறுப்பதே பெருந் தொண்டாகக்கொண்டார் திரு.வி.க.

* "வகுப்பு வாதத்தால் நாட்டின் ஒருமைப்பாடு குலையும் என்று நான் நம்பினேன்; உறுதியாக நம்பினேன். அந்த நம்பிக்கையினின்றும் நான் மாறுதலை அடைய வில்லை. வகுப்பு வாதத்தைக் காங்கிரஸ் ஏற்கும் நிலை நேர்ந்தாலும் யான் காங்கிரசுடன் பிணங்கியே நிற்பேன்."

இதுவே திரு வி க. வின் ஆழ்ந்த கருத்து.

ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையைத்தான் திரு.வி க. கண்டித்தார்; தாக்கினார். ஆனால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைத் தாக்கினாரல்லர். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் திரு.வி.க.வின் நண்பர்களே; அன்பர்களே.

ஜஸ்டிஸ் தூண்களில் ஒருவர் டாக்டர் சி. நடேச முதலியார். அவரது டெலிபோனும் மருந்தும் திருவல்லிக்கேணிமக்களின் பொதுவுடைமையாக விளங்கின. அன்பின் உருவானவர் டாக்டர் நடேச முதலியார். அவர் திரு.வி.க.வின் நண்பர்.

டாக்டர் நடேச முதலியார் ஒரு சங்கம் அமைத்து நடத்தி வந்தார். அச் சங்கத்தின் பெயர் 'திராவிட சங்கம்' என்பது. அச் சங்கத்தில் ஒருமுறை திரு. வி. க. பேசினார். அதாவது 1912ஆம் ஆண்டு அப் பேச்சு இருவரையும் நண்ப ராக்கியது. அது முதல் இறுதிவரை நடேச முதலியார் திரு. வி. கவின். நண்பராக விளங்கினார்.

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு (அரசியல்)



திரு. வி. க. வை நாடு கடத்த எண்ணிய லார்ட் வில்லிங்டனைத் தடுத்து நிறுத்திய சக்தி எது? டாக்டர் சி. நடேச முதலியாரின் அன்பு; அன்பு.

*"1920ஆம் ஆண்டு நிகழ்ந்த தொழிலாளர் பெருந் தொல்லையின் போது டாக்டர் நடேச முதலியார் தியாகராய செட்டியாரையும் பனகல் ரரஜாவையும் தூங்க விடுவதில்லை. அல்லும் பகலும் என்னைப் பார்த்த வண்ணமிருப்பர். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலே தொழிலாளர் தலைவர்கட்கு எவ்விதத் துன்பமும் விளைதலாகாது என்று பாடுபட்டவருள் நடேச முதலியாரும் ஒருவர்—" இவ்வாறு குறிப்பிடுகிறார் திரு. வி. க.

ஜஸ்டிஸ் கட்சியின் தந்தை சர். பி. தியாகராய செட்டியார். அவரிடம் திரு. வி. க. வை ஆற்றுப்படுத்தியவர் டாக்டர் சி. நடேச முதலியார்.

செட்டியாரின் அரசியல் கொள்கை திரு வி. க. வை விழுங்கவில்லை. செட்டியாரின் குணம் திரு வி. க. வை விழுங்கியது.

குண மலையாக விளங்கினார் செட்டியார். அக்குண மலை திரு. வி. க. வைக் காந்தமென இழுக்கும். அவர் மொழி கேட்க திரு. வி. க. வின் செவி விரையும்.

கடற்கரைக் கூட்டம் ஒன்றிலே திரு. வி. க. பேசினார். நகரசபையின் வரி உயர்வைக் கண்டிப்பதற்கென்று கூட்டப் பட்ட கூட்டம் அது. நகர சபையிலே தியாகராய செட்டியார் தலைமையிலே நன்மை விளையவில்லை என்று கூறி, ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கிப் பேசினார் திரு. வி. க.

ஓரிரண்டு நாட்கள் சென்றன. பிராட்வே வழியே நடந்து கொண்டிருந்தார் திரு. வி. க. செட்டியாரின் மோட்டார் வண்டி அவ்வழியே வந்தது. செட்டியாருக்கு

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.

வணக்கம் தெரிவித்தார் திரு. வி. க. செட்டியாரும் பதில் வணக்கம் செய்து கொண்டே வண்டி விட்டு இறங்கினார்.

திரு. வி. க. வின் கையைப் பிடித்தார்; தமது முதுகைக் காட்டினார். "அறை அப்பா! அறை!' என்றார்.

திரு. வி. க. வுக்கு ஒன்றும் விளங்கவில்லை; விழித்தார்; திகைத்தார்.

"அன்று கடற்கரையிலே வாயால் அறைந்தீரே! இப்போது கையால் அறையும்" என்றார்.

அப்போதுதான் திரு. வி. க. வுக்கு விளங்கியது. இதற்குள் சிறு கூட்டம் சேர்ந்து விட்டது. செட்டியாரின் காரில் ஏறி ஒளிந்தார் திரு. வி. க.

செட்டியாரின் கார் புறப்பட்டது. இருவரும் பேசிக் கொண்டே சென்றனர். கார், காஸ்மாலிபாட்டன் கிளப்பை அடைந்தது. காரினின்றும் இறங்கினார் திரு. வி. க. செட்டியாரிடம் விடை பெற்றார்; வீடு சென்றார்.

திரு. வி. க. வை நாடு கடத்த எண்ணினார் லார்ட் வில்லிங்டன். நாடு கடத்தினாரா? இல்லை. காரணம் என்ன? ஸர் பி. தியாகராய செட்டியார் தலையிட்டதே காரணம்.

"திரு. வி. க. வை நாடு கடத்தினால் ஜஸ்டிஸ் மந்திரி மார் பதவி விலகுவர்" என்று வில்லிங்டனிடம் கூறினார் செட்டியார். நாடு கடத்தும் எண்ணத்தை விட்டார் லார்ட் வில்லிங்டன்.

1947இல் திரு. வி. க வை வீட்டுக் காவலில் வைத்தார் காங்கிரஸ் முதன்மந்திரி ஓ. பி. இராமசாமி ரெட்டியார்.

ஜஸ்டிஸ் தலைவர் ஸர் பி. தியாகராய செட்டியாரோ "மந்திரி பதவியை ராஜிநாமா செய்வோம்" என்று கூறி லார்ட் வில்லிங்டனை அச்சுறுத்தினார்.

போற்றற்குரிய செயல் எவருடையது? காங்கிரஸ் காரருடையதா? ஜஸ்டிஸ்காரருடையதா?



திரு. வி. க. 'தேசபக்தன்' ஆசிரியராயிருந்தபோது சென்னை பிரசிடென்சி கல்லூரியினின்றும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் விலகினார். அப்பதவியில் திரு. வி. க. வை அமர்த்த உளங் கொண்டார் ஸர். பி. தியாகராய செட்டியார். கா. நமச்சிவாய முதலியாரும் திரு. வி. க. வை நெருக்கினார். அப்பதவியை ஏற்குமாறு வற்புறுத்தினார். ஆனால், திரு. வி. க. அதை ஏற்க மறுத்தார். தேச சேவையையே தாம் விரும்புவதாகக் கூறிவிட்டார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி ஸர். பி. தியாகராய செட்டியார் மறைந்தார்.

அதுபோது 'நவசக்தி'யில் தலையங்கம் ஒன்று எழுதி வெளியிட்டார் திரு. வி. க. அத்தலையங்கத்தின் கடைசிப் பகுதியை இங்கு குறிப்பிடுகிறேன்.

"செல்வத்திற் சிறந்த தியாகராய செட்டியார் பரந்து விரிந்த சோலைகள் சூழ்ந்த, அரண்மனையென்று சொல்லத் தக்க, தமது பெருமாளிகையில் கிராமத்தாரைப் போலத் தோய்த்து உலர்ந்த'வேட்டிகளிரண்டு கீழொன்று மேலொன்று அணிந்து, தம்மைக் காண வருபவரோடு பேசுங் காட்சி, எமது முன்னே தோன்றித் தோன்றி எமது உள்ளத்தைக் குழையச் செய்கிறது. குழைந்துருகும் உள்ளத்தோடு அவரது குடும்பத்தார்க்கு எமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

*நவசக்தி 1-5-1925

# 13. திராவிடப் பெரியாரும் திரு. வி. க. வும்

திராவிடப் பெரியார் ஈ. வே. ரா. வின் நண்பர் திரு. வி. க. இருவரும் நட்பால் இணைந்தனர்; கொள்கை யால் பிரிந்தனர்; பிணங்கினர். கொள்கை வேற்றுமை இவ்விருவர்தம் நட்பையும் குலைக்கவில்லை.

சென்னை மாகாணச் சங்கம் பற்றி முன்னரே குறிப் பிட்டிருக்கிறேன். ஜஸ்டிஸ் கட்சியை எதிர்க்கத் தோற்று விக்கப்பட்ட சங்கம் அது. அச்சங்கத்தின் துணைத் தலைவருள் ஒருவர் பெரியார் ஈ. வெ. ரா. அச்சங்கத்தின் செயலர் திரு. வி. க. இவ்விருவரும் எப்போது சந்தித்தனர்? சென்னை மாகாணச் சங்கத்தின் இரண்டாவது மாநாட்டின் போது.

சென்னை மாகாணச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு.

அம் மாநாட்டின் வரவேற்புத் தலைவர் ஈ. வே. ரா. ஈ. வே. ரா. வின் வீட்டில் தங்கினார் திரு. வி. க. டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் உடன் தங்கினார்.

''அப்போது பெரியார் எக்காட்சி வழங்கினார்? அவர் தலையிலும் உடலிலும் இடுப்பிலும் பட்டணி ஒளி செய்தது. அவர் மனைவியார் தோற்றம் மணிபூத்த பொன் வண்ணமாகப் பொலிந்தது. அவர் ஜமீந்தாரியாகவும் இவர் ஜமீந்தாரணியாகவும் காணப்பட்டனர்!'' என்று குறிப்பிடு கிறார் திரு. வி. க.



அந்நாளில் காங்கிரஸ் தொண்டு செய்தார் பெரியார். ஒத்துழையாமையில் உறுதி கொண்டார்; பல முறை சிறை சென்றார். அவர் உழைப்பை நன்கு உண்டு கொழுத்தது காங்கிரஸ்.

*''அவர் காங்கிரஸ் வெறி கொண்டு நானா பக்கமும் பறந்து பறந்து உழைத்ததை யான் நன்கு அறிவேன். நாயக்கரும் நானும் சேர்ந்து சேர்ந்து எங்கெங்கேயோ தொண்டு செய்தோம். காடு மலையேறியும் பணி புரிந்தோம்

''அவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து சுயமரியாதை இயக்கங் கண்டு பீறபோக்குப் பிரசாரம் செய்தார். அதனால் தென்னாட்டுக்குக் கேடு விளைதல் கண்டு யான் எதிர்ப் பிரசாரம் செய்தேன். இருவர் போரையும் தென்னாடு வேடிக்கை பார்த்தது. போரிட்டோம்; பத்திரி கையில் போரிட்டோம். மேடையில் போரிட்டோம். என் உடல் நலன் குன்றும்வரை யான் முன்னணியில் நின்று போரிட்டே வந்தேன். போர் உச்சம் பெற்ற காலத்திலும் நாயக்கர் வீட்டுக்கு யான் செல்வேன்; என் வீட்டுக்கு அவர் வருவர். எங்கள் நட்புக் குலையவே இல்லை. ஒரே மேடை யில் இருவரும் பேசுவோம். அவர் கொள்கையை அவர் சொல்வார். என் கொள்கையை யான் சொல்வேன். ஒரே இடத்தில் உண்போம்; உறங்குவோம். நட்பு முறையில் உறவாடுவோம்.''

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு பெரியார் ஈ. வே. ரா. காங்கிரஸ் தொண்டு செய்த காலம்.

வைக்கத்தில் தீண்டாமைப் போராட்டம் எழுந்தது; பெரியார் அங்கு சென்றார். சத்தியாக்கிரகம் செய்தார். திருவாங்கூர் அரசாங்கம் பெரியாரைச் சிறையில் தள்ளியது.

* திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.

அப்போது திரு. வி. க. என் செய்தார்? 'வைக்கம் வீரர்' என்ற தலைப்பீந்து 'நவசக்தி'யீல் எழுதினார். பெரியாரின் தியாகத்தை வியந்து வியந்து பாராட்டி எழுதினார். 'வைக்கம் வீரர்' என்பது பெரியாருக்குப் பட்டமாக வழங்கலாயிற்று. அப்பட்டம் வழங்கிய பெருமை திரு. வி. க வுக்கே உரியதாகும்.

சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் பெரியார். அச்சுயமரியாதை இயக்கம் எங்கிருந்து பிறந்தது? திரு. வி. கவின் சன்மார்க்க இயக்கத்தினின்றும் பிறந்தது.

சுயமரியாதை இயக்கமும் சன்மார்க்க இயக்கமும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஒற்றுமையுடையன; பத்துப் பங்கே வேற்றுமை. இவ் வேற்றுமைதான் இவ்விருவருக்கும் போர் மூட்டியது.

ருஷ்யா சென்று திரும்பினார் பெரியார். நண்பர் சமதர்மக் கண் பெற்று வந்தது கண்டு மகிழ்ந்தார் திரு. வி. க. பெரியாரும் தாமும் மீண்டும் ஒன்றுபட்டுத் தொண்டாற்றும் காலத்தை எதிர்பார்த்திருந்தார் திரு. வி. க. ஆனால் அரசாங்கம் என் செய்தது? பெரியாரைக் கைது செய்தது; சிறைக்கனுப்பியது.

அச்சமயம் சட்ட உறுப்பினராயிருந்தவர் எவர்? ஜஸ்டிஸ் கட்சித் தலைவருள் ஒருவராகிய ஸர் கே. வி. ரெட்டி.

சிறை மீண்டார் பெரியார்; சமதர்மக் கண் இழந்தார். வகுப்பு வாதத்திலேயே மீண்டும் புரளலானார். திரு. வி. க. கட்டிய மனக்கோட்டை இடிந்தது.

பெரியாரின் வாழ்க்கைத் துணைவி நாகம்மாள் காலமானார். அவர்தம் உருவப்படத்தைத் திறந்து வைத்தவர் எவர்? திரு. வி. க.! எங்கே? ஈரோட்டில்.



சீர்திருத்தத் திருமணங்கள் நிகழும். அத் திருமணங்களில் இருவரும் கலந்து தொண்டாற்றுவர். அவ்விருவர் எவர்? ஒருவர் திரு.வி.க. இன்னொருவர் பெரியார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து ஏழாம் ஆண்டிலே காங்கிரஸ் சார்பிலே பல மாகாணங்களில் மந்திரி சபைகள் அமைந்தன.

சென்னை மாகாணத்திலும் காங்கிரஸ் மந்திரி சபை அமைந்தது. அம் மந்திரி சபை என் செய்தது? இந்தியைக் கட்டாயமாக்கியது. இதை எதிர்த்தார் பெரியார்.

பெரியார் தலைமையில் பல்லாயிரவர் சிறை சென்றனர். பெரியாரைச் சிறையில் தள்ளியவர் எவர்? முதன் மந்திரி சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

ஆச்சாரியாரின் செயலைக் கண்டித்து "நவசக்தியில்" எழுதினார் திரு.வி.க.

"நண்பரே! ஆச்சாரியாரே! உம்மை இராவணாகாரம் சூழ்ந்திருக்கிறது" என்று எழுதினார் திரு. வி.க.

அவ்வெழுத்துப் பெரியாருக்குத் துணை போயிற்று.

1942 ஆம் ஆண்டு பெரியார் ஜெனரல் ஆஸ்பத்திரி படுக்கையில் கிடந்தார். அவரைக் காணச் சென்றார் திரு. வி. க. அவர்தம் கட்டிலில் அமர்ந்தார்.

திரு. வி. க.வின் கரங்களைப் பற்றினார் பெரியார். 'கோ'வென்று கதறினார். கண்கள் நீர் உகுத்தன. திரு. வி. க. தம் குட்டையால் பெரியாரின் கண்களைத் துடைத்தார்.

**1953** ஆம் ஆண்டு இறந்தார் திரு. வி. க. அன்று நடந்த மாபெரும் ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடாத்தியவர் எவர்? பெரியார்! பெரியார்!

# 14. பெண் உரிமையும் திரு.வி.க. வும்

பெண் உரிமையின் பொருட்டு இந்திய நாட்டிலே கொடி தூக்கிய முதல்வர் இராஜாராம் மோகன்ராய். அவரைத் தொடர்ந்து வட இந்தியாவிலே பலர் பெண் உரிமைக் குரல் எழுப்பினர். அவர்களைப் பின்பற்றித் தமிழ் நாட்டிலே பெண் உரிமை முழக்கம் செய்த தனிப் பெரியார் திரு. வி. க.

இராயப்பேட்டை சகோதர சங்கத்தின் சார்பில் பல பள்ளிக்கூடங்கள் நடந்தன. அவற்றுள் ஒன்று 'பவானி பாலிகா பாடசாலை. இப் பாடசாலை தொடங்கப்பட்ட போது திரு. வி. க. ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அதனால் பள்ளியுடன் நேர் தொடர்பு கொள்ளல் இயலவில்லை. பின்னே அவர் தேசபக்தன் ஆசிரியராக அமர்ந்தபோது அப்பள்ளி அவர் நேர் பார்வையில் வந்தது.

அப் பள்ளியைப் பல வழியிலும் புதுமை பெறச் செய்தார் திரு. வி. க. பள்ளியை நாட்டு முறையில் நடத்தினார். சென்னைக்கே ஓர் எடுத்துக்காட்டாக அப் பள்ளி விளங்கவேண்டும் என விரும்பினார்; உழைத்தார். ஈச பக்தியும், தேச பக்தியும் ஊட்டத்தக்க முறைகளை வகுத்தார். நாட்டுப் பண்பை உயிர்ப்பிக்கும் ஆடல்களும் பாடல்களும் கற்பிக்கப்பட்டன. ஆங்கு ஒழுக்கக் கதைகளே நடமாடும். நாட்டு நல வாழ்வுக்கு இன்றியமையாத நல்வாழ்வு முறைகளே அங்கு போதிக்கப்பட்டன. நாட்டுப் பொருள்களின்மீதே பிள்ளைகளின் நாட்டம் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது.



யாமுனா பூரணத் திலகம் என்பவர் ஓர் அம்மையார். எளிய சகோதரிமார் நலனுக்கென்று ஓர் அமைப்பைத் தொடங்கி நடத்திவந்தார் அவ்வம்மையார். 'யுவதி சரணாலயம்' என்பது அவ்வமைப்பின் பெயர். 'யுவதி சரணாலயம்' ஆக்கம் பெறுதற்கு வேண்டிய ஊக்கம் ஊட்டினார் திரு.வி.க. 'நவசக்தி'யில் எழுதினார். சீர்திருத்த மணங்களுக்கு ஊக்கமூட்டினார்; கலப்பு மணத்தை வலியுறுத்தினார்.

இராயப்பேட்டை அம்மன் கோயில் தெருவிலே ஒரு வீடு. அவ்வீட்டுப் பின்புறத்தில் சிலர் குடியிருந்தனர். மாமி ஒருத்தி பொல்லாதவள்; மருகியைத் தொந்தரவு செய்பவள். ஒருபோது அவள் மருகியைச் சூடும் இட்டாள். ஒருநாள் மருகியை நன்கு புடைத்தாள் மாமி. மருகியின் தலையிலும் முகத்திலும் காயங்கள். இரத்த வெள்ளம். ஓரே கூக்குரல். கூக்குரல் கேட்டு ஓடினார் இளந் திரு.வி. க. மருகி இரத்தக் காட்சி தந்தது கண்டு உள்ளம் உருகினார். ஓடினார் போலீஸ் ஸ்டேஷனுக்கு. சப் இன்ஸ்பெக்டரை அழைத்து வந்தார். சப் இன்ஸ்பெக்டர் மாமிக்கு எச்சரிக்கை செய்தார். மருகிக்கு நாள்தோறும் மாமி பெய்த வசையும் பிறவும் அறவே நின்றன.

இராயப்பேட்டை முத்து முதலித் தெருவிலே அர்ச்சகன் ஒருவன் இருந்தான். அவன் வீட்டிலே புதிய தொரு பெண் வந்தாள். புதுப் பெண்ணின் வருகை கண்டனர் தெருப் பெண்கள். அப் பெண்ணின் வரலாறு அறிந்தனர். அப் பெண் ஒரு கிராமத்தான் மனைவி. அவளை எப்படியோ ஏமாற்றி அழைத்து வந்துவிட்டான் அர்ச்சகன்.

இச் செய்தி அறிந்தார் இளம் திரு. வி. க. 'கை ரேகை குறி' பார்த்துச் சொல்லும் ஒருவனை அழைத்தார். புதுப் பெண்ணின் வரலாற்றை அவனுக்கு அறிவித்தார். அப் பெண்ணின் மனத்தை மாற்றி ஊருக்கு அனுப்பிவிடுமாறு

சொன்னார். குறி சொல்பவனும் அவ்வாறே ஆகட்டும் என்று போனான். கிராமத்துப் பெண்ணைக் கண்டு குறி சொன்னான். இரண்டரை ரூபாய் கூலியும் பெற்றான். இரவு வந்தது. பொழுது விடிந்தது. பெண்ணைக் காணோம். அர்ச்சகன் அங்குமிங்கும் தேடிக் கொண் டிருந்தான்.

திரு. வி.க.வின் நண்பர் ஒருவர். அவர்தம் முதல் மனைவி இறந்தாள். மறுமணம் செய்து கொண்டார் நண்பர். முதல் மனைவிக்குப் பிறந்த மகள் ஒருத்தி, கைம்மை எய்தினாள். அப் பெண்ணை அவளது மாற்றாந்தாய் துன்புறுத்தினாள். பெரிதும் துன்புறுத்தினாள். அது கண்டார் தந்தை. மனம் நொந்தார். மனைவியின் உள்ளத்தை மாற்ற முயன்றார். ஒரு வழியிலா? பல வழி களிலும் முயன்றார். முயற்சி வெற்றிபெறவில்லை. கவலை யுற்றார் நண்பர்; உடல் மெலிந்தார்.

உடல் மெலிந்த அவரைக் கண்டார் திரு. வி. க. மெலி வுக்குக் காரணம் யாதென்று கேட்டார். அவர்தம் வீட்டு நிலை கூறினார்; வருந்தினார். 'மகள் வெளித் தாண்டு வாளோ? கெட்டுப் போவாளோ? தற்கொலை செய்து கொள்வாளோ?' என்று கலங்கினார் நண்பர். அவரது கலக்கம் திரு வி.க.வையும் கலக்கியது.

நண்பரின் நோய்க்கு மருந்து காண விரும்பினார் திரு.வி.க. 'பெண் துன்பம் நீங்குதல் வேண்டும்; உமது கவலையும் தீர்தல் வேண்டும். அதற்கு வழி ஒன்றே, பெண்ணுக்கு மறுமணம் செய்வது நல்லது' என்றார் திரு. வி. க.

"சமூகம் இடம் தராதே" என்றார் நண்பர்.

"இடம் தரும் சமூகத்துக்கு அவளை அனுப்புவீரோ?" என்று கேட்டார் திரு. வி. க.

"பெண்ணின் மனத்தை அறிதல் வேண்டும்" என்றார் நண்பர். அது அவரால் இயலவில்லை.



திரு.வி.க. என் செய்தார்? ஒரு பெண்மணியை அனுப்பினார். அவர் கிறிஸ்தவப் பெண்மணி. நண்பரின் மகளுக்குப் பைபில் போதித்தாள். அப் பெண்மணி கிறிஸ்தவ சங்கத்தில் சேர்ந்தாள. நன்றாகப் படித்தாள். ஆசிரியத் தொழில் ஏற்றாள். மறுமணத்தில் அவள் மனம் செல்ல வில்லை. அவளது துன்பம் தீர்ந்தது. தந்தையின் கவலையும் தீர்ந்தது.

கடற்கரையிலே அரசியல் கூட்டங்கள் நடைபெறும். விடுதலை பற்றி முழங்குவர். பின்னே கூட்டம் கலையும். கலைந்த கூட்டம் பஸ் நிலையங்கள் நோக்கும். கிழவரும் மெல்லியரும் பஸ் நிலையங்களை அணுக இயலாது தவிப்பர். இளைஞர் சிலர் பெண்களின் நிலை கண்டு இரங்குவர். பெண்களுக்கு உதவி செய்வர். இவ் விளைஞர் சிலரோடு திரு. வி. க.வும் கலந்துகொள்வார்.

திருப்பாதிரிபுலியூர் ஞானியார் சுவாமிகளின் பேச்சுக் கேட்கப் பெருங்கூட்டம் திரளும். பேச்சு முடியும்வரை அமைதியாகக் கேட்கும். பேச்சு முடிந்தபின் பரபரப்புடன் பஸ் நோக்கி ஓடும். அடியவர் கூட்டம் அரசியல் கூட்டத்தைத் தோற்கடிக்கும். அங்கே திரு.வி.க. நிற்பார். அடியவர் செயலைக் கண்டிப்பார். பெண்களுக்கு உதவி புரிவார்.

மாயவரத்திலே 'நாகபாசத்தார் சங்கம்' என்ற ஒன்று காணப்பட்டது. அது பின்னே இசை வேளாளர் சங்கமாக மாறியது. சங்கத்தின் தூண் போன்று விளங்கியவர் ஓர் அம்மையார். அவர் பெயர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் என்பது. தஞ்சை ஜில்லாவிலே அவர் செய்த சேவை மறக்கமுடியாத ஒன்று. அவ் வம்மையார் எங்கு சென்றாலும் வழுக்கி வீழ்ந்த சகோதரிமார் கூட்டம் அவரைச் சூழ்ந்திருக்கும்.

மூவலூர் இராமாமிர்தம் ஒரு மாநாடு கூட்டினார். இசை வேளாளர் மாநாடு. அதாவது 1925ஆம் ஆண்டு,

அம் மாநாட்டிலே திரு. வி. க. முழங்கினார். வழுக்கிய சகோதரிமார் வரலாற்றினை எடுத்துரைத்தார். அவர் கோயில் புக நேர்ந்ததைக் கூறினார். இசையும் நாட்டியமும் வளர்த்த விதத்தைக் கூறினார். பொட்டுக்கட்டலை அறவே ஒழித்தல் வேண்டும் என்று முழங்கினார்.

இக் கிளர்ச்சியின் விளைவு என்ன? டாக்டர் முத்து லட்சுமி அம்மையார் சென்னைச் சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவந்தார். தாசி ஒழிப்பு மசோதா என்பது அதன் பெயர். கோயில்களில் பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிப்பதே அம் மசோதாவின் நோக்கம்.

அம் மசோதாவுக்கு எதிர்ப்புகள் தோன்றின. 'நவசக்தி' வாயிலாக முத்துலட்சுமி அம்மையாருக்கு ஆதரவளித்தார் திரு. வி. க. கூட்டங்களில் பேசினார்.

இளமை மணத்தை ஒழிக்கவந்த சாரதா மசோதா வுக்கும் ஆதரவு தந்தார் திரு. வி. க.

கைம்மை மணம்—கலப்பு மணம் ஆகியவற்றுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

'பெண்ணின் பெருமை' என்று ஒரு நூல் எழுதியிருக் கிறார் திரு. வி. க. இந்நூல் 1927 ஆம் ஆண்டு முதன்முதலாக வெளிவந்தது. அதன்பிறகு பல பதிப்புகள் வெளி வந்துள்ளன.

இந்நூல் முதன்முதல் வெளிவந்தபோது 'கலியாணன் நூல், கலியுக நூல்' என்றார் தமிழ் அறிஞர் ஒருவர். அவர் பெயர் கி. குப்புசாமி முதலியார் என்பது.

குப்புசாமி முதலியார் சிறந்த தமிழ் அறிஞர். ஆனூர் சிங்காரவேல் முதலியாரிடம் தமிழ் பயின்றவர். பழமை யில் பெரும் பற்றுடையவர். சீர்திருத்தம் கண்டு சீறுபவர். 1914 ஆம் ஆண்டுமுதல் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் செயலாளராக இருந்தவர். பல ஆண்டுகள் இருந்தவர். திரு. வி. க.வைச் சிறு வயது முதல் அறிந்தவர். 'குழந்தை' என்று அன்போடு திரு. வி. க.வை அழைப்பவர்.



ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து நான்காம் ஆண்டு சைவ சித்தாந்த சமாஜத்தின் ஆண்டுவிழா திருவதிகையில் நடைபெற்றது. திரு. வி. க. தலைமை வகித்தார்.

குப்புசாமி முதலியார் சொற்பொழிவு நிகழ்த்தினார். எடுத்துக்கொண்ட பொருள் திருவெம்பாவை. தமது பேச்சின் இடையே அவர் என்செய்தார்? திரு. வி. க. வின் பெண் உரிமைக் கொள்கையைத் தாக்கினார்.

திரு. வி. க. தமது முடிவுரையில் என்ன கூறினார்? திருவெம்பாவை பெண்மையையே அடிப்படையாகக் கொண்டது என்றும், அதன்கண் பெண் நலம், உற்ற வயது வந்த பெண்கள் வெளிவரல், வீதிவலம் போதல், திருக்குளத்தில் நீராடல், தக்க கணவரை அருளுமாறு ஆண்டவனை வேண்டல் முதலிய உரிமைகள் செறிந்து கிடக்கின்றன என்றும் எடுத்துக்காட்டினார். அவ் விளக்கம் கண்டு சீற்றமுற்றார் குப்புசாமி முதலியார்.

அடுத்தநாள் குப்புசாமி முதலியார் சென்னை செல்லச் சித்தமானார். அவரைக் கண்டார் திரு. வி. க. "கலியாணம்! கோயில்களில் உள்ள சிலைகளை அகற்றி விட்டு, அவ்விடங்களில் இளம் பெண்களைக் கொண்டு வந்து நிறுத்தப்பா!" என்றார்.

"அந்நாள் சேய்மையில் இல்லை!" என்று பதில் அளித்தார் திரு. வி. க.

# 15. சைவமும் திரு.வி.க.வும்

சைவர் குடியிலே பிறந்தவர் திரு. வி. க. அவரது தந்தையார் சைவர்; அவர் திருநீறணிந்தார்; கோயிலுக்குப் போனார். திரு. வி. க. வும் திருநீறணிந்தார்; கோயிலுக்குப் போனார். திரு. வி. க. வின் தந்தையார் சைவப் பாடல்கள் பல பாடுவார். திரு. வி. க. அவற்றைக் கேட்பார்.

இராயப்பேட்டை சுந்தரேசுவரர் கோவிலில் ஒருவர் சைவப் பிரசங்கம் செய்தார். சித்தாந்த சண்டபாருதம் சோமசுந்தர நாயக்கர் என்பது அவர்தம் பெயர். இளம் திரு. வி. க. வும் அவரது நண்பர்களும் கோயிலின் உள்ளே செல்வர்; பிரசங்கம் கேட்பர். பிரசங்கத்தின் பொருள் அவர்களுக்குத் தெரியுமோ? தெரியாது.

1901ஆம் ஆண்டு டிசம்பர் மாத விடுமுறை. அப்போது யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை புரசைவாக்கத்திலே புராணப்பிரசங்கம் செய்தார்.

அவர்தம் பிரசங்கம் கேட்பதற்கென்று இராயப் பேட்டையிலே ஒரு கூட்டம் திரண்டது அக் கூட்டத்தில் இளம் திரு. வி க. வும் கலந்தார். அக் கூட்டம் புரசை நோக்கியது

புரசையிலே சந்தரம்பிள்ளை தெருவிலே ஒரு வீர சைவரின் இல்லம். அந்த இல்லத்திலே பெருங்கூட்டம் கூடியிருந்தது. அக் கூட்டத்திலே,

*"காளமேகம் ஒருருக்கொண்டு நெற்றியில் நீறணிந்து, கழுத்தில் அக்கமாலை பூண்டு, இடுப்பில் பீதாமபரம் புனைந்து சொன் மழை பொழிந்தது' கண்டார் இளம் திரு. வி. க.

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.



"காளமேகமெனக் காட்சிதந்த கதிரைவேற்பிள்ளையின் கோலமும் பேச்சும்" திரு. வி. க. வை ஆண்டன. அன்று முதல் அவர்தம் பேச்சு மேடைகள் திரு. வி. க. வைக் காந்தமெனக் கவர்ந்தன.

கதிரைவேற்பிள்ளையின் சேர்க்கையும் பிறவும் என் செய்தன? இராயப்பேட்டையில் ஒரு சைவசபை காணுமாறு திரு. வி. க. வைத் தூண்டின. அத்தூண்டுதலால் 1903ஆம் ஆண்டு பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையைத் தோற்றுவித்தார்.

பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை முதன்முதல் முத்து முதலித் தெருவில் குத்தம்பாக்கம் அப்பாசாமி முதலியார் வீட்டின் அறையில் அமைக்கப்பட்டது.

காலையில், அரை முண்டு உடுத்திக் கையில் செம்பு தாங்கி ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபைப் பெருமானைப் பூசிக்கத் தெருவழியே செல்வார் திரு. வி. க.

அந் நிலையில் அவரைக் காணும் நண்பர் நெஞ்சம் இரங்கும். திரு. வி. க. சாமியாராகி விடுவார் என்று பலரும் எண்ணினர்.

பின்னே மௌபரீஸ் ரோடில் சபைக்கென்று சொந்த நிலையம் அமைந்தது. அந்த நிலையத்தில் 'நக்கீரர் கழகம்' என்ற பெயரில் கழகம் ஒன்று அமைத்தார் திரு. வி. க. தமிழ் வகுப்பு நடத்தினார்.

1911 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சைவசித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழாக் கூட்டம் நடைபெற்றது. நடைபெற்ற இடம் சென்னை விக்டோரியா மண்டபம்.

விழாவுக்குத் தலைமை வகித்தவர் ஜே. எம். நல்லசாமி பிள்ளை. அக்கூட்டத்தில் முதன்முதலாகப் பேச இடம் பெற்றார் திரு. வி. க. பேசிய பொருள் 'சைவன் எவன்?' என்பது.

*சைவம் என்பது ஒரு குறிப்பிட்ட சமயம் அன்று என்றும், அது பொதுவான ஒன்று என்றும், முனைப்பற்ற தொண்டு நிலையிலே விளங்குவதே சைவம் என்றும், அந்நிலை சாதி மதங் கடந்தது என்றும், இன்னோரன்ன இயல்புகளையுடைய ஒருவனே சைவன் ஆவான் என்றும் விவரித்தார் திரு. வி. க. அப்பேச்சு சாதிச் சைவம் முகம் சுறுகச் செய்தது.

பின்னர் சென்னையின் நானா பக்கங்களிலும் சென்று சைவப் பிரசங்கம் செய்தார் திரு. வி. க. பிள்ளையார் கோயில் மண்டபங்கள் எல்லாம் அவரது பிரசார மேடைகளாயின. தென்னாட்டிலுள்ள சைவ சபைகளில் நாற்றுக்குத் தொண்ணூறு திரு. வி. க. வின் பேச்சைக் கேட்டிருக்கும்.

திரு. வி. க. சிவ தீட்சை பெறாமலே இருந்தார். சிவ தீட்சையிலே அவருக்கு உறுதியுண்டாகவில்லை.

தீட்சை செய்து கொள்ளுமாறு திரு. வி. க. வைப் பெரிதும் வற்புறுத்தியவர் வண்டிப்பாளையம் இராசப்ப முதலியார், சிதம்பரம் முத்துக்கற்பக தேசிகரைக் கொண்டு திரு. வி. க. வுக்குத் தீட்சை செய்வித்தார் இராசப்ப முதலியார். சமயம் விசேடம் என்ற இரண்டு தீட்சைகள் பெற்றார். வேளைக்கு வேளை முறைப்படி அனுஷ்டானம் செய்து வந்தார் திரு. வி. க.

ஆனால் அவர் மனம் அதில் ஆழ்ந்ததே இல்லை. அஃது இயந்திர வேலை போல் அவருக்குத் தோன்றியது. எனினும் இயந்திரத்தை இயக்கிவந்தார்.

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபைக்குச் சென்றார் திரு. வி. க. அங்கே என்ன கண்டார்? ஒருவர் செய்த அனுஷ்டானத்தை இன்னொருவர் குறை கூறுதல் கண்டார். 'புறத்துக்கு மக்கள் அடிமையாயிருக்கிறார்களே' என்று நினைத்தார். அந்த நினைப்பு அவரது அனுஷ்டானத்தை நிறுத்தியது.

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.



சைவம் ஒன்றே மெய்ம்மை யுடையது என்றும், அதுவே வீடு பேற்றுக்குரியது என்றும், தொடக்கத்தில் நம்பினார் திரு. வி. க. பின்னே அந்த நம்பிக்கை சிறிது சிறிதாக மறைந்தது.

சிவஞான சித்தியாரில் உள்ள பின்வரும் பாடல் சைவ சமயத்தின் சமரசத்தை திரு.வி.க.வின் உள்ளே விதைத்தது.

ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள் நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நிற்பது யாதொரு சமயம் அதுசமயம் பொருணூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கிடும் அவைரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்

அப்பர் திருவாக்கும், சம்பந்தர் திருவாக்கும் இவ் விதையை நன்கு வளரச்செய்தன.

'எவ்வுயிர்க்கும் அன்புடன் பணி செய்வதே சைவம்' என்று தேர்ந்தார் திரு.வி.க.

# 16. கிறிஸ்துவமும் திரு.வி.க.வும்

வெஸ்லி கல்லூரியில் திரு.வி.க. படிக்கத்தொடங்கிய நாள் முதல், பைபிளுடன் அவருக்குத் தொடர்புண்டாயிற்று வகுப்பில் அதையும் ஒரு பாடமாகப் படித்துவந்தார். ஞாயிறு வகுப்புகளுக்குச் செல்வார்; போதனை கேட்பார். கோயிலுக்குப் போவார்; அங்கே பாதிரியார் பேச்சுக் கேட்பார்; எதன் பொருட்டு? பரிசில் பெறும் பொருட்டு. அந்நாள் பைபிளின் [illegible] அவர் மனம் படியவில்லை. பைபில் எழுத்தை [illegible] பயின்றார்.

கிருஷ்ணராவ் என்பவர் ஐந்தாம் பார ஆசிரியர். அவர் வகுப்பில் வாதத்துக்கு இடமளிப்பார். பைபில் வகுப்பு வாத சபையாகும். ஆசிரியருடன் வாதம் புரிவார் திரு.வி.க. மாணவர் பலரும் வேடிக்கை பார்ப்பர். பைபில் வகுப்பை எதிர்பார்த்த வண்ணம் இருப்பர்.

அச்சமயம் கதிரைவேற்பிள்ளை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். கிருஷ்ணராவ் விடுக்கும் சிக்கலான கேள்விகளுக்குப் பதில் கதிரைவேற்பிள்ளையிடம் கேட்டு வந்து கூறுவார் திரு.வி.க.

கிறிஸ்துவப் பாதிரிமார் பேசும் கூட்டங்களுக்கு திரு.வி.க. அடிக்கடி செல்வார். கிறிஸ்துவத்தின் மாண்பை மட்டும் கூறுவர் சிலர். மற்றும் சிலர் பிற மதங்களைப் பழிப்பர். இவ்வாறு பழிப்போரை எளிதில் விடமாட்டார் திரு.வி.க.

பாதிரிமார்க்கும் திரு.வி.க வுக்கும் நிகழ்ந்த வாதங்கள் பல. அவை பெரும்பாலும் பாவ மன்னிப்பு பற்றியனவாக இருக்கும். 'பாவம் ஆதியா?' 'அநாதியா?' என்று பலரைக் கேட்பார். அவர் தரும் விடை பொருந்திய விடையாகக் கருத மாட்டார்.



ரெவரண்டு எட்டி என்பார் பின்வருமாறு கூறினார்.

"பாவம் ஆதியோ அநாதியோ, எப்படியேனும் இருக்கட்டும். அதுபற்றிய கவலை எங்களுக்கில்லை. மனிதன் பாவம் செய்கிறான். அவன் பாவத்தினின்றும் விடுதலையடைய அலைகிறான். அவ்வாறு அலையும் அவன் கிறிஸ்துவை நினைத்துத் தான் நிகழ்த்திய பாவத்தை உண்மையாக முறையிட்டு அழுவானாயின் அவன் பாவ மன்னிப்புப் பெறுகிறான். தன் பாவத்தை முறையிட்டு அழுவோனுக்கு மன்னிப்பு வழங்கி அவனை ஆட்கொள்ளவே கிறிஸ்து உலகில் பிறந்தார்."

இப் பதில் கேட்ட திரு. வி. க.வின் உள்ளம் நெகிழ்ந்தது.

ஆயிரம்விளக்குப் பள்ளியில் திரு. வி. க. ஆசிரியராகயிருந்தபோது ஜான் ரத்தினம் அவர்களின் நட்புக்கிடைத்தது. அவர்தம் கூட்டுறவு திரு. வி. க.வுக்குப் பைபிலின் பொருளை விளக்கியது.

ஒருநாள் பிட்டர்ஸ் ரோட் வழியே ஆயிரம்விளக்கு நோக்கி நடந்துகொண்டிருந்தார் திரு. வி. க. முறையீடு—அழுகை—பாவ மன்னிப்பு ஆகியவற்றின் நுட்பங்கள் திடீரென அவருக்கு விளங்கின. முறையீடும், அழுகையும், மன்னிப்பும் மலிந்த மாணிக்கவாசகர் மொழிகள் ஒன்றன்பின் ஒன்றாக அவர் உள்ளத்தில் தோன்றின. மாணிக்கவாசகரின் திருவாசகமும் கிறிஸ்துவின் சுவிசேஷமும் கருத்தில் ஒன்றாகவே விளங்கின.

அச் சமயத்தில் இராயப்பேட்டை அம்மையப்ப முதலித் தெருவிலே ஒரு சிறு சங்கம் தொடங்கப்பட்டது. பெந்தகொஸ்தே சங்கம். முறையிட்டாலும், அழுகையாலும், தம்மைப் பண்படுத்திக் கொள்வோர்க்குப் பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானம் நேரே கிடைக்கும் என்று அச் சங்கத்தினர் கூறினர். அவ்வாறு ஞான ஸ்நானம் பெற்றவர் தம் பாவச் செயல்களைப் பிதற்றி வெளியிடுவர் என்றனர். அவர்தம் பேச்சு திரு. வி. க. வை ஈர்த்தது.

பங்காருப் பத்தர் என்பவர் ஒரு தமிழ்ப் புலவர். புதுவையிலே கலைமகள் கழக ஆண்டு விழாக்களைச் சிறப்பாக நடத்திவந்தார் அவர். ஆண்டுதோறும் ஞானியார் சுவாமிகளே அவ் விழாவுக்குத் தலைமை தாங்குவார், ஒவ்வோராண்டும் திரு. வி. க. சொற்பொழிவு நிகழ்த்த அழைக்கப்படுவார்; அவ் வழக்கப்படியே 1915 ஆம் ஆண்டும் அழைக்கப்பட்டார். தேவப் பிரசாதம் பண்டிதர் எனும் பெயர் கொண்ட கிறிஸ்தவ நண்பர் ஒருவரும் திரு. வி. க.வுடன் சென்றார். சாதிச் சைவர் ஒரு கிறிஸ்தவருடன் உணவு கொள்ள இசையார் என்பதை திரு.வி.க. அறிவார். எனவே, அவரும் நண்பரும் புதுவை தியாசோபிகல் சங்கத்தில் தங்க ஏற்பாடு செய்து கொண்டனர்.

மணம் பூண்டி குமாரசாமிப் பிள்ளை என்பவர் திரு. வி. க.வின் தோழர்; தமிழ் அறிஞர்; சீர்திருத்த நேயர். கிறிஸ்துவ நண்பர் ஒருவரையும் அவர் அழைத்து வந்தார். இதனை அறிந்தார் திரு. வி. க. அந்த நண்பரையும் தம்முடன் தங்குமாறு வேண்டினார். நண்பரும் இணங்கினார்.

மடத்துச் சைவர் ஒருவர் திரு. வி. க. கிறிஸ்துவருடன் உணவு கொண்டதைக் கூட்டத்தில் வெளியிட்டார்; மறுத்தார்; கண்டித்தார்; சைவத்துக்கு முரண்பாடு என்றார்.

திரு. வி. க. என் செய்தார்? தமது பேச்சிலே மடத்துச் சைவரின் கூற்றை வெட்டிச் சாய்த்தார்; நாயன்மார் வரலாறுகளை எடுத்துக்காட்டினார்; தமது செயல் சரி என்று நிலைநாட்டினார்.

மடங்கள் சமயம் வளர்க்கத் தோன்றியவை; ஆனால் அங்கே சாதிக் கட்டுகளே வளர்கின்றன. மடங்களைச் சீர்திருத்தும் நோக்குடன் 'தேசபக்த'னிலும் 'நவசக்தி'யிலும் கட்டுரைகள் பல வரைந்து கிளர்ச்சி செய்தார் திரு.வி.க. மாநாடுகளில் கோயில் சீர்திருத்தம் பற்றிப் பேசுவார். விளக்குவார்; தீர்மானங்கள் நிறைவேற்றுவார்.



"ஒரு சிறு உத்தியோகஸ்தன் கோயிலுள் தலைகாட்டியதும் அவன் கோயில் அதிகாரிகளால் தெய்வமாக வரவேற்கப்படுகிறான். கட்டணம் எனும் பேய் கோயிலை விட்டு அகலவேயில்லை. நுழைவுக்கு இவ்வளவு, அபிஷேகத்துக்கு இவ்வளவு, ஆராதனைக்கு இவ்வளவு என்று கட்டணத் திட்டம் கோலப்பட்டிருக்கிறது, கோயில் சுங்கச்சாவடியா? கள்ளர் குகையா?" என்று கூறுவார்! மேடைகளில் பேசுவார்.

ஆரணி சுப்பிரமணிய சாஸ்திரியார் திரு வி. க.வின் நண்பர்; வட ஆர்க்காடு ஜில்லா காங்கிரஸ் தலைவராக யிருந்தவர். திரு. வி. க. வேலூர் செல்லும்போதெல்லாம் பெரிதும் அவரே சாப்பாட்டு வசதி செய்வார். ஆனால் அவர் உடன் அமர்ந்து உண்ணமாட்டார்.

1920ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பேசுமாறு வேலூருக்கு அழைக்கப்பட்டார் திரு. வி. க. அன்றையக் கூட்டத்தில் பழைய இந்திய நாகரிகத்தையும், இடைக் காலத்தில் அஃதுற்ற நிலையையும் இந்நாளில் அந்நாகரிகம் வீழ்ந்துப்பட்ட நிலையையும் விளக்கினார். இந்தியா மீண்டும் பழைய நிலை அடைய வேண்டுமாயின் அதற்குரிய வழி சத்தியாக்கிரகமே என்று கூறினார். வழக்கம் போலவே சுப்பிரமணிய சாஸ்திரியார் திரு.விகவைச் சாப்பாட்டுக்கு அழைத்தார். வீட்டிலே ஓரிலை போடப்பட்டிருந்தது. இன்னோர் இலையும் போடுமாறு கூறினார் சாஸ்திரியார். 'யான் அப்பூதி' என்றார். 'உங்கள் பேச்சு உங்களை நாவரசாக்கிற்று என்னை அப்பூதியாக்கிற்று' என்றார்.

அருகில் இருந்தார் கண்ணமங்கலம் இராகவ ஐயர். தாமும் ஓர் இலையைத் தருவித்து அருகில் அமர்ந்தார். மூவரும் உணவு கொண்டனர். சாஸ்திரியார் மனோ

நிலையையும் இராகவ ஐயர் மனோ நிலையையும் மாற்றியது எது? சீர்திருந்தச் செய்தது எது? அன்பு; அன்பு; திரு. வி. க.வின் அன்பு.

ஆலந்தூரிலே சிவனடியார் திருக் கூட்டம் ஒன்று இருந்தது. சுப்பிரமணிய நாயகர் என்பவர் அதன் அமைச்சராயிருந்தார். அத்திருக் கூட்டத்தில் திரு. வி. க. வின் சொற்பொழிவு அடிக்கடி நிகழும்.

ஒருமுறை சுவாதி நன்னாளில் சுந்தரர் வரலாற்றைப் பேசினார் திரு. வி. க. ஒரு வைதிகப் பிராமணர் வீட்டில் திரு. வி. க.வின் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரு. வி. க. அங்கு உணவு கொள்ளச் சென்றார். அந்த வீட்டு மாமியும் மருகியும் திரு. வி. க.வை உபசரித்தனர். உண்ட இலையை எடுத்தனர். "நாங்கள் வைதிகர். ஆனால் உங்கள் சுந்தரப் பேச்சு எங்கள் சாதியையும் மறக்கச் செய்தது" என்றனர்.

ஆதி திராவிடர் திருமணங்கட்குச் செல்வார் திரு. வி. க சாப்பிடாமல் வர மாட்டார். சாதிக் குறும்பின் வேரை அறுக்கவே இவ்வாறு செய்வார். சண்முகம் என்பவர் திரு. வி. க.வின் மாணாக்கருள் ஒருவர். பெங்களூரில் வேலை பார்த்து வந்தார். சென்னையில் அவருக்குத் திருமணம் நடந்தது. அத் திருமணத்துக்கு திரு. வி. க. சென்றாரிலர். காரணம் உடல் நலமின்மையே. பின்னே இராமலிங்க சுவாமிகள் திருநாள் கொண்டாட்டத்தின் பொருட்டுப் பெங்களூர் சென்றார் திரு. வி. க. சண்முகமும் அவரது மனைவியும் திரு. வி. க.வைக் கண்டனர். உணவு கொள்ள வருமாறு அழைத்தனர். அவர்தம் அழைப்பை ஏற்றார் திரு. வி. க. அவருடன் மாரண்ட ஹள்ளி மிட்டாதார் ஒருவரும் தொடர்ந்தார். இருவரும் விருந்துண்டு திரும்பினர்.



ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து இரண்டாவது ஆண்டு திருநெல்வேலி ஜில்லா மாநாடு தென்காசியில் நடைபெற்றது. திரு. வி. க. தலைமை வகித்தார். வரவேற்புத் தலைவர் இஸ்லாமானவர். மாநாடு முடிந்ததும் திரு. வி. க. வைச் சாப்பிட அழைத்தார் அவர். அவர்தம் அழைப்புக்கு இணங்கினார் திரு. வி. க. இஸ்லாமானவர் வீட்டில் உணவு கொண்டார்.

கோயில்களில் பலியிடும் கொடுமை நீண்ட காலமாக நிகழ்ந்து வருகிறது; அக்கொடுமையை நிறுத்தப் பாடுபட்டார் திரு. வி. க.

திருவொற்றியூரிலே தியாகேசப் பெருமான் திருக்கோயில் மூலையிலே ஆண்டுக்கொரு முறை எத்தனையோ ஆடுகளையும் எருமைக் கன்றுகளையும் பலியிட்டு வந்தனர். இந்தப் பலியை நிறுத்தப் பெரும்பாடு பட்டது சென்னை ஜீவரட்சக சபை. அச் சபையுடன் கலந்து தொண்டாற்றினார் திரு. வி. க. இதன் விளைவாக 1940ஆம் ஆண்டில் அங்கே பலியிடும் வழக்கம் அறவே ஒழிந்தது.

சென்னைக்கு அணித்தே பெரியபாளையம் என்று ஓர் ஊர் உளது. அங்கேயுள்ள அம்மன் கோயில் முன் ஆடித் திங்கள் தோறும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகும். ஜீவ ரட்சக பிரசார சபை அங்கும் சென்றது. அச் சபையின் சார்பில் திரு. வி. க.வும் சென்றார். பலி நிறுத்தல் பிரசாரம் செய்தார்.

வடஆர்க்காடு ஜில்லாவில் வெட்டுவாணம் என்றோர் சிற்றூர் உளது. அங்கே ஒரு கோயில் உளது. எல்லம்மன் கோயில்: கோயிலுக்கு வெளியே பலி நடைபெறும்.

பலி நிறுத்த வேண்டி ஒரு சங்கம் கண்டார் மௌன சுவாமிகள். சன்மார்க்க சங்கம். அச் சங்கச் சார்பில் ஆண்டுதோறும் பலி நிறுத்த மாநாடு நடைபெறும்.

ஒவ்வோராண்டும் மாநாட்டுத் தலைமை திரு. வி. க.வுக்கே வழங்கப்படும். இம்முயற்சியால் அங்கே உயிர்க் கொலை அறவே ஒழிந்துவிட்டது.

பள்ளி கொண்டையிலே ஒரு பெண்மணி இளம் பருவத்திலேயே கைம்மை எய்தினார்; மகள் விரும்பினால் மறுமணம் செய்விக்க உறுதி கொண்டார் பெண்ணின் தந்தையார். குடியேற்றத்தில் உள்ள ஓர் இளைஞர் அப்பெண்ணை மணக்க முன் வந்தார். ஆரிய சமாஜ அறிஞர் கன்னையாவும் திரு. வி. க.வும் கலந்து அத்திருமணத்தை நடத்தினர்.

கலப்பு மணமும் கைம்மை மணமும் ஓங்கினால் சாதி ஒழியும் என்று திரு. வி. க. முழங்கினார்; எழுதினார்; பேசினார்; அவ்வகையில் தொண்டும் செய்தார்.

# 18. தொண்டும் திரு. வி.க. வும்

திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டத்திலே மகேசுவர பூஜை மிக்க சிறப்புடன் நடைபெற்றது. எச்சில் எடுப்பவர் எங்கேயோ சென்றனர். சாப்பாட்டுக்குப் பெருங் கூட்டம் தேங்கியது. அப்போது அங்கிருந்தார் திரு. வி. க. கூட்டம் தேங்கியிருத்தல் கண்டார். 'என்ன தயக்கம் என்று அருகிலுள்ளோரை வினவினார். "எச்சில் எடுப்போரைக் காணோம்!" என்றார்.

உடனே திரு. வி. க. என் செய்தார்? எச்சில் இலைகளை எடுத்தார். அது கண்ட மற்றவரும் அத்தொண்டில் இறங்கினர். அவ்விடம் சுத்தம் செய்யப் பெற்றது. மீண்டும் உணவு பரிமாறப்பட்டது.

ஏகாம்பரம் என்பவர் திரு. வி. க. வின் பள்ளித் தோழர். பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை உறுப்பினர், ஆறுமுக நாவலர் நூல்களைப் படித்தவர். அந்நூல்கள் கூறியவாறே வாழ்க்கை நடத்த முற்பட்டவர்.

அவர் உடலில் பெரியம்மை வார்த்தது. 'அம்மை தொற்றுநோய்; இளைஞர் அணுகுதல் கூடாது' என்ற கட்டுப்பாடு பிறந்தது. திரு. வி. க. என் செய்தார்? அக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடந்தாரா? இல்லை. கட்டுப் பாட்டை மீறினார்; ஏகாம்பரத்திடம் சென்றார். பணி செய்தார்.

அம்மை அந்த ஏகாம்பரத்தின் உயிரைக் குடித்தது. 'இளைஞர்கள் சுடுகாட்டுக்குப் போதல் கூடாது' என்ற கட்டளை பிறந்தது. அதைப் பொருட்படுத்தவில்லை திரு. வி. க. சுடுகாடுச் சென்றார். ஈமக் கடன்களில் பங்கு கொண்டார். அன்றிரவு தெருத் திண்ணையில் தூங்கினார் வேப்பங்கொழுந்து தின்றார்.

வடிவேல் முதலியார் என்பவர் திரு. வி. க. வின் உறவினர். காட்பாடியிலே கிணற்றில் வீழ்ந்து இறந்தார் அவர். அவர் உடலைச் சென்னையில் சேர்க்க வேண்டும் என்று வடிவேல் முதலியாரின் அன்னையார் பிடிவாதம் செய்தார். உடலைக் காட்பாடியினின்று கொண்டு வருதல் எளிதா? என்று உறவினரும் மற்றையோரும் திகைத்தனர்.

திரு வி. க. தலையிட்டார். வேலூர் சென்றார். வேலூர் நகரசபைத் தலைவராயிருந்தவர் வி. எம் இராமசாமி முதலியார், திரு. வி. க. வின் நண்பர். அவரைக் கண்டார் திரு. வி. க. அவர்தம் துணை பெற்றார். வடிவேல் உடல் சென்னை சேரச் செய்தார்.

திரு. வி. க. வின் உறவினர் ஒருவர். ஆந்திர நாட்டில் அரசாங்க ஊழியம் செய்தவர். அவர் தமது உடலையும் ஊழியத்தையுமே பெரிதாக எண்ணியவர்; ஏழை என்று திரு. வி. க.வை அவமதித்தவர். அவருக்குத் திடீரென வேலை போயிற்று. இழந்த வேலையை மீண்டும் பெறுதற்குப் பெருமுயற்சி செய்தார் அவர். பலன் இல்லை.

அவர்தம் நிலை அறிந்தார் திரு. வி. க. மனம் இரங்கினார். ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரிடம் அவரை அழைத்துச் சென்றார். சிபாரிசு செய்தார். அவர் நிரபராதி என்று விளக்கினார். ஒரு வாரத்தில் இழந்த வேலையை மீண்டும் பெற்றார் அவர்.

சதாசிவ ஐயர், தியாகராய செட்டியார், பனகல் ராஜா, ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலியோரிடம் திரு. வி. க. நெருங்கிப் பழகுதல் அறிந்த இளைஞர் பலர். புதுப்புது வேலைக்கென்று திரு. வி. க. விடம் வந்து சிபாரிசு வேண்டுவர். திரு. வி. க. வும் இயன்ற அளவு செய்வார்.

சூன் மாதத்திலே ஏழை மாணாக்கர் பலர் திரு. வி. க.வை மொய்த்த வண்ணம் இருப்பர். ஒல்லும் வகை அவர்தம் துன்பம் துடைப்பார் திரு. வி. க.

# 19. நா வன்மையும் திரு. வி. க. வும்

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஒன்பதாம் ஆண்டு. சுயமரியாதை இயக்கம் உச்ச நிலையில் இருந்த காலம். பெரியார்—திரு. வி. க. போராட்டம் தீவிரமாக நடந்த காலம். 'திராவிடன்' பத்திரிக்கையின் ஆசிரியராக விளங்கியவர் ஜே. எஸ். கண்ணப்பர். பெரியார் இயக்கத்துடன் உறுதணையாக நின்றான் 'திராவிடன்.'

தற்போது 'விருதுநகர்' என்று அழைக்கப்படும் ஊர் அப்போது 'விருதுப்பட்டி' எனும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. அந்த ஊரிலே தலை நிமிர்ந்து நின்ற கட்சிகள் இரண்டு, ஒன்று காங்கிரஸ்; மற்றொன்று பெரியார் கட்சி. அந்த ஊரிலே ஒரு வாசகசாலை. அதன் பெயர் இரத்தினசாமி நாடார் வாசகசாலை என்பது, அதன் ஆண்டு விழாவுக்குத் தலைமை ஏற்குமாறு வேண்டி திரு. வி. க. வுக்கு அழைப்பு வந்தது. திரு. வி. க. வும் தலைமை ஏற்க ஒப்புக்கொண்டார்; ஒப்பு கொண்ட பணியாற்ற விருதுநகர் சென்றார்.

பண்டிதை அசாலம்பிகை அம்மையாரும் மணம் பூண்டி குமாரசாமியாரும் அவ்விழாவில் பங்கு கொண்டனர். இந் நிலையில் ஜே. எஸ். கண்ணப்பரின் ஏவுதலால் குறும்பு ஒன்று நடைபெற்றது. என்ன குறும்பு?

கூட்டத்திலே குழப்பம் விளைத்துக் கூட்டத்தைக் கலைத்து, திரு. வி. க. வையும் நையப் புடைக்க வேண்டும் என்னும் ஏற்பாடு. இந்த ஏற்பாட்டுக்கென்று சதிக் கூட்டம் ஒன்றும் திரண்டது, அக்கூட்டம் என் செய்தது? குண்டர்களுக்குக் கூலி கொடுத்தது. வேண்டிய ஏற்பாடும் செய்தது. இவ்வாறு ஏற்பாடுகள் செய்த பின் அதுபற்றி ஜே. எஸ் கண்ணப்பருக்கு அறிவித்தது.

சென்னையில் இருந்த ஜே. எஸ். கண்ணப்பர் என் செய்தார்? "திராவிடன்" பத்திரிக்கையின் முதல் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் பின் வருமாறு வெளியிட்டார்.

திரு. வி. கலியாண சுந்தரனாருக்கு அடி!

கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

சென்னை அன்பர் சிலர் 'திராவிடன்' பத்திரிக்கையைக் கண்டனர். நெஞ்சம் பதைத்தனர். திரு. வி. உலக நாதரிடம் ஓடினர்; பத்திரிக்கையைக் காட்டினர். 'செய்தி என்ன?' என்று உசாவினர்.

'திராவிடன்' பத்திரிக்கைக் கண்டார் உலகநாதர். அன்பர் தம் பதைப்புக் கண்டார். மனம் கலங்கினார். உடனே தந்தி ஒன்று கொடுத்தார். எங்கே? விருதுநகருக்கு.

விருதுநகர் ஆண்டு விழாவில் என்ன நடந்தது? முதல் நாள் கூட்டம் அமைதியாக நடந்தது. இரண்டாம் நாள் மேடை மீதேறி அமர்ந்தார் திரு. வி. க. அப்போது ஒருவர் 'திராவிடன்' பத்திரிக்கையை திரு. வி. க. விடம் நீட்டினார். கண்டார் திரு. வி. க.

'திராவிடன்' தாங்கி வந்த செய்தியைக் கூட்டத்தில் படித்தார். பின்னே பத்திரிக்கை உலகின் பொய்ம்மைப் படைப்புக்களை விவரித்து விளக்கினார். அந்நிலையில் கூட்டத்தில் 'சலசலப்பு'க் கண்டது. குழப்பம் மூண்டது.

கண்டார் திரு. வி. க. எழுந்து நின்றார். எனக்கு இரண்டு கலைகள் ஓடுகின்றன. ஒன்று காந்தி கலை. மற்றொன்று திலகர் கலை. இப்பொழுது காந்தி கலையைத் திலகர் கலையில் ஒடுக்கி விட்டேன். இப்பொழுது நான் பேசப் போவது அஹிம்சை அன்று. போர்! போர்! போர் செய்ய எழுங்கள்! எழுங்கள் என்று உங்களை அழைக்கிறேன். புல்லர் கூட்டம் ஒன்று இங்கே குழப்பம் செய்ய வந்துள்ளது. அவர்களிடம் தடிகள் இருப்பது கண்டு



அஞ்சவேண்டாம். உங்கள் மகள் எங்கே போயின? எவரேனும் தடியை எடுப்பரேல் பாய்ந்து அவர்தம் தடியைப் பிடுங்குங்கள். தாக்குங்கள்; தாக்கித் தாக்கி வீழ்த்துங்கள்! விரட்டுங்கள்! ஓடுங்கள்!" என்று உரத்தக் குரலில் முழங்கினார். நீண்ட நேரம் முழங்கினார். கூட்டத்தினர் எழுச்சி பெற்றனர். கண்டது காலிக் கூட்டம். பூனை போல் பதுங்கியது. வெற்றி வீரர் திரு. வி. க. சுமார் மூன்று மணி நேரம் பேசினார். கூட்டம் அமைதியாக நடைபெற்றது; மிக அமைதி.

வாசகசாலை அன்பர்கள் திரு. வி. க.வைப் பாராட்டினார்கள். காங்கிரஸ் அன்பர்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள். அன்பர் கூட்டம் திரண்டுவந்து திரு. வி. க.வை ரயில் வண்டியில் அமர்த்தியது. ரயில் ஏறிச் சென்னை சேர்ந்தார் திரு. வி. க.

தம்பியைக் கண்டார் உலகநாதர். தழுவிக் கொண்டு மகிழ்ந்தார். பின்னே விருதுநகரில் நடந்தவற்றை எல்லாம் விவரிக்க கேட்டு நகைத்தார்.

இந்த நிகழ்ச்சியை முதன்முதல் எனக்குக் கூறியவர் சாத்தூர் தேச பக்தர் சுப்பிரமணிய நாயனாரின் மூத்த புதல்வர் சண்முக சுந்தர நாயனார். பின்னே திரு. வி. உலகநாதரிடம் இதுபற்றி நான் கேட்டேன். உலகநாத முதலியாரும் வே. தியாகராய முதலியாரும் இந் நிகழ்ச்சியை உறுதி செய்தனர். பின்னர் திரு. வி. க்.விடமே கேட்டேன். அவர் இதை மிகச் சுவைபட விவரித்து நகைத்தார் இம்மாதிரி நிகழ்ச்சிகள் பல.

# 20. தன்னலங் கருதாமையும் பிறர் நலன் பேணலும்

ஸ்ரீநிவாச ஐயங்கார் சென்னை வக்கீல்; பெரிய வக்கீல். பெரும் பொருள் ஈட்டியவர். சென்னையில் அட்வகேட் ஜெனரலாயிருந்தார். 1920 இல் அப் பதவியை உதறி விட்டுத் தேச சேவையில் ஈடுபட்டார். 1924, 25, 26 ஆம் ஆண்டுகளில் ஐயங்காரும் திரு. வி. க.வும் சேர்ந்து தொண்டாற்றினர். சட்டசபையில் திரு. வி. க.வை நுழைக்க எண்ணினார் ஐயங்கார். ஆனால் திரு. வி. க. அதற்கு இணங்கினார் அல்லர்; பட்டம் பதவி முதலியன தமக்கு வேண்டாம் என்று மறுத்துவிட்டார்.

"நீங்கள் இலௌகிகத்தில் சிறிது மேம்பட முயல வேண்டும். குறைந்தபட்சம் வீடு ஒன்று உங்களுக்குச் சொந்தமாக வேண்டும். கார் ஒன்று வேண்டும். நீங்கள் விருப்பம் தெரிவித்தால் வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்றார் ஐயங்கார்.

"சொந்த வீடும் காரும் எனக்கு எதற்கு? வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். அச்சுக்கூடம் இருக்கிறது. பத்திரிக்கை இருக்கிறது, புத்தகங்கள் எழுதுகிறேன். இவற்றால் எனக்குப் போதிய வருவாய் வருகிறது.

"கார் உள்ள நண்பர் பலர் இருக்கின்றனர். என்னைத் தம் காரில் அழைத்துச் செல்கிறார்கள். கார் கிடைக்காத போது குதிரை வண்டியில் செல்வேன். அதற்குக் காசில்லையேல் நடந்து செல்வேன். எனக்கு எது தேவையோ அதை ஆண்டவன் அருள்வான். தேவைக்கு மேல் விரும்புவது அறமாகாது; துன்பத்தையே வருவிக்கும்!" என்றார் திரு. வி. க.



ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு திரு. வி. க.வின் மணி விழா ஆண்டு. மணி விழா மிகச் சீரிய முறையில் மிக விரிந்த முறையில் நடைபெற விரும்பினேன் நான். ஓராண்டுக்கு முன்னரே அதுபற்றி 'நவசக்தி'யில் எழுதினேன்.

எனது எழுத்துப் பலரை எழுப்பியது. பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அம் முயற்சியில் ஈடுபட்டார்: மணிவிழாக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. கோவை மில் அதிகாரி சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் தலைவர்; ராஜா சர் அண்ணாமலை செட்டியார், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், பெரியார் ஈ. வே. ரா முதலியோர் உபதலைவர். மீனாட்சி சுந்தரனாரும், கோவை சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரும் செயலர்.

பணமுடிப்பு ஒன்று திரு. வி. க.வுக்கு வழங்கத் திட்டமிட்டனர். விழாக் குழுவினர். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் உள்ளிட்ட சிலர் பெருநிதி ஒன்று வழங்குவதாகவும் தெரிவித்தனர். ஆனால் திரு. வி. க. என்ன சொன்னார்?

"எக் காரணம் பற்றியும் பணமுடிப்பு வழங்குதல் கூடாது!" என்றார்.

திரு. வி. க.விடம் பெரிதும் மன்றாடினார் பன்மொழிப் புலவர். பயனில்லை. உறுதியாக நின்றார் திரு. வி. க. பணமுடிப்பு அளிக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

பிரபலமான நாட்டுக் கோட்டை நகரத்தார் ஒருவர், பெரும் செல்வர்; பெருந்தொழில் அதிபர்; கோடீசுவரர் அவர் ஒருபொழுது திரு. வி. க.வைக் காண வந்தார்.

அப்போது திரு. வி. க. எந்நிலையில் இருந்தார்? உடல் மெலிந்து பார்வை இழந்து படுக்கையில் கிடந்தார்.

திரு. வி. க.வைத் தம் கண்மணி போல் காத்து வந்த தமையனார் திரு. வி. உலகநாத முதலியாரும் இறந்து

விட்டார். அச்சுக்கூடம் வருவாய் சுருங்கியது. புத்தக விற்பனையும் சுருங்கியது. வாழ்வில் அமைதியில்லை: புயல்! புயல்!

இத்தகைய நேரத்தில்தான் அப் பெருஞ் செல்வர் திரு. வி. க.வைக் காண வந்தார். வந்தவர் என்ன கண்டார்? திரு. வி. க.வின் நிலை கண்டார்; உளம் கசிந்தார்.

"எவ்வளவு ஆயிரம் ரூபாய் வேண்டுமாயினும் சரி, தருகிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்!" என்றார் செட்டியார்.

திரு. வி. க. என் செய்தார்? 'செக்'கைப் பெற்றாரா? இல்லை.

"எனக்குப் பணம் எதற்கு? வேண்டாம். உங்கள் அன்புக்கு நன்றி!" என்றார்.

செட்டியார் சும்மா விட்டாரா? இல்லை. 'ஆயிரம் ரூபாய்' என்று எழுதி செக்கைப் பூர்த்தி செய்தார். யாரும் அறியாமல் திரு. வி. க.வின் தலைப்புறம் வைத்து விட்டார்: விடை பெற்றுப் போனார்.

அவர் போன பிறகு வந்த ஒருவர் 'செக்'கைக் கண்டார். எடுத்தார். திரு. வி. க.விடம் கொடுத்தார். திரு. வி. க. என் செய்தார்? ரெட்டியாருக்குத் திருப்பி அனுப்பி விட்டார்.

திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டம் என்ற தொரு சைவ சபை 1908ஆம் ஆண்டிலே காணப்பட்டது. அக்கூட்டம் பெரிதும் திருவல்லிக்கேணி வாணிபர் பார்வையில் நடந்தது. அதன் முதல் தலைவர் திரு. வி. க. அக்கூட்டத்தின் சார்பில் சுமார் ஏழாண்டுகள் பெரியபுராணப் பிரசங்கம் செய்தார் திரு. வி. க. அப்பிரசங்கத்துக்குச் சென்னையின் பல பகுதிகளினின்றும் பெருங்கூட்டம் திரளும். பெரியபுராணப் பிரசங்கம் ஞாயிறுதோறும் நடைபெற்றது. ஒவ்வொரு பாட்டுக்கும் விரிந்த முறையில் விளக்கம் சொன்னார். பிரசங்கம் சுமார் மூன்றரை மணி



நேரம் நடைபெறும். பெரியபுராணம் ஒரு சீர்திருத்த நூல் என்று அவர் சொல்வார். அதற்குத் தக்க ஆதாரங்கள் காட்டுவார்.

சிவனடியார் திருக்கூட்டத்தின் ஆண்டுவிழா மிக்க சிறப்பாக நடைபெறும். மகேசுவர பூசையின்போது சாதிச் சைவர் தொல்லை தலைவிரித்தாடும். அதனைக் கண்டிப்பார் திரு. வி. க. மகேசுவர பூசையில் சாதி பாராட்டுதல் தவறு என்பார்.

பெரியபுராணப் பிரசங்கத்திலே பரவையார் திருமணப் பகுதி வந்தது. அது பெருவிழாவாகக் கொண்டாடப் பட்டது. அவ்விழாவில் பொன்னும் மணியும் வேய்ந்த கௌரி சங்கம் ஒன்று அன்பளிப்பாக திரு. வி. க.வுக்கு வழங்கப் பட்டது. அக்கௌரி சங்கம் நீண்டநாள் திரு. வி. க. கழுத்தில் மிளிரவில்லை.

வேங்கடாசல ஆச்சாரியார் என்பவர் சிவனடியார் திருக்கூட்ட அன்பர். திருத்தணிகையிலே ஒரு சத்திரங் கட்டினார். சத்திரத் திறப்பு விழாவுக்குத் திரு. வி. க. அழைக்கப்பட்டார். திருக்கூட்ட அன்பர் பலரும் அழைக்கப் பட்டனர். எல்லாரும் திருத்தணிகை சேர்ந்தனர்.

திருக்குளத்தில் இறங்கி நீராடத் தொடங்கினார் திரு. வி. க. கௌரி சங்கத்தைக் கழற்றி அன்பர் ஒருவரிடம் கொடுத்து விட்டு நீரில் இறங்கினார். அந்த அன்பர் மற்ற ஒருவரிடம் கொடுத்துவிட்டு வெளியே போனார். எப்படியோ கௌரி சங்கம் களவு போயிற்று. அடியவர் கூட்டம் வருந்தியது.

திரு. வி. க.வின் திருமணத்தின்போது அதே போன்ற தொரு கௌரி சங்கம் அன்பளிப்பாக வழங்கியது திருவல்லிக்கேணி சிவனடியார் கூட்டம்.

பலதிறப்பட்ட பொது வாழ்வில் ஈடுபட்டிருந்தமையின், திரு. வி. க.வுக்கு அது பயன்படாதிருந்தது. பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தது. அதற்கும் ஒருவர் வந்தார்.

திரு. வி. க.வின் நண்பர் ஒருவர்; இளமை நண்பர்; பெயர் கோவிந்தராஜ முதலியார்; இசை ஞானி. அவர் பாடக் கேட்பதில் திரு. வி. க.வுக்கு விருப்பம் அதிகம். அவர் தாயுமானாரைப் பாடினால் உள்ளம் உருகும். சிவனடியார் திருக்கூட்டத்தில் திரு. வி. க. பெரியபுராணப் பிரசங்கம் செய்தபோது இடையிடையே தேவாரம் பாடுவார் கோவிந்தராஜர். கையேடு படிப்பவர் வராத நாளிலே கையேடும் படிப்பார். 'சென்றது கருதார்; நாளை சேர்வது நினையார்' என்ற கைவல்ய மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் கோவிந்தராஜர்.

ஒருநாள் அவர் திரு. வி. க.வைக் காணவந்தார். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். அவர் பேச்சிலிருந்து என்ன கண்டார் திரு. வி. க. நண்பர் ஏதோ கஷ்டத்தில் உள்ளார் என்று கண்டார். உள்ளே சென்றார். பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்த கௌரி சங்கத்தை எடுத்து வந்தார். கோவிந்தராஜரிடம் கொடுத்தார். "இதை வைத்துக்கொள். எனக்கு உபயோகப்படவில்லை. உனக்கு உபயோகப்படும்!" என்றார் திரு. வி. க. அதைப் பெற்றுக்கொண்டு போனார் நண்பர்.

பர்மா மலேயா முதலிய நாடுகளில் வசித்த தமிழர் பலர் திரு. வி. க.வின்பால் பேரன்பு கொண்டிருந்தனர். அவர்கள் தாய்நாடு திரும்புங்கால் தங்கள் அன்புக்கு அடையாளமாக திரு. வி. க.வுக்கு ஏதேனும் கொண்டு வருவர். நல்ல நல்ல படுக்கைகளும் தலையணைகளும் கொண்டு வந்து தருவர் சிலர். கம்புகள் கொணர்வர் மற்றும் சிலர். விசிறிகள் கொண்டு வருவர் வேறு சிலர். ஆனால் அவை திரு. வி. க. வுக்குப் பயன்படா. அவற்றிற்கென்று ஒருவர் வருவர். பெற்றுச் செல்வர்.

அழகிய வெல்வெட் மெத்தையும் தலையணையும் கொண்டுவந்து கொடுத்தார் ஓர் அன்பர். அந்த வாரத்திலேயே புலவர் ஒருவர் திரு. வி. க.வைக் காண வந்தார். அவர் மனம் வெல்வெட் படுக்கைமீது சென்றது. புலவரின் உள்ளக் கருத்தை உய்த்துணர்ந்தார் திரு. வி. க. விலை உயர்ந்த அந்த வெல்வெட் படுக்கையை அப்புலவருக்குக் கொடுத்து விட்டார்.



மயில் விசிறிகளுக்குப் புகழ் பெற்ற நாடு பர்மா. அந் நாட்டு மக்கள் அழகிய விசிறிகள் செய்வர். பர்மாவினின்றும் தாய்நாடு திரும்பிய தமிழ் அன்பர் ஒருவர் அழகிய வேலைப் பாடமைந்த மயில் விசிறி ஒன்று கொண்டு வந்து திரு. வி. க. வுக்குக் கொடுத்தார். அது மூன்று நாட்களே திரு. வி. க. விடம் இருந்தது. நான்காவது நாள் ஒரு துறவி வந்தார். மயில் விசிறி கண்டார்; வியந்தார். அவர் உள்ளம் அதில் தோய்ந்தது கண்டார் திரு. வி. க. அவ்விசிறியை அத் துறவிக்கே கொடுத்துவிட்டார்.

பொதுக் கூட்டம் ஒன்றில் நீண்ட நேரம் சொற்பொழி வாற்றித் திரும்பினார் திரு. வி. க. தமது இருக்கைச் சேர்ந்தார். பசி வாட்டியது. அன்பர் சிலர் பால் காய்ச்சிக் கொண்டு வந்து கொடுத்தனர். வேறு சிலர் திராட்சை கொண்டு வந்தனர். திராட்சை யுண்டு பால் அருந்த எழுந்தார் திரு. வி. க. அந்நேரத்தில் ஒருவர் பசியுடன் வந்தார். பாலையும் பழத்தையும் பசியோடு வந்தவர்க்குக் கொடுத்தார் திரு. வி. க.

உடல் மெலிந்து, நலங்கெட்டு திரு. வி. க. படுக்கையி லிருந்தபோது அவரைக் காணவரும் அன்பர்கள் ஏதேனும் கொண்டு வருவர். பழம் கொண்டு வருவர் சிலர். வாதுமை கொண்டு வருவர் மற்றும் சிலர். ஆனால் அவை திரு. வி. க. வுக்குப் பயன்படா. வீட்டுக்கு வரும் விருந்ினருக்கோ, மற்றையோருக்கோ பயன்படும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு திருவெண்ணெய் நல்லூரர் அன்பர் சின்னசாமி ரெட்டியாரின் விருந்தினராகச் சென்றிருந்தார் திரு. வி. க.

ஒரு நாள் இரவு. இடது பக்கம் மருதூர் நாராயணசாமி படுத்தார். வலது பக்கம் ஜவுளி நடேச முதலியார் படுத்தார். விளக்கு நன்றாக எரிந்துகொண்டிருந்தது.

சுமார் மூன்று மணியிருக்கும். திரு. வி. க. எழுந்தார். விளக்கினை எடுத்துக் கொண்டார். தெருப்பக்கம் சென்றார். சிறுநீர் கழித்தார். எழுந்து நின்றார்.

மாடு ஒன்று விரைந்து ஓடி வந்தது கண்டார் திரு. வி. க. விளக்குடன் வீட்டுக்குள் ஓடினார். இடையில் தடுத்தது ஒரு பலகை. வீழ்ந்தார். உடலில் பல இடங்களில் காயமுற்றது. கால் முட்டிகளிலும் பெருங்காயம் ஏற்பட்டது. உதட்டிலும் காயம். உதடு வீங்கியது. சந்தடிச் செய்யாமல் சென்று படுக்கையில் கிடந்தார். உதட்டில் கை வைத்துப் பார்த்தார். மேல் வரிசைப் பற்களில் ஒன்று உடைந்தது கண்டார்.

எப்பொழுது பொழுது புலரும் என்று காத்திருந்தார். பொழுதும் புலர்ந்தது. மயிலை பாலசுப்பிரமணிய முதலியார் எழுந்தார். மெதுவாக அவரை அடைந்தார் திரு. வி. க. இரவு நடந்ததைக் கூறினார். நண்பர் பலரும் சூழ்ந்தனர். மிக வருந்தினர்.

உதட்டு வலியை திரு. வி. க. வெளியிடவே இல்லை. இரண்டு நாள் கூட்டம் நடைபெற்றது. முன்னுரையும் முடிவுரையும் நிகழ்த்தினார் திரு. வி. க.

# 21. நோயும் பத்திய உணவும்

துள்ளத்தில் வாழ்ந்தபோது திரு. வி. க.வின் உணவு எப்படி இருந்தது? காலையில் இட்டலி. பகலில் சோறு. பிற்பகலில் வடை. இரவில் சோறு.

இராயப்பேட்டை சேர்ந்த பிறகு இட்டலியின் இடத்தைப் பற்றிக்கொண்டது பழஞ்சோறு. பிற்பகலில் வீட்டு வடை போயிற்று. தண்ணீர்ப் பந்தல் வடையே கிடைத்தது. பள்ளி வாழ்க்கை முழுவதும் இத்தகைய உணவே.

பின்னே பழஞ்சோறு போயிற்று; சுடுசோறு வந்தது. நாளடைவில் சுடுசோறும் போயிற்று. சோதுமை அப்பம் வந்தது.

சில காலம் காலையில் பால் அருந்தினார். பின்னே அதை விடுத்தார். மோர் அருந்தினார். பின்னும் சில காலம் சென்றது. காலை உணவு நியதி போயிற்று. எது கிடைத்ததோ அதை உண்டார்.

காலையில் பூரி. பகலில் பொங்கல். மாலையில் பூரி. இப்படிச் சில காலம்.

திரு. வி. க.வின உடலுக்குப் பொருந்தியது ஆவின் பாலே. எருமைப் பால் உண்டால் சிறிது நேரத்துக்கெல்லாம் வயிற்றுக் கடுப்பு உண்டாகும். எனவே, எருமைப் பால் உட்கொள்ளமாட்டார். இளமையில் கூட்டங்களில் பேசும்போது அடிக்கடி பால் அருந்தினார். பின்னே அவ்வழக்கம் நின்றது.

இராயப்பேட்டை கிராமம் போல் இருந்த காலத்தில் நல்ல பால் கிடைத்தது. அந் நாளில் சொந்தப் பசுவும் இருந்தது. நினைத்தபோதெல்லாம் மோர் அருந்தினார்,

காப்பி டீ கொக்கோ முதலியன அருந்தார். எங்கேனும் இவற்றைப் பருக நேர்ந்தால் வயிற்றில் குமட்டல் கண்டு பெரிதும் தொல்லையுறுவார்.

ஒரு சமயம் கண் வலியும் தலைவலியும் அவரை வாட்டின. சிகிச்சை செய்தவர் மருந்து ஒன்று கொடுத்தார். அதைக் காப்பியில் கலந்து குடிக்கச் சொன்னார். அவ்வாறே செய்தார் திரு. வி. க. காப்பிக் குமட்டல் ஒழிந்தது. பிறகு எவரேனும் காப்பி கொடுத்தால் அதை மாறாது உண்டார்.

அவ்விதம் காப்பி அருந்திய போதிலும் காப்பி அவரை அடிமைக் கொண்டதில்லை. அதை அவர் அடக்கி யாண்டார். நா காக்கும் வல்லமை திரு. வி. க.விடம் இயற்கையில் அமைந்திருந்தது.

சென்னை நகரமே அவரது உறைவிடமாக அமைந்தது. நகரம் காப்பி ஹோட்டல் நிறைந்த ஒன்று. எனினும் வாழ்க்கையில் ஒருமுறைகூட திரு. வி. க. காப்பி ஹோட்டல் நுழைந்தாரிலர்.

சுருட்டு, சிகரெட், பீடி முதலியவற்றின் மீது அவருக்கு வெறுப்பு அதிகம். இவற்றின் புகை கண்டால் துணியால் மூக்கை மூடிக்கொள்வார்.

தாம்பூலம் உடலுக்கு நலன் செய்யும் என்பதை அவர் அறிவார். வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு இவற்றில் சீவ சத்துண்டு என்பதையும் அவர் அறிவார். ஆனால் அப் பழக்கம் அவருக்கில்லை. சில இடங்களில் விருந்துண்ட பின் வெற்றிலை பாக்குத் தட்டு வரும். திரு. வி. க. அவற்றைத் தொட்டு வைத்து விடுவார். வெற்றிலை போடமாட்டார்.

புளி மிளகாய் முதலியவற்றைச் சில காலம் வெறுத்தார் திரு. வி. க. எலுமிச்சம் பழச் சாறும் மிளகும் உண்டார். அக் காலத்தில் திரு. வி. க. சென்ற இடம் எங்கும் அவருக்கென்று தனிச் சமையல் நடைபெறும். அச் செயல் திரு. வி. க.வின் உள்ளத்தை வருத்தும். எனினும்



அவ்வுணவு அவர் உடலுக்குப் பெரிதும் துணை செய்தது. தனிச் சமையல் அவர் மனத்தை வருத்தியதால் அவ்வுணவை விட்டார்.

**1929 ஆம்** ஆண்டுத் தொடக்கத்திலே திரு வி. க. வுக்குச் சினுக்கிருமல் தோன்றியது. அவ்விருமல் அடங்கவில்லை. டாக்டர் மாணிக்கம் பிள்ளை என்பவர் தியர்சோபிகல் சங்கத்தினர்; திரு. வி. க. வின் தோழர். அவர் ஒருநாள் திரு. வி. க. வைக் கண்டார். 'இவ்விருமலை முளையிலேயே கிள்ளிவிடல் வேண்டும். இன்றேல் இஃது எலும்புருக்கியாய் முதிரும்' என்றார்.

அவரது கூற்றை டாக்டர் சம்பந்தத்திடம் தெரிவித்தார் திரு. வி. க. டாக்டர் சம்பந்தம் என்ன செய்தார்? எக்ஸ்ரே எடுத்தார். பார்த்தார். பார்த்ததில் என்ன கண்டார்? நுரையீரலில் எவ்விதத் தவறும் இல்லை என்று கண்டார். 'எதற்கும் முன் எச்சரிக்கையாயிருப்பது நல்லது' என்றார்.

அவர் கூறியவாறே பல்லாவரம் சென்று வசித்தார் திரு. வி. க. சம்பந்தம் சில நியதிகளை விதித்தார். அந் நியதிப்படி பதினைந்து நாள் படுக்கையில் கிடந்தார் திரு. வி.க.

வெள்ளைப் பூண்டை நசுக்கிச் சாறு பிழிந்து, அரை ஆழாக்குப் பாலில் எட்டுச் சொட்டு விட்டுக் காலையில் உட்கொள்வார். ஒருமணி நேரத்துக்குப் பின் கோதுமைக் கஞ்சி அருந்துவார். பகலில் மோரும் சோறும். தொடர்ந்து ஓர் ஆரஞ்சு. பிற்பகல் மூன்று மணிக்குக் கடலை ரசம் குடிப்பார். பச்சை வெங்காயத்தைக் கடித்து மென்று தின்பார் இரவு கோதுமை அப்பமும் பாலும் உட்கொள்வார். இப்படிப் பதினைந்து நாட்கள் சென்றன.

பதினாறாம் நாள் இரண்டு பர்லாங் தூரம் நடந்தார். அடுத்த நாள் நான்கு பர்லாங் நடந்தார் மறுநாள் ஒரு மைல் நடந்தார். பிறகு சம்பந்தம் திரு. வி. க. வைச் சோதித்தார். 'உமது இருமல் கொடியது அன்று' என்றார்.

பின்னே திரு. வி. க. மீண்டும் இராயப்பேட்டை சேர்ந்தார். ஒருநாள் டாக்டர் சம்பந்தம் திரு. வி. க. வின் சிறுநீரைச் சோதித்தார். 'நீர் இழிவு நோய்' என்றார். 'மூளை வேலை செய்வோர்க்கு இந்நோய் வருதல் இயல்பு' என்றார். உணவு முறைகளை மாற்றச் சொன்னார்.

நீர் நோய் பற்றி மேல்நாட்டு அறிஞர் பலர் எழுதிய நூல்களை எல்லாம் படித்தார் திரு. வி.க. சோதனைக் கருவிகள் சிலவற்றையும் வரவழைத்தார்.

நீர் நோயின் வரலாறு, இயல்பு, கூறு முதலியவற்றை எல்லாம் நூல்களைக்கொண்டு தெளிந்தார். கருவிகளைக் கொண்டு தமது நீரை அடிக்கடி சோதித்து வந்தார்.

'நோய் பற்றிய நூல்களைக் படிக்கக் கூடாது. நீரையும் சோதித்தல் கூடாது. நோய் எண்ணம் உள்ளத்தில் தங்கத் தங்க அது பெருகும்' என்றார் டாக்டர் சம்பந்தம்.

கோதுமை, கேழ்வரகு, கீரைவகை, காய் வகை ஆகிய வற்றினை முறை முறையே உண்டு உண்டு பார்த்தார் திரு. வி. க. சோதனையில் என்ன கண்டார்?

கேழ்வரகும் கீரையும் இனிப்பைக் குறைத்தல் கண்டார். கோதுமையைவிடக் கேழ்வரகே நலம் செய்தல் கண்டார். கேழ்வரகுக் கஞ்சியும் தோசையும் அவருக்குப் பொருந்தின. கீரை வகைகளில் கலவங்கீரையும், சிறு பசலையும் இனிப்புக்கு எதிரி என்று கண்டார். காட்டுச் சுண்டையும், பாகலும், வண்டையும் நலஞ் செய்தல் கண்டார். ஏறக்குறைய இரண்டரை ஆண்டு காலம் பத்திய உணவில் கருத்துச் செலுத்தினார்.

வீட்டிலும் சரி, அவர் செல்லும் இடங்களிலும் சரி— அவருக்கென்று தனிச் சமையல் செய்வது அவர்தம் உள்ளத்தை வருத்தியது. பத்திய உணவை விட்டார்.

பழையபடி அரிசிச் சோறு—பண்டங்கள் முதலியன உணவாயின. எல்லாம் ஆண்டவன்செயல் என்ற முடிவுக்கு வந்தார்.

# 22. பொதுமைப் புரட்சியும் திரு. வி. க. வும்

திரு. வி. க. வின் அடிநாள் வாழ்க்கை எதில் தொடங்கியது? சமயப்பணியில் தொடங்கியது. சமயப் பணி என் செய்தது? பல்வேறு சமயங்களையும் ஆராயத் தூண்டியது. ஆராய்ச்சி எதில் கொண்டுவிட்டது? பொதுமை உணர்ச்சியில் கொண்டு விட்டது.

பொதுமை அல்லது சமரசம் உலகில் ஏன் பரவவில்லை என்று சிந்திக்கத் தொடங்கினார் அவர். ஒன்றும் விளங்கத் வில்லை. பின்னே சிங்காரவேல் செட்டியாரின் நட்பு ஏற்பட்டது. அக் கூட்டுறவால் என்ன விளைந்தது? சிறிது விளக்கம் ஏற்பட்டது, விளக்கத்தில் என்ன கண்டார்? பொதுமையை உலகில் பரப்பி, நிலை பெறுத்த வல்லது காரல் மார்க்ஸ் கொள்கையே என்று கண்டார்.

*"உலகில் முதலாளி—தொழிலாளி வேற்றுமை உணர்வு சன்மார்க்கத்தை வளர விடாது. சன்மார்க்க வளர்ச்சிக்கு, முதலாளி — தொழிலாளி வேற்றுமையுணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமையுணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்ல வேண்டுவதில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

---

*திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்.

"புரட்சி இரு வகை. ஒன்று அற வழியில் நிகழ்வது. மற்றொன்று மற வழியில் நிகழ்வது. அஃது அறப் புரட்சி. இது மறப் புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப் புரட்சி இடம் பெறாத வேளையில் மறப் புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப் புரட்சிக்கு இடந்தருவதே அறிவுடைமை. இல்லையேல் மறப்புரட்சி எழும்.

"எனது மனதுக்கு இயைந்தது அறப் புரட்சியே. அறப் புரட்சி வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்."

# 23. உடையும் உறக்கமும்

திரு. வி. க. குழந்தையாயிருந்தபோது அணிந்த ஆடை எது? சிற்றாடை, சட்டை, தொப்பி. எங்கேனும் குழந்தை திரு. வி. க. வை அழைத்துச் செல்ல நேரும்போது தாயார் அணிவிக்கும் உடை இது சரிகைத் தொப்பியிலும் வெல்வெட் சட்டையிலும் குழந்தை திரு. வி. க. வுக்கு விருப்பம் அதிகம்.

சைவப் பிரசங்க மேடையில் திரு. வி. க. எப்படி விளங்கினார்? தஞ்சாவூர்க் குடுமி, இடுப்பில் வெண்மையான ஆரணி வேட்டி, அரையில் பீதாம்பரம். கழுத்தில் கௌரி சங்கம். தோளிலும் மார்பிலும் இளமை தவழும்! செழுமை கொழிக்கும்.

பள்ளிக்கூட உடை எப்படி? தலையில் வெண்மையான தலைப்பாகை. அதிலே சரிகைக் கோடு ஒளி வீசும்.

நீண்ட சட்டை முழங்கால்வரை தொங்கும். அரையில் கீழ்ப்பாச்சிக் கட்டிய வெள்ளை வேட்டி. சரிகைத் துணியோ, பட்டுத் துணியோ கழுத்தில் கிடக்கும்.

திரு. வி. க. 'தேச பக்தன்' ஆசிரியராயிருந்த போதும் அளித்த கோலம் இதுவே.

பின்னே காந்தீயத்தில் ஈடுபட்டுக் காங்கிரஸ் பிரசாரமும் கதர்ப் பிரசாரமும் செய்த காலத்தில் எக்காட்சி வழங்கினார்?

தலைக்கு அணி செய்த சரிகைத் தலைப்பாகை போயிற்று. கழுத்தை அலங்கரித்த பட்டு வேட்டி போயிற்று. நீண்டு முழங்கால்வரை தொங்கிய சட்டை போயிற்று. அரையில் கீழ்ப்பாச்சிக் கட்டிய ஆரணி வேட்டி போயிற்று. இடுப்பில் நான்கு முழத் துண்டு, உடலில் ஒரு ஜிப்பா, தோளில் ஒரு குட்டை.

இக்கோலமும் விடுத்து நான்கு முழத்துண்டு மட்டுமே உடுத்தி உலவ விரும்பினார் அவர். ஆனால் அவரது உடல் நிலை அதற்கு இடம் தர மறுத்தது.

இறுதிவரை இந்த எளிய கோலத்துடனேயே விளங்கினார் திரு. வி. க.

இளமையில் திரு. வி. க. நன்றாக உறங்குவார். ஏறக் குறைய எட்டு மணி நேரம் உறங்குவார். உறங்கி எழுவார். பின்னே அவ்வுறக்கம் படிப்படியே குறையலாயிற்று. எட்டு மணி நேர உறக்கம் ஆறு மணி நேர உறக்கமாயிற்று. பின்னே அதுவும் சுருங்கியது. இரவு பன்னிரண்டு மணி வரை உறங்கமாட்டார். பன்னிரண்டுக்குப் பிறகு உறக்கம் வரும். அவ்வுறக்கம் எதுவரை நிற்கும்? மூன்று மணிவரை நிற்கும். மூன்று மணிக்குப் பிறகு உறங்க மாட்டார்.

உறக்கம் வராதபோது என் செய்வார்? படுக்கையில் கிடப்பார். சிந்தனையில் ஆழ்வார். அந்நிலை விழிப்புமன்று! துயிலுமன்று.

உறக்கம் வராத நேரங்களில் நூல்களைப் படிப்பார். எழுதுவார். அவர்தம் நூல்கள் எல்லாம் பெரும்பாலும் இந்த நேரத்தில் எழுதப்பட்டவையே.

பகல் நேரத்திலே நூல் எழுத அமர்வார். எவரேனும் வருவார், பேசுவார். அவ்வளவில் எழுதுதல் கலைந்துபோகும். பின்னே எழுதத் தொடங்குவார். குழந்தைகள் விளையாடி ஓடிவரும். அமைதி கலையும். எழுதுதல் தடைப்படும்.

அவருக்கென்று தனி அறை இல்லை. பெட்டி இல்லை. பூட்டு—சாவி இல்லை.

சிற்சில சமயங்களில் தொழிலாளர் வேலை நிறுத்தம் வந்து குறுக்கிடும். அமைதி இழந்த மனோநிலை தோன்றும்

இவ்வாறு தோன்றிய சூழ்நிலையில் அவர் எழுதிய நூல்கள் பல.

# 24. கலந்துரையாடலும் கருத்துரை கூறலும்

சென்னை இராயப்பேட்டையின் ஒரு பகுதி புதுப்பேட்டை என்று அழைக்கப்பட்டு வந்தது. புதுப்பேட்டைத் தெரு என்னும் பெயர் கொண்ட தெரு ஒன்றும் உளது. புதுப்பேட்டைத் தெருவின் முன்புறம் உள்ளது கணபதி முதலித் தெரு. இத் தெருவிலே பன்னிரண்டு எனும் இலக்கம் கொண்ட வீடு ஒன்று உளது. இந்த வீட்டிலேதான் திரு. வி. க. வசித்தார். இந்த வீட்டிலேதான் திரு. வி. க. வின் அச்சகமாக விளங்கிய சாது அச்சுக்கூடம் இருந்தது. திரு. வி. க வசித்த அந்த வீட்டிற்கு வாயில் இரண்டு. ஒன்று கணபதி முதலித் தெருவில் இருந்தது. மற்றொன்று புதுப்பேட்டைத் தோட்டத் தெருவில் இருந்தது.

புதுப்பேட்டைத் தோட்டத் தெருவில் இருந்த வாயில் வழியே புகுந்தால் அச்சு இயந்திரத்தின் ஓசை நம்மை வரவேற்கும். வேப்ப மரம் நிறைந்த அத் தோட்டத்தைக் கடந்து வந்தால் சாது அச்சுக்கூடத்தின் தாழ்வாரத்தை அடையலாம். தாழ்வாரத்தில் ஒரு மேசை கிடக்கும். மேசையை ஒட்டி இரு பெஞ்சுகள் இருக்கும். தாழ்வாரத்தின் இரு புறமும் திரு. வி. க. வின் கண்கள் போல இருந்தன இரு அறைகள். அந்த இரு அறைகளிலே ஒன்று சாது அச்சுக்கூட அலுவலகம். மற்றொன்று 'நவசக்தி' அலுவலகம். தாழ்வாரத்தைக் கடந்து உள்ளே சென்றால் சாது அச்சுக்கூடம்.

இத் தாழ்வாரத்திலே போடப்பட்ட பெஞ்சிலேதான் தமிழ்நாட்டின் தவமுனிவர் திரு. வி. க. அமர்ந்திருப்பார்.

தம்மைக் காண வருவோருடன் உரையாடிக் கொண்டிருப்பார்.

திரு. வி. க. வுடன் உரையாடுவது ஒரு பெரு விருந்தாகும். அவர்தம் உரையாடலிலே தமிழ்மணம் வீசும். இலக்கியம் அருவியெனப் பொழியும். தத்துவம் பாயும். சன்மார்க்கம் பீறிடும். அரசியல் அலைமோதும்; மார்க்ஸிச மணம் வீசும். பல்கலைக் கழகம் ஒன்று தன் திருவாய் திறந்து பேசினால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்படும். அறிவு! அறிவு! அறிவு! அறிவுக்கு விருந்து. அன்புடன் ஊட்டும் விருந்து எனலாம்.

அவருடன் உரையாடுதற்கு வருவோர் பலர்; பல திறத்தினர்; மாணவர் வருவர்; தொழிலாளர் வருவர். காங்கிரஸ் கட்சியினர் வருவர்; ஜஸ்டிஸ் கட்சியினர் வருவர்; இந்தியை ஆதரிப்போர் வருவர்; இந்தியை எதிர்ப்போரும் வருவர். சுயமரியாதைக் கட்சியினர் வருவர்; ஆத்திகர் வருவர்; நாத்திகரும் வருவர். சைவர் வருவர்; வைணவர் வருவர். ஆடவர் வருவர்; பெண்டிர் வருவர்; சீர்திருத்தம் வேண்டுவோர் வருவர்; சீர்திருத்தம் வேண்டாதோரும் வருவர்.

மாணவருடன் பேசும்போது அவர்தம் நிலையில் நிற்பார். மாணவர்களுக்கு ஊக்கமூட்டுவார். உணர்ச்சி பெறத்தக்க நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவார். அந்நிலையில் தாம் ஒரு மாணவராக விளங்குவார்.

தொழிலாளருடன் பேசும்போது அவர்தம் நிலையில் நிற்பார். தொழிலாளருக்கு ஊக்கமூட்டுவார். உணர்ச்சியூட்டுவார். தொழிலாளர் சக்தி எத்தகையது என்று எடுத்துக்காட்டுவார். அந்நிலையில் தாம் ஒரு தொழிலாளியாக விளங்குவார்.

காங்கிரஸ்காரருடன் பேசும்போது தலைநாள் காங்கிரஸ் நிகழ்ச்சிகளைக் கூறுவார். தமது அநுபவங்களை எடுத்துரைப்பார். போராட்ட இலட்சியங்களை



விளக்குவார். காங்கிரஸ் கட்சியில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவார். இலட்சிய வீழ்ச்சியைச் சுட்டிக் காட்டுவார். வந்தவரும் இருந்தவரும் ஒன்றி மகிழ்ந்து விடைபெற்றுச் செல்வர்.

ஜஸ்டிஸ்காரர் நடுவே பேசும்போது சர் பி. தியாகராய செட்டியாரின் உயர் பண்புகளை எடுத்துக் கூறுவார். ஜஸ்டிஸ் கட்சியின் சீர்திருத்தங்களை—சீர்திருத்தக் கருத்துக்களை ஆதரிப்பார். ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புவாதக் கொள்கையை மறுப்பார். அவர்தம் அன்புப் பேச்சில் மகிழ்ந்து வந்தவர் செல்வர்.

சுயமரியாதைக்காரர் வருவர். திரு. வி. க. வுடன் சண்டை பிடிப்பர். 'எனது சன்மார்க்க இயக்கத்தின் குழவியே சுயமரியாதை இயக்கம். சன்மார்க்கத்தின் அடிப்படை அன்பு. சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படை காழ்ப்பு. காழ்ப்பை விடுக. அன்பை அணைக்க வாருங்கள்' என்பர் திரு. வி. க. அவர்தம் அன்புரையில் திளைத்துச் செல்வர்.

கம்யூனிஸ்டுகள் வருவார்கள். அவர்களுடன் உரையாடுவார் திரு. வி. க. கம்யூனிசத்தின் உயர் லட்சியங்களை ஏற்பார். கார்ல் மார்க்சின் மனிதாபிமானத்தைப் பாராட்டுவார். அதே சமயத்தில் சோவியத் நாட்டில் ஸ்டாலின் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டுவார். சோவியத் புரட்சியின் அடிப்படை வன்முறையாதலின் இத்தகைய தவறுகள் செய்ய நேரிட்டது என்பார். 'புரட்சி அஹிம்சை வழியில் ஏற்படுமாயின் சன்மார்க்க ஆட்சி நிலவும்' என்பார். 'காந்தியின் அஹிம்சையும், மார்க்சின் பொதுமையும் கலந்தால் சமரச சன்மார்க்கப் புரட்சி ஏற்படும்' என்பார்.

புராணப் பிரசங்கம் செய்வோர் வருவர்; சைவப் பிரசாரகர் வருவர்; அவரிடம் சைவ சித்தாந்தம் பற்றிப் பேசுவார். சிவஞான சித்தியாரிலிருந்து மேற்கோள் காட்டி விளக்குவார். 'சைவம் என்பது விபூதிப்பட்டையில்

இல்லை' என்பார். 'உருத்திராட்சத்தில் இல்லை' என்பார். 'அன்பே சிவம்' என்பார். 'தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!' என்பதன் கருத்தை விளக்குவார். 'எனவே சிவன் ஒரு குறிப்பிட்டவர் தம் கடவுள் அல்லன். எந்நாட்டவர்க்கும் இறைவன் அவன்' என்பார். 'அதுவே சமரசம்' என்பார். 'அதுவே சன்மார்க்கம்' என்பார். 'அதுவே எனது கொள்கை' என்பார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்ச நிலையிலிருந்த போது பலர் அவரிடம் வருவர். இந்தியை ஆதரிப்போர் வருவர். இந்தியை எதிர்ப்போரும் வருவர்.

'இந்திய நாட்டிற்கு ஒரு பொது மொழி வேண்டும். அது இந்தியே என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்தி பேசாத மக்கள் மீது அதைக் கட்டாயமாகத் திணிப்பது கூடாது. கட்டாயம் எதிர்ப்பையே விளைவிக்கும்' என்பார். இந்தி எதிர்ப்பு முகாமினர் இது கேட்டு மகிழ்வர்; செல்வர்.

இந்தியை ஆதரிப்போர் வருவர். 'இந்திய நாட்டின் பொது மொழி இந்தியே. அதை எவரும் ஏற்பர். தென்னாட்டினர்க்கு அம் மொழி புதிது. புதிய மொழியைப் பரப்ப நீங்கள் விரும்புகிறீர்கள். அது நல்லதே. நீங்கள் கொண்டுள்ள நோக்கமும் நல்லதே. நல்ல நோக்கம் எப்படிப் பாழாகிறது பாருங்கள்! கட்டாயமாகத் திணித்தீர்களாயின் அது என்ன விளைவிக்கும்? எதிர்ப்பையே விளைவிக்கும் கட்டாயத்தை நீக்குங்கள். எதிர்ப்பும் மறையும். இந்தியும் பரவும்' என்பார். வந்தவர் அவர்தம் சீரிய அறிவுரை கேட்டுச் செல்வர்.

ஆண்டுகள் சென்றன. இந்திக் கட்டாயம் நீங்கியது. எதிர்ப்பும் மறைந்தது.

திரு. வி. க.வுடன் பேசும்போது சீறுவர் சிலர்; பதற்றமாகப் பேசுவர் சிலர்; எதிர்த்து முழங்குவர் மற்றும் சிலர். எனினும் அவர் சிறிதும் சமநிலைப் பிறழார். அமைதியாகப் பதில் கூறுவார். எவரிடத்தும் அன்பாகப் பேசுவார்; ஆத்திரமடையார். பதற்றமாகப் பேசார். எவரையும் கடிந்து பேச மாட்டார்.

# 25. மணிவிழாவும் மற்றொரு போராட்டமும்

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23 ஆம் தேதி திரு. வி. க.வின் மணிவிழா. இதற்கு ஓராண்டு முன்னரே 'நவசக்தி'யில் முதல் குரல் எழுப்பினேன் நான். திரு. வி. க.வின் மணிவிழாவைச் சீரியமுறையில் கொண்டாட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். இதுபற்றிப் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

மணிவிழா மிகச் சிறந்த முறையில் சென்னையில் நடைபெற்றது. சென்னையில் மட்டுமன்றி தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. நாற்பத்து மூன்றாம் ஆண்டு தொடங்கிய விழா, நாற்பத்து நான்காம் ஆண்டு ஆகஸ்டு மாதம்வரை நடைபெற்றது.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து ஐந்தாம் ஆண்டு ஜூன் மாதத்திலே திரு. வி. க.வின் தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் நோய்வாய்ப்பட்டார்; இறந்தார்.

திரு. வி. க.வின் தன்னலமற்ற தொண்டுக்குப் பேராதரவு நல்கியவர் பெரியவர்; திரு. வி. க.வைப் பேணிக் காத்தவர் பெரியவர். சாது அச்சுக்கூடத்தை நிர்வகித்தவர் பெரியவர்; முருகவேள் புத்தக சாலையை வளர்த்தவர் பெரியவர்; திரு. வி. க.வின் எழுத்துக்கு நூல் வடிவம் கொடுத்தவர் பெரியவர்; பின்பு அந்நூல்களை எல்லாம் விற்றுப் பணமாக்கியவர் பெரியவர்.

எழுத்தும் தொண்டும் அன்றி வேறு எக் கவலையும் திரு. வி. க வை நெருங்காதவாறு கட்டிக் காத்த பெரியவர் இறந்தார்.

சாது அச்சுக்கூட உரிமை உலகநாத முதலியார் பெயரில் இருந்தது. உரிமையைத் தம் அண்ணியார் பெயருக்கு மாற்றினார் திரு. வி. க.

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்து ஏழாம் ஆண்டு பக்கிங்காம் ஆலையில் வேலை நிறுத்தம்.

தொழிலாளர் சங்கத் தலைவர் அந்தோணிப் பிள்ளையும், திரு. வி. க.வும் தொழில் அமைச்சரைக் கண்டு பேசினர். அப்போது தமிழ் நாட்டில் நடைபெற்று வந்தது காங்கிரஸ் ஆட்சி. தொழில் அமைச்சராக இருந்தவர் டி. எஸ். எஸ். ராஜன்.

மந்திரி ராஜன் திரு. வி. க.வின் நெருங்கிய நண்பர். எனவே, தொழிலாளர் சங்கத்தின் பழந் தலைவர் திரு. வி. க.வும், தலைவர் அந்தோணிப் பிள்ளையும் தொழில் மந்திரி ராஜனைக் கண்டு பேசினர். மந்திரி என்ன கூறினார்? சில நாள் தவணை அளித்தார். அதற்குள் ஆலை முதலாளிகளுடன் பேசி ஓர் உடன்பாடு காணுமாறு கூறினார்.

தலைவர் இருவரும் மந்திரியின் யோசனையை ஏற்றுத் திரும்பினர். ஆனால் மந்திரி என் செய்தார்? தவணைக் காலத்துக்கு முன்பே அந்தோணிப் பிள்ளையைக் கைது செய்துவிடப் பணித்தார். அந்தோணிப் பிள்ளையும் கைது செய்யப்பட்டார்.

திரு. வி. க. தொடர்ந்து போராட்டத்தை நடத்தலானார். இந்நிலையில் மீண்டும் ஒருமுறை மந்திரி ராஜனைக் கண்டார்.



கோட்டையில் உள்ள மந்திரியின் அறையில் சந்திப்பு நிகழ்ந்தது. பின் தமது காரில் திரு. வி. க.வையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார் மந்திரி.

"நான் உதகமண்டலம் போகிறேன். அங்கு வந்து எனது விருந்தினராக இருங்கள்" என்று அழைத்தார் மந்திரி.

"இன்று மாலை பெரம்பூரில் தொழிலாளர் கூட்டம் நடக்கவிருக்கிறது. இந்நிலையில் நான் வர இயலாது!" என்றார் திரு. வி. க.

"கூட்டம் நடைபெறாது. தடை பிறப்பிக்கப்படும்!" என்றார் மந்திரி.

"கூட்டத்தை நடத்தியே தீருவேன்!" என்றார் திரு. வி. க.

அவ்வளவில் கார் திரு. வி. க.வின் வீட்டு வாசலில் நின்றது. மந்திரியிடம் விடை பெற்றார் திரு. வி. க.

மாலை வந்தது. செம்பியத்தில் கூட்டம் நடத்தப் புறப்பட்டார் திரு. வி. க. தொழிலாளர் சங்கத்தினர் வந்து திரு. வி. க.வை அழைத்துச் சென்றனர்.

அப்போது திரு. வி. க.வின் பார்வை மங்கிச் செல்லயிருந்தது. எவரேனும் கைப்பிடித்து அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நிலை.

செம்பியம் சேர்ந்தார். கூட்டம் நடத்தக் கூடாது என்ற தடை கண்டார். புறப்பட்டார் கால் நடையாக எங்கே? திருவள்ளூருக்கு. ஆயிரக்கணக்கான தொழிலாளர் அவரைத் தொடர்ந்தனர். அரிக்கேன் விளக்குகளை ஏந்தி வழிகாட்டினர் பலர். திரு. வி. க.வின் கைப்பற்றி அழைத்துச் சென்றனர் சிலர். திருவள்ளூர் செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ளது. சென்னை நகர எல்லை கடந்து இருப்பது.

தடை உத்தரவு சென்னை நகருக்குத்தான். சென்னை நகர எல்லைக்கு அப்பால் சென்று கூட்டம் நடத்தினால் அரசாங்கம் என்ன செய்ய முடியும்?

எனவே, திருவள்ளூர் எல்லையில் பொதுக்கூட்டம் நடத்தித் தொழிலாளர்களுக்கு ஊக்கமளித்தார் திரு. வி. க.

இதன் பிறகே திரு. வி. க. வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார்.* வீட்டுக் காவலில் இருந்தபோது அவர் தொழி லாளருக்கு ஊக்கமூட்டியதை முன்னரே ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

பல நாட்களுக்குப் பின் வீட்டுக் காவல் நீங்கியது. அந்தோணிப்பிள்ளை விடுவிக்கப் பெற்றார். திரு. வி. க.வின் பொறுப்பும் நீங்கியது.

*திரு. வி. க.வை உதகமண்டலத்துக்கு மந்திரி அழைத் தாரே, தமது விருந்தினராக! அதன் பொருள் என்ன? உதகமண்டலம் அரசாங்க மாளிகையில் திரு. வி. க.வைச் சிறை வைப்பது.

# 26· எளிய வாழ்வும் திரு. வி. க.வும்

'தேச பக்தன்' ஆசிரியராக இருந்தபோது, பின்னே 'நவசக்தி' ஆசிரியராகக் காங்கிரஸ் பிரசாரம் செய்தபோதும் திரு. வி. க. பயணம் செய்தது. எப்படி? பெட்டி, படுக்கை, கூஜா இவற்றுடன்தான் செல்வார். உடலில் கோட்டும், கழுத்தைச் சுற்றிக் குட்டையும் அணிசெய்யும். பின்னே காந்தீயப் பிரசாரமும் சன்மார்க்கப் பிரசாரமும் செய்தபோது பெட்டியும் படுக்கையும் கூஜாவும் அவரைவிட்டு அகன்றன. நாலு முழக் கதர்வேட்டி; கதர் ஜிப்பா, கழுத்தில் ஒரு கதர்க் குட்டை; கையில் ஒரு பை. அதிலே ஒரு செட் துணி, அவ்வளவே.

இந்தக் காலத்தில் பொதுக்கூட்டம் போட்டுப் பேச்சாளர் களை அழைத்தால் அப் பேச்சாளர் என்ன கேட்பார்? பேசப் பணம் கேட்பார். ஒரு கூட்டத்தில் பேசுவதற்கு இவ்வளவு என்று வசூலிப்பார்.

அந்த நாளிலே திரு. வி. க. அம்மாதிரிப் பணம் கேட்டாரில்லர். அவரை அழைக்கும் வெளியூர் அன்பர்கள் வழிச் செலவுக்குரிய தொகையை அனுப்புவார்கள். பெரும் பாலும் திரு. வி. க. அந்த நாளைய இரண்டாம் வகுப்பு ரயில் வண்டியில்தான் பயணம் செய்வார். ரயில்வே ஸ்டேஷனில் அவரை அழைக்க வந்தவர்கள் வண்டி கொண்டு வந்திருப் பார்கள். ஆனால் திரு. வி. க. அவ்வண்டியில் ஏற மாட்டார். விடியற் காலமாகில் நடந்தே செல்வார். அன்பர்கள் தொடர்வார்கள். இயற்கை வனப்பில் மூழ்கி எழுவார் திரு. வி. க. வைகறைப் பறவைகளின் ஒலியிலே ஒன்றித் திளைப்பார்.

நடக்கும்போது அரையில் கட்டிய வேட்டியின் ஒரு நுனியை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு நடப்பார்.

பொதுக்கூட்டம் போடுவது என்றால் இந்தக் காலத்திலே என்ன காண்கிறோம்? அலங்கார மேடை காண்கிறோம். மின்சார விளக்குகள் ஒளி வீசக் காண்கிறோம். ஒலி பெருக்கிகள் ஒலிக்கக் காண்கிறோம். இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருக்கிறார்கள். தொலைவில் உட்கார்ந்திருப் பவர்களும் தெளிவாகக் காண்கிறார்கள். கேட்கிறார்கள். ஆனால் அந்தக் காலத்தில் அப்படி இல்லை. ஒலிபெருக்கி இல்லாத காலம். பெரும்பாலான இடங்களில் 'கியாஸ் லைட்'டுகளே இருக்கும். உயரமான மேடைகள் அமைக்கப் பட்டதில்லை. கூட்டமோ ஆயிரக்கணக்கில் இருக்கும்.

திரு வி. க. பேசுவார். உரத்த குரலில் முழங்குவார். கடைசி வரிசையில் இருப்போருக்கும் தெளிவாகக் கேட்கும். வேகமாகப் பேசுவார். கணீரென்ற குரல். நீர் வீழ்ச்சி போல் தமிழ் பாயும். இடித்து முழங்கும்.

# 27. விவிலியமும் வாழ்வும்

**வா**ழத் தெரியாதவர் திரு.வி.க. என்பர் சிலர். அவர் திரு.வி.க.வை நன்கு அறியாதவரே.

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்படும்' என்றார் பொய்யா மொழியார்.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் திரு.வி.க. வாழ்வாங்கு வாழ்தலாவது யாது?

மாடமாளிகை கட்டி வாழ்தலா? பெரிய பெரிய கார் வைத்துக்கொண்டு சவாரிசெய்தலா? பாங்கில் நிறையப் பணம்போட்டு வைத்துக்கொண்டு லேவாதேவி செய்து வட்டி வாங்குதலா? எது?

வாழ்வாங்கு வாழ்தல் இதுவே என்று கருதும் மடமை உலகம். ஆனால் மெய் வாழ்வு இஃதன்று. திருவள்ளுவர் கருத்தில் கொண்ட 'வாழ்வாங்கு வாழ்தல்' இதுவன்று.

வாழ்வாங்கு வாழ்தல் எது என்பதைக் கிறிஸ்து பெருமான் கூறுகிறார் :

"ஜனக் கூட்டத்தில் ஒருவன் அவரைப் பார்த்து, 'போதகரே, பிதுரார்ஜிதத்தைப் பாகம் பிரித்து என் பங்கை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குச் சொல்லு' மென்று கேட்டுக் கொண்டான். அவர், 'மனுஷனே, என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும பங்கிடுகிறவ னாகவும் வைத்தவன் யாரென்று சொல்லி, அவர்களிடம் எவ்விதப் பொருளாசைக்கும் இடங்கொடாதபடி எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கள். ஒருவனுடைய ஜீவன்

அவனுடைய செல்வப் பெருக்கத்திலே இல்லை!' என்றார். ஒரு உவமையும் அவர்களுக்குச் சொன்னார். ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது கண்டு அவன் தனக்குள் சிந்திப்பவனாய், நான் இப்படிச் செய்வேன். என் விளைபொருள்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே. நான் ஒன்று செய்வேன்.

என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாய்க் கட்டி என் தனதானியம் யாவையும் என் பொருட்களையும் அங்கே சேர்த்து வைத்துப் பின்பு ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அனேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. நீ சுகவாசியாய் புசித்துக் குடித்துக் களிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று சொல்லிக்கொண்டான். கடவுளோ அவனிடம் மதிகேடனே இந்த இராத்திரியிலே உன் உயிரை உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுவார்கள். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையனவாகும் என்றார். தன் ஆஸ்தியைக் கடவுளுக்கென வழங்காமல் தனக்கெனவே பொருளைச் சேர்த்து வைக்கிறவன் நிலைமை இதுவே என்றார்.''

—லூக்கா 12: 13: 12

''நீ போய் உனக்குண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்தில் உனக்கு ஐசுவரியமிருக்கும். அப்பால் வந்து என்னைப் பின்பற்று என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு முகம் வாடி துக்கத்தோடே போய்விட்டான்.

அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்துத் தமது சீஷரிடம் ஐசுவரியமுள்ளவர்கள் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிது என்றார். சீஷர்கள் அவருடைய வார்த்தை



யைக் கேட்டுப் பிரமித்துப் போனார்கள். இயேசு பின்னும் அவர்களைப் பார்த்து, 'பிள்ளைகளே! கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிது. ஐசுவரியவான் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது என்றார்.''

—மார்க்கு 10: 17: 26

''எதை உண்போம், எதைக் குடிப்போமென்று உங்கள் உயிருக்காகவும், எதை உடுப்போமென்று உங்கள் உடலுக்காகவும் கவலைப் படாதிருங்களென்று உங்களுக்குச் சொல்கிறேன். உணவை விட உயிரும், உடையைவிட உடலும் முக்கியமல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை; அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா? கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் ஆயுளின் அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகின்றன வென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை; நூற்கிறதுமில்லை; என்றாலும் சாலோமோனே தன் சர்வ மகிமையிலும் இவைகளின் ஒன்றைப் போல உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்கிறேன்.

இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப் படும் காட்டுப் புல்லைக் கடவுள் இவ்விதமாய் உடுத்துவா ரானால் அற்ப விசுவாசிகளே, உங்களை உடுத்துவது அதிக நிச்சயமல்லவா? ஆதலால் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போமென்று கவலைப்பட வேண்டாம். இவற்றையெல்லாம் புற ஜாதியார் நாடித் தேடுகிறார்கள். இவையெல்லாம் உங்களுக்குத் தேவை

யென்று உங்கள் பரமபிதா அறிவார். முதலாவது கடவுளுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைய தினத்திற்காகக் கவலைப்படாதிருங்கள்."

கிறிஸ்து பெருமான் அருளிய இத்திருமொழிகளைத் தம் வாழ்வில் நடைமுறையில் கடைப்பிடித்தவர் திரு.வி.க.

எனவே, அவர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்பட வேண்டியவர்.

# 28. மாலையும் மறைதலும்

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து ஒன்பதாம் ஆண்டு அவரது இடது கண்ணிலே படலம் தோன்றியது. அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை.

திரு. வி. க.வின் நெருங்கிய நண்பர் கந்தசாமிப்பிள்ளை கண் மருத்துவர். அறுவைச் சிகிச்சைச் செய்தார். என்ன ஆயிற்று? பார்வை வரவேயில்லை; போயிற்று.

திரு. வி. க. வெளியே செல்வது விடுத்தார். அடுத்த ஆண்டு மற்றொரு கண்ணும் இழந்தார். படுக்கையில் கிடக்கலானார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி. திரு. வி.க. கண் இழந்து படுக்கையில் கிடக்கிறார் என்ற செய்தி கேட்டு அவரைப் பார்க்க வந்தார் ஓர் அம்மையார்.

அப் பெண்மணி நன்கு பாடுதல் வல்லார். தேவாரப் பதிகங்களைப் பாடினார். திருவாசகப் பாடல்களைப் பாடினார். திருவருட் பாக்களைப் பாடினார். பகல் முதல் மாலைவரை பாடிக்கொண்டே இருந்தார்.

அப் பாடல்களிலே மூழ்கித் திளைத்தார் திரு.வி.க.

இரவு மணி 7.30. மரண வேதனையுற்றார் திரு. வி. க.

இளமை முதல் திரு. வி. க.வின் இணைபிரியா நண்பராக விளங்கிய சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் உடன் இருந்தார்கள். திரு. வி. க.வின் காதில் ஐந்தெழுத்து மந்திரம் ஓதினார்கள். அவ்வளவில் திரு. வி. க.வின் ஆவி பிரிந்தது.

இரவு மணி 7.40. இறைவனடி சேர்ந்தார் திரு. வி. க.

திரு. வி. க. இறந்த செய்தி சென்னை நகர் முழுவதும் பரவியது. அன்பர் கூட்டம் கடல் எனத் திரண்டது. சைவர் வந்தனர்; கிறிஸ்தவர் வந்தனர்; ஜைனர் வந்தனர்; பௌத்தர் வந்தனர். அரசியல் கட்சித் தலைவர் பலரும் வந்தனர்.

திரு. வி. க.வுக்கு அஞ்சலி செலுத்தினர்.

18-9-53 காலை திரு. வி. க.வின் உடல் பெரம்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சென்னைத் தொழிலாளர் சங்கத்திலே வைக்கப்பட்டது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தம் இன்பத்திலும் துன்பத்திலும் உற்ற துணையாயிருந்த ஒப்பற்ற தலைவருக்குத் தொழிலாளர் வணக்கம் செய்தனர்.

பகல் இரண்டு மணிக்கு திரு. வி.க.வின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பதினாயிரக் கணக்கான தொழிலாளர் திரு. வி. க.வின் உடலுக்கு முன்னும் பின்னுமாக அணிவகுத்து ஊர்வலமாக மயிலாப்பூர் மயானம் சென்றனர்.

திரு. வி. க. இறந்த செய்தி அறிந்த பெரியார் ஈரோட்டிலிருந்து புறப்பட்டுச் சென்னை வந்தார். மவுண்ட் ரோடில் ஊர்வலத்தில் கலந்தார். ஊர்வலம் இராயப் பேட்டை சேர்ந்தது. பெருமழை பெய்தது. இரவு 7 மணிக்கு ஊர்வலம் மயிலை மயானம் சேர்ந்தது.

திரு. வி. க.வின் உடலுக்குத் தீ மூட்டப்பட்டது.

திரு. வி. க. மறைந்தார்; மங்காத புகழ் பெற்றார்.

வாழ்க திரு. வி. க.

# 29. முடிவுரை

திரு. வி. க. பெரியவர்; மிகப் பெரியவர்; ஒப்பற்ற பெரியவர்; இருபதாம் நூற்றாண்டு தந்த இணையற்ற பெரியவர்.

நூல் பல கற்றவராக விளங்குவர் சிலர். ஆனால், தாம் கற்றனவற்றிற்கு ஏற்ப ஒழுகும் சீலம் இல்லாதவரா யிருப்பர். திரு. வி. க. வோ, நூல் பல கற்றார்; தாம் கற்ற கல்விக்கு ஏற்ப ஒழுகும் சீலராக விளங்கினார்.

> கற்கக் கசடற; கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக.

என்றார் பொய்யாமொழியார். அம்மொழியினை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகினார் திரு. வி. க.

பட்டம் பதவி ஆகியவற்றுக்கு ஒரு போதும் ஆசைப் படாதவர் திரு. வி. க. பட்டம் பதவிக்காகப் பேயாயலை கின்றவர் பலரை இந்நாளில் காண்கிறோம். பட்டம் பதவியே வாழ்வின் குறிக்கோள் என்ற கொள்கையுடன் பாடுபடுவோரையும் காண்கிறோம். பட்டம் வழங்குவோரும், பதவி நல்குவோரும் திரு. வி. க. வாய் திறந்தால், வழங்கக் காத்திருந்தனர். ஆனால் திரு. வி. க.வோ பட்டம் பதவியை வேண்டினார் அல்லர்.

'பணமே உன்னால் என்ன குணமே!' என்று பாடுவோர் பலரைக் காண்கிறோம். 'பணத்திற்கு அடிமைப்படலாகாது' என்று உபதேசம் செய்வோர் பலரையும் காண்கிறோம். ஆனால் இவர்களோ 'பணம் பணம்' என்று பித்துப் பிடித்து அலைவதும் காண்கிறோம்.

ஆனால் திரு. வி. க. ஒருநாளும் பணத்திற்கு அடிமை யானாரல்லர். பண ஆசை அவருக்கு இல்லை இல்லை என்பேன். பணம் அவரைத் தேடி வந்தபோதும், 'பணம் வேண்டாம்! வேண்டாம்' என்று உதறிய ஒப்பற்ற பெரியவர் திரு. வி. க.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த நாட்டில் தோன்றிய பெரியார்கள் அறிவுறுத்திய பொன்மொழிகளைத் தம் வாழ்வில் கடைப்பிடித்தவர் திரு. வி. க.

அன்பு, எளிமை, உயர் சிந்தனை ஆகிய மூன்றுமே வாழ்வில் போற்றத் தக்கன என்று அறிவுறுத்தினர் நமது முன்னோர்.

இம்மூன்று கொள்கைகளையும் போற்றிப் பேணியவர் திரு. வி. க. அன்பின் வடிவம். எளிமையின் உருவம். உயர் சிந்தனையின் நிலைக்களன்.

'அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்பது வள்ளுவர் மொழி.

அம்மொழியினுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கியவர் திரு. வி. க. எவ்வுயிர் மாட்டும் செந்தண்மை பூண்டு ஒழுகியவர்; உயர் அந்தணர்.

சாதி, மதம், நிறம், மொழி முதலியவற்றைக் கடந்து நின்றவர் திரு. வி. க.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற மொழியினை ஓயாது முழங்கியவர் அவர். உயிர்க் குலம் முழுவதையும் ஒன்றாகக் கருதியவர் அவர், உயிர்க் குலத்தின் நல்வாழ்வு கருதியவர். இக் கருத்தில் தோன்றியதே தம் விழுமிய கொள்கையாகிய சன்மார்க்கம்.



உலகம் சன்மார்க்க மயமாதல் வேண்டும் வேண்டும் என்று முழங்கிய பெரியார் திரு. வி. க. உலகம் சன்மார்க்கப் பொதுவுடைமை மயமாதல் உறுதி. என்றோ ஒருநாள் உலகம் முழுதும் சன்மார்க்கப் பொதுவுடைமை வழி இயங்கும். அந்நாள் வரும்போது சன்மார்க்கப் பொது வுடைமைப் பெரியார் வரிசையில் ஒருவராக விளங்குவார் திரு. வி. க. என்பது உறுதி! உறுதி! உறுதி!

வாழ்க திரு. வி. க.! வளர்க பொதுவுடைமைச் சன்மார்க்கம்!

# 30 திரு. வி. க. காலக் கண்ணாடி

1883. திரு. வி. க. பிறப்பு.

1890. துள்ளம் விட்டு இராயப்பேட்டை வருதல்.

1894. வெஸ்லி கல்லூரி நான்காம் வகுப்பில் சேர்தல். முடக்கு வாதம் வந்து படிப்பு தடைப்படுதல்.

1898. மீண்டும் வெஸ்லி கல்லூரியில் நான்காம் வகுப்பில் சேர்தல்.

1901. கதிரைவேற் பிள்ளையைக் காணல்.

1903. பாலசுப்பிரமணிய பக்தஜன சபையைத் தோற்றுவித்தல்.

1904. மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு அனுப்பப் பிரின்சிபால் தடை. கல்லூரிப் படிப்பை விடல்.

1908. ஸ்பென்சர் கம்பெனி வேலையை விடல்.

1910. ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியர்.

1912. கமலாம்பிகை திருமணம்.

1916. வெஸ்லி கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்.

1917. கோகலே மண்டபத்தில் அரசியல் கன்னிப்பேச்சு. வெஸ்லி கல்லூரி விலகல். 'தேசபக்தன்' பத்திரிகை தொடங்கல்.

1918. சென்னைத் தொழிலாளர் சங்கம் காணல். திரு. வி. க.வின் வாழ்க்கைத் துணை கமலாம்பிகை இவ்வுலகு நீத்தல்.

1919. மகாத்மாகாந்தி, திலகர் முதலியோரைச் சந்தித்தல். பெரியார் ஈ. வே. ரா. வைச் சந்தித்தல்.



1920. 'தேசபக்தன்' பத்திரிகையினின்றும் விலகல். 'நவசக்தி' தொடங்கல்.

1921. பக்கிங்காம் மில் தொழிலாளர் போராட்டம். திரு. வி. க. முன்நிற்றல். வில்லிங்டன் எச்சரிக்கை.

1924-26 காங்கிரஸ் பிரசாரம்.

1925. காஞ்சீபுரம் தமிழ் மாகாணக் காங்கிரஸ் தலைமை.

1926. காங்கிரசிலிருந்து விலகல்.

1934. வடார்க்காடு ஜில்லா போர்டு தேர்தல் திரு. வி. க. வுக்கு வெற்றி.

1943. திரு. வி. க. மணிவிழா.

1953. பூத உடல் நீத்துப் புகழ் உடல் பெற்றார்.

## திரு. வி. க. இயற்றிய சில நூல்கள்

பெரிய புராணம் (குறிப்புரையும் வசனமும்)
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
என்கடன் பணி செய்து கிடப்பதே
சைவ சமய சாரம்
நாயன்மார் திறம்
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
சைவத்தின் சமரசம்
இன்ப வாழ்வு
முருகன் அல்லது அழகு
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை
தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு
கடவுள் காட்சியும் தாயுமானாரும்
தமிழ் நூல்களில் பௌத்தம்
சைவத் திறவு
இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
நினைப்பவர் மனம்
இமயமலை அல்லது தியானம்
உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்
முருகன் அருள் வேட்டல்
சமரச சன்மார்க்க போதம்
சமரச தீபம்
சமரச சன்மார்க்கத் திறவு
தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு
சித்த மார்க்கம்
நாயன்மார் வரலாறு
முடியா? காதலா? சீர்திருத்தமா?
திருமால் அருள்வேட்டல்
திருக்குறள் விரிவுரை—பாயிரம்
திருக்குறள் விரிவுரை—இல்லறவியல்
இந்தியாவும் விடுதலையும்
பொதுமை வேட்டல்
உள்ளொளி
திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்
ஆலமும் அமுதமும்
கிறிஸ்துவின் அருள் வேட்டல்
புதுமை வேட்டல்
சிவனருள் வேட்டல்
பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி
அருகன் அருகே அல்லது விடுதலை வழி
பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்



சக்திதாசன் சுப்பிரமணியன் திரு. வி. க. அவர்களுடன் நெருங்கிப்பழகும் பேறுபெற்றவர். ஓராண்டா? ஈராண்டா? பதினாறு ஆண்டுகள்! 1936 முதல் இறுதி வரை திரு. வி. கவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். திரு. வி. க. அவர்களிடம் பயிற்சி பெற்றவர். திரு. வி. க நடத்திய ''நவசக்தி'' பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பின்னே ''நவசக்தி'' ஆசிரியப் பொறுப்பினையும் பெற்றவர். திரு. வி. க. பற்றி நூல் எழுதப் பல்லாற்றானும் தகுதி பெற்றவர். அவர் எழுதிய நூல் இது.

Wrapper Printed at Ezhil art Printers Madras-5.

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை